1214

M. 2210

வருஷ சந்தா ரு. 1-8-0

PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் 8 OCT-NOV 1931 இதழ் 11-12



தனிப்பிரதி அணா 3.

ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

JL
N24JM
N31.8.11,12
210036

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்

ரிஜிஸ்டர்டு குணத்திற்சிறந்த, பரிமளமிகுந்த,

S. V. CHARI & SONS TRIPLICANE MADRAS

சந்தனாதி தைலம்.

தேக குளிர்ச்சியும், இன்பமான வாஸனையும் தரும்,

டிரேட் மார்க். கூந்தலை வளரச்செய்யும்.

18 பலம் டின் விலை ரூ. 2-0-0 8 பலம் டின் ரூ. 1-0-0

4 பலம் டின் விலை 0-9-0.

கூந்தல் வளரச்செய்யும். கபால உஷ்ணம் தணியும்.

அற்புத அரைக்கீரைவிதை தைலம்.

கண் ஸம்மந்தமான ஸகல ரோகங்களை நிவர்த்தித்து தேக குளிர்ச்சியை அபரிதமாய்கொடுத்து கூந்தலையும் செழிப்பாய் வளரச்செய்யும். சொரி, தேமல், படை முதலியவைகளும் இத்தைலத்தை தடவினவுடன் மறைந்து விடும். மனோல்லாசமான மணம் கொடுக்கும்.

10 பலம் டின் விலை ரூ. 1-8-0. 6½ பலம் டின் விலை ரூ. 1-0-0.

3¼ பலம் டின் விலை ரூ. 0-9-0.

இவையன்றி எங்களிடம் அசல் புனுகு, ஜவ்வாது, அரகஜா, உயர்ந்த பன்னீர், பரிமள கலவைச்சந்தனம், வாசனையுகந்த சுகந்த சுண்ணாம்பு, சந்தனப்பவுடர், தசாங்கம், சிக்னப்பொடி, குல்குந்து, அத்தர் பில்லைகள் உயர்ந்தவத்தி தினுசுகளும் கிடைக்கும்.

நமது கிரய ஜப்தா இனாம்.

ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் உண்டு.

எஸ். வி. சாரி அண்டு ஸன்ஸ்,

71, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

ஜோதிஷம்.

ஜாதக நகலாவது, லெட்டர் எழுதும் நேரமாவது எழுதியனுப்பினால் உங்கள் எதிர் காலபலன்களை உள்ளபடி எழுதியனுப்பப்படும். 1 முதல் 4 கேள்விகள் ரூபா 1, ஒரு வருஷப்பலன் (மாதவாரியாய்) எழுத ரூபா 2, நினைத்த காரியம் சித்தியாக நவகிரக கவசம் ரூபா 3, பிசகான ஜாதகங்களுக்கு இலவசமாய் கிரஹஸ் புடம், லக்னஸ் புடம், செய்து பலன்களை எழுதப்படும். ஆயுஸ் வரையில் பலன்களுக்கும் இதர விஷயங்களுக்கும் சார்ஜுகளுக்கு எழுதி தெரிவித்துக்கொள்ளவும்

S. வெங்கடேச சாஸ்திரிகள்.

Sarada Astrological Bureau,

மஞ்சப்புத்தூர் விரியூர் *P. O*

Via Tirukoilur. S. I. R.

முக்கிய அறிவிப்பு.

(1) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(2) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

நளினசேகரன்

அல்லது

செருக்கொழிந்த சீமாட்டி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியது.

3 - DEC 1931

பிரசுராலயம்;

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித்தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] 1931 விலை அணா. 8.

சென்னை 600 008

PRINTED AT
THE TATA PRESS,
5, THAMBU CHETTY ST.,
G. T. MADRAS.

3 - DEC 1931

உ

ஸ்ரீ

நளினசேகரன்

அல்லது

செருக்காலழிந்த சீமாட்டி

கலைமகள் துதி.

நளினத்தே உவந்து வாழும் நான்முகன் நாவில் தங்கும்
நளின லோசனியே! எந்தன் நாவினில் வீற்றி ருப்பாய்
நளினமா ஆடை சூழும் நானிலத்து எவரும் கண்டு
நளின சேகரன்தன் காதை நலமுற மகிழ்ந்து போற்ற.

விநாயகர் துதி.

ஆனை முகத்தோன் அகத்தே நிலவ!
ஞானத் திறலான் நளின சேகரன்தன்
ஊனமில் காதை உலகோர் போற்ற
ஈனமி லாமல் எழுதவன் யானே!

1—வது அதிகாரம்.

தனத்தின் செருக்கு—மனத்தில் மூடு பனி

210036

"ஆகா! உலகம் போற்றும் உத்தமனின் மகிமையை என்னென்பது? சாமான்யமான மனிதவர்க்கத்தில் சார்ந்தவரா இம்மகானுபாவன்! அல்ல; அல்ல: தெய்வாம்சம் ததும்பப்பெற்றத் தியாகமூர்த்தி: ஏழைகளுக்கே உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்த ஏழைப் பங்கா

மங்களகரமான மாலைகோரமும் எங்கும் பிரகாசமான தீப ஜோதியும் மனத்திற்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கின்றன. லக்ஷ்மீ கடாக்ஷமும் அக்கோத்தில்தான் தாண்டவமாடுகிறது.

ஸன். சாந்த ஸ்வரூபன். சகலராலும் போற்றப்படும் சத்யாவதா ரன். என்னப்பனே! காந்தி வள்ளலே! கருணை அரசே! இந்தியா வின் அடிமைமையை நீக்கும் பொருட்டு அந்தமாய் ஜெனித்த அவதார புருஷனே! பாரதத் தாயின் பிரதமக் குழந்தையே! நின் புகழ்தான் என்னே! நின் மன உறுதிதான் என்னே! உண்ணுவிரதமிருந்து நாட்டிற்குக் கண்ணுய் உழைக்கும் கண்ணியந்தான் என்னே! ஆஹா! அகிலம் போற்றும் அன்பனே! உனது நாமத்தை உச்சரித்தால் என்னுள்ளம் மிகவும் விசனமற்றுச் சலனமற்றுச் சந்தோஷத்தை அடைகின்றது. அன்பு வெள்ளத்தையும், ஜீவகாருண்யத்தை யுமே ஆதாரமாகக்கொண்டு ஜெனித்துள்ள காந்தியடிகளை தூஷிப் பதும், அவரது அனுஷ்டானத்தைப் பின்பற்றுகின்ற தொண் டர்களைத் தூஷித்து ஏசிப் பரிகசிப்பதுமாகச் சில மனிதர்க ளிருக்கின்றார்களே! இவர்களை எல்லாம் மனித கோஷ்டியில் சேர்த் துப் பதில் கூறுவதா! அன்றி மிருகம் என்று எண்ணி வாளா விட்டு விடுவதா என்று தெரியவில்லை: அந்தத் தியாகமூர்த்தியின் கொள்கை சகலமான மனிதர்களுக்கும் பொதுவாக நன்மையை அளிக்கக்கூடியதாக இருப்பதை ஏன் சிலர் கவனிக்கவில்லை. தன் உடலைத் தான் கவனியாது தேசத்திற்கே உழைக்க அர்ப்பணம் செய்துவிட்டார். நவகோடி நாராயணன் என்று தாராளமாகக் கூறக் கூடிய செல்வவந்தனுயிருந்தும் அதை அவர் நாட்டிற்கே அர்ப்பணம் செய்துவிட்டார். உடல், பொருள், ஆவி என்பார்கள். அந்த விதமே இரண்டும் தத்தமாயின. தேச சேவையே தெய்வ சேவை என்று உழைத்துவரும் உத்தமனின் போக்கை எல்லா ஜனங்களும் கைப் பற்றினல் எத்தனை ஆகத்தமாகச் சுதந்திர தேவியை அடையலாம். எல்லாம் வல்ல இறைவா! பாரதமாதா! அகிலலோகரக்ஷகி! ஆதி பரா சக்தி! அம்பிகே! காந்தியின் கொள்கையின் நன்மையை அறியாத வர்களுக்கு அந்த அற்புத உணர்ச்சியை அளித்துக் காக்க மாட் டாயா? அவர்களுக்குச் சுதந்திர தாகம் எடுத்து நாட்டிற் குழைக்க வரமருளமாட்டாயா! ஆகா! அந்தத் தியாகமூர்த்தியின் அருமை

கணவனிடத்தில் உண்மையான அன்பு இருக்கும் மனைவியாயின் அவன் மனம் கோக, வயிறு வேக ஒருபோதும் நடக்கமாட்டாள். அன்பற்ற தன்மையே அலக்ஷியம் செய்யும்படி யாக்கிவிடுகின்றது.

யான உபன்யாசத்தைக் கேட்ட பிறகு மனம் என்ன தத்தளிக்கின்றது. 'அந்தப் புண்ணியமூர்த்தியின் பின்னே சென்றுவிடலாமா!' என்று மனம் விரும்புகின்றதே! கடற்கரையில் கூடியிருந்த கூட்டமோ சுமார் லக்ஷமென்றுதான் கூறவேண்டும். அத்தனை ஜனங்களின் மனம் ஏக காலத்தில் திரும்பி எல்லோரும் கதரணியத் துவக்கிவிட்டால் நாம் இந்த ஆண்டுக்குள்ளாகவே சுதந்திரம் பெற்று விடலாமே! என் மனம் என் வசமின்றி நேற்றுமுதல் அந்தப் புண்ணிய மூர்த்தியின் வடிவத்திலேயே ஐக்கியமாகி விட்டதே! ஆகா! அத்தகைய தியாக மூர்த்தி இந்த சென்னைமா நகருக்கு விஜயம் செய்யவும், கடற்கரையில் பேசவும் பாக்கியம் கிடைத்தது நமது ஓர் புண்ணியவசந்தான். அந்தத் தியாக மூர்த்தியைத் தன் வீட்டிலேயே இறங்கச் செய்து சதா கூடவிருந்து ஆனந்தத்தை அனுபவிக்கும் பெரியாரின் பாக்கியமே பாக்கியம். ஏன்? மறைவிடமென்ன! காங்கிரஸ் விஷயமாகப் பாடுபடும் ஸ்ரீமான் S. ஸ்ரீனிவாஸ ஐயங்காரின் பாக்கியமே பாக்கியம். அந்த பாக்கியம் எனக்குக் கிடைக்குமா! கிடைக்காது; கிடைக்காது. நான் மகா பாவி! இந்தியாவே அடிமை! அதன் மக்கள் முற்றும் அடிமை என்பதோடே, நான் கேவலம் அடிமையிலும் அடிமை! ஐயோ! எனக்கு இத்தகைய உபத்திரவங்களைச் சிறிய வயதில் ஏன் செய்வித்தார்கள். நான் தாராளமாகப் பிரம்மச்சாரி ஆசிரமத்தை அனுஷ்டித்துக்கொண்டு மகாத்மாவின் பாத சேவையைச் செய்து சுகிப்பேனே! என் விதி எல்லா விஷயத்திலும் கெட்டு விட்டதே! என்ன செய்வேன்?" என்று கூறவியலாத பரம வேதனையும், மனக்கொதிப்பும், வெறுப்பும் அடைந்து மேற் குறித்தவாறு யோசனை செய்த வண்ணம் சுமார் 20 வயது மதிக்கக்கூடிய கட்டழகன்—காண்போர் மனத்தைக் கவரத்தக்க எழில் வாய்ந்த ரூபலாவண்யன்—நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

கணவன் ஓடி ஆடி சம்பாதித்த நாளில் தனக்கென்று நாலு காசு மிச்சம் செய்ய அறியாது பலருக்கும் வாரி இறைத்துவிட்டுக் கடைசியில் தன் குழந்தைகளுக்கும் தனக்கும் ஒத்தைக் காசுக்குச் சித்தம் சிதறுவதோடு, அந்திம திசையிலுள்ள கணவனை இகழ்வதும் திட்டுவதுமாகிவிடுகிறது சில குடும்பங்களில்.

அத் தருணத்தில் சுமார் 18 வயது மதிக்கக் கூடிய ஓர் வனிதை தடபுடலான ஆடம்பர அலங்காரத்துடன் நூறு ரூபாய் மதிப்புள்ள தகத்தகாயமான பட்டாடை அணிந்து கொண்டு, தான் என்கிற பெரும் மமதை முகத்தில் தாண்டவமாட, செல்வச் செருக்கின் தன்மை கண்களில் ஜொலிக்க, பெருத்த அட்டகாசத்துடன் அங்கு வந்தாள். அந்தப் பெண்மணி அங்கு வந்ததைச் சற்றும் அறியாத குலசேகரன் என்கிற இளைஞன் தன்னை மறந்து சுதந்திர தாகத்திலீடுபட்டுக் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அங்கு வந்த பெண்தேவதை அவ்விடத்தில் போடப் பட்டிருந்த கட்டிலிலுள்ள மெத்தைத் தலையணைகள், சோபாவின் உறைகள், படுக்கை விரிப்பு, சவுக்கங்கள், கோட்டு ஸ்டாண்டில் மாட்டப்பட்டுள்ள இதர துணிகள், குலசேகரன் தரித்துள்ள துணிகள் முதலிய எல்லாவற்றையும் ஒரு முறை நோக்கினாள். அவ்வளவுதான் வந்து விட்டது சீற்றம். கண்கள் சிவக்க அவைகளைத் தாறுமாறாக இழுத்துப் பார்த்தாள். கோபத்துடன் வாலிபனருகில் வந்து "ஐயோ! அக்ரமமே! இதென்ன கண்ராவித் துணிகள்! இந்த எழவெடுத்தக் கோணிச் சாக்குப்போன்ற கதர்த் துணியைக் கண்டால் நானும் என் பெற்றோரும் விஷமென மதிக்கக் கூடியதென்பதை நீங்களறியவில்லையா! அதை மறந்து இப்பாழும் துணிகளை ஏன் வாங்கினீர்கள்? திடீரென்று வீடெல்லாம் கதர் மயமாகிவிட்டதே! இதை என் தாயும் தந்தையும் கண்டால் நீர் என்ன கதியை அடைவீர்? இன்று காலையில் நான் கேள்வியுற்ற சகல விஷயங்களும் சரி என்று இப்போது தான் தெரிகின்றது. நீங்களும், இன்னும் உங்களைப் போன்ற பிச்சைக்காரப் பயல்கள் சிலரும் வீதி வீதியாகப் பக்கிரிகளைப்போல பாடிக் கொண்டும், பிச்சை எடுத்துக் கொண்டும் சென்று சீமைத் துணியை ஆங்காங்கு சேகரித்து நடு வீதியில் தீயிட்டுப் பொசுக்கியதாகக் கேள்வியுற்று அப்போதிலிருந்து நான் அடையும் விசனம் கொஞ்ச நஞ்சமன்று. என் மனம் தவிக்கும் தவிப்பும், அடையும் அவமானமும்

கணவனின் கஷ்டம் மனைவிக்கே தெரியாவிடின் அவன் கஷ்டத்தை யாரிடம் முறையிட்டால்தான் தீரும். ஒரு முடிவில் சவமான பிறகு தானே தீர்ந்துவிடும்.

எனக்குத் தான் தெரியும். இத்தகைய பிச்சைக்காரப் புத்தி உங்களை விட்டு என்று தான் போகும்? இந்த சனியன் பிடித்தத் துணிகளை எல்லாம் கண்ணால் காணவும் பிடிக்கவில்லை........அது கிடக்கட்டும். என் பிதாவின் மனத்தைக் கசக்கி வருத்துவதையே நீங்கள் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறீர்கள். இந்த உதவியற்றத் துணியை வாங்குதற்கு உமக்குப் பணம் ஏது? அதற்கு எங்கே பிச்சை எடுத்தீர்....அல்லது அதை எங்கேனும் களவாடினீரோ! ஏனெனில் இந்த அற்ப புத்தி உமக்கு வெகு சுலபத்தில் வந்துவிடும். எப்படியெனில் ஆதிமுதல் காலணாவாக நான்கு காசு சேர்ந்தார்ப் போலக் கண்டறியாத தரித்திரரல்லவா நீர்! ஆகையினால் இந்த எழவு துணிகளை வாங்கத் திருடினாலும் திருடி இருப்பீர் என்று நான் தாராளமாகக் கூறுவேன்" என்று அந்தப் பெண் தேவதை கர்ஜனையுடன் சொல்லியதைக் கேட்ட குலசேகரனுக்கு மனம் தத்தளித்து விட்டது. இன்னதென்று விவரிக்கக் கூடாத விசனமும் மனவெழுச்சியும் உண்டாகிவிட்டது. அவன் மெய்ம்மறந்து உட்கார்ந்திருப்பினும் இந்த மாதின் உக்ரகமான—கர்ண கடூரமான—மொழிகளின் கடைசி பாகத்திய வார்த்தைகள் செவியில் பட்ட மாத்திரத்தில் அவன் அதற்குமேல் பேசாதிருக்கமாட்டாது தன்னிருப்பிடம் விட்டு எழுந்து, "ஹா! நீலா! என்ன வார்த்தை சொன்னாய்? அனேக நாட்களாக நீ என்னிடம் அருவருப்பையே காட்டி வருகிறாய் எனினும் இன்று என் மனத்தைப் பிளக்கத்தக்க வார்த்தைகளைக் கூற உன் மனந் துணிந்ததா! அந்தோ! நானா திருடன்! காங்கிரஸ் கூட்டத்தினர்களா திருடர்கள்! வேண்டாம்; இத்தகைய தூஷணையைக் கூறவேண்டாம் நீலா! நான் உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். உன் மனத்திற்குத் தற்போது நான் மிகவும் வெறுத்த வேம்பு போலக் கசந்திருக்கிறேன். என்னை நீ கூறுவதால் என் மனம் நோகவில்லை. என்னை யார் என்ன சொல்லியபோதிலும் நான் சகிப்பேன்; தேசத்தின் பொது நலத்திற்காகப் பாடும் படும் தேசத் தொண்டர்களையும், புனிதமான காங்கிரஸ்

ஒருவன் வேலைசெய்யச் சக்தியற்று வீட்டில் உட்கார்ந்துவிட்ட பின்னர் வேலைசெய்து சம்பாதிக்கவில்லை" என்று மக்களும் மனைவியும் அவனை இம்சித்தால் அவன் மனம் எவ்விதமிருக்கும்?

மகா சபையையும் தூஷித்தால் அது என்னைக் கொலை செய்வது போல விருக்கிறது. அவ்வாறு பேசாதே நீலா! நீ என்னை வெறுத்தால் அம்மட்டுடன் என்னை உன் மனம் போனபடிக்குத் திட்டு; நான் சாந்தமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். என் பொருட்டாகக் காங்கிரஸையும் மற்றத் தொண்டர்களையும் தூஷிக்காதே!" என்று வெகு பணிவாகக் கூறினான்.

இது கேட்ட நீலா "போதும் உங்கள் உபன்யாஸத்தை நிறுத்துங்கள். என்னிடம் உங்கள் பெருமையைப் பற்றிக் கூறவேண்டாம். காங்கிரஸும், தொண்டர்களின் செய்கையும் வெகு கண்ணிய முடையதுதான். எதற்காக வீண் பேச்சில் பொழுதைக் கழிக்கின்றது? இந்த கோணி சாக்குகளை வாங்குவதற்கு உங்களுக்கு உண்மையில் பணம் இல்லை என்பது எனக்குத் தெரியாதா! காலணா அரையணா முதலிய சில்லரைச் செலவுக்கெல்லாம் பிச்சைக்காசு நான் கொடுக்காவிட்டால் உமது பவிஷு தெரியாதா! பிறந்தகத்தின் பெருமையை உடன்பிறந்தானிடம் சோல்வது போல உமது க்ஷவரத்திற்கு முதற்கொண்டு நான் காசு பிச்சை யிடுவதை நான் மறந்தேனா! நான் மட்டுமா! என் வம்சமே மறக்காது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளும். என் தந்தையின் கௌரவத்திற்கும் உம்முடைய பிச்சைக்காரத் தன்மைக்கும் வருந்தி வருந்தி எனக்கும், என் பிதா, மாதா முதலியோருக்கும் கண்ணே கலங்கிப்போய்விட்டது. எங்கள் பாவமே அஷ்ட தரித்திரமாகிய உம்மைக் கொண்டுவந்து எங்கள் காலில் கட்டியது. சரிக்குச் சரியான சம்மந்தமாயின் எத்தனை மேன்மையாயிருக்கும். "நாம் சரிக்குச் சரியாக இல்லையே; அவர் வீட்டு வேலைக்காரன்போல அடங்கி ஒடுங்கி பயபக்தி வினயத்துடன் பூச்சிபோலக் கிடப்போம்" என்று இராமல் என் தந்தைக்கும், என் குலத்திற்குமே பெருத்த அவமானத்தை விளைவிக்கும் காரியத்தைச் செய்வதுடன், வம்பும் பேசுவதற்கு உங்களுக்குத்

ஒருவருக்கு ஏதோ கொடிய வியாதி இருப்பதைக் கண்ணால் கண்டுகொண்டே இருப்பினும் அதைப்பற்றிப் பேசுவதற்கு நடுக்கலுண்டாகின்றது. ஆனால், கண்ணால் காணாதவற்றைக் கண்டதாகச் சிலர் கூறி எவ்வித மோசத்தையும் செய்கிறார்கள்.

தைரியம் பிறந்துவிட்டதா! என்னை நீர் என்னவென்று நினைத்தீர்?.... ....சாமான்யமான உலகத்தவர் நினைப்பதுபோல இலேசில் மனைவியாக நினைத்துவிடவேண்டாம். நான் ஓர் மிராசுதாரரின் செல்வப் புதல்வி என்பதை மறக்காதீர். ஏன் பேசாமடந்தைபோல இருக்கிறீர்? பணம் உமக்கு ஏது என்பதை நானறியாமல் போகப் போவதில்லை." என்றாள்.

இந்த ஈட்டிக் குத்து போன்ற வார்த்தைகளைக் கேட்கக் கேட்க நமது இளவலின் மனம் செக்குவிட்டு உருகிப் பாகாய் ஓடத் தலைப்பட்டது. "நாம் தற்போது என்ன நிலைமையில் இருக்கின்றோம்" என்பதை வெகு எளிதில் தெரிந்து கொண்டான். கண்களில் கடல் மடல் திறந்துவிடப் பட்டதுபோல நீர் பெருக வாரம்பித்தது. தன் பிறவியை எண்ணித் தன்னையே தான் நொந்து கொண்டான். அந்தப் பெண்ணிற்குப் பதில் பேசவும் நாவெழாது குழம்பிப் போய் விட்டான். ஆ! என்ன காலக் கொடுமை!

" கல்லானே யானாலும் கைப்பொரு ளொன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர் கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லா தவன் வாயிற் சொல் —நல்வழி.

என்ற பாடலின் நினைவு அவன் மனத்தில் தாண்டவமாடத் தொடங்கியது. தன்னைத் தான் ஒருவாறு தேற்றிக் கொண்டு அவள் முகத்தை நோக்காது பூமியை நோக்கியபடியே பேசத் தொடங்கி, "நீலா! நான் என்னிலைமையை அறிந்திருக்கிறேன். இன்று எனக்குப் புதிதல்ல. என்னுடைய மனம் படும்பாடு சர்வேச்வரன் தான் அறியவேண்டும்; மனிதருக்குத் தெரியும் காலமல்ல. உனக்குத் தக்க வரன் நானல்லவென்பதை நீ கூறிய பிறகா தெரியவேண்டும்; கருமமேலேயே நன்றாகத் தெரியும்" என்று மேலே ஏதேதோ

மாமி வீட்டாரும், கணவனும் அன்பாயும் நிரம்பவும் பக்ஷமாயும் நடத்துகின்ற வீட்டில் மனைவிக்கு இருப்பதற்குக் கேடு வருகின்றது. மேற்படி இரண்டும் சூனியமான விடமாயினும் மாமி வீட்டில் கணவனுடனேயே இருக்க வேண்டுமென்று பிரியப்படும் உத்தம மனைவிகளும் இருக்கிறார்கள்.

பேச வாயெடுப்பதற்குள் தூபம் போட்ட பைசாசம் போல நீலா கிளம்பி "ஓகோ! இந்த தக்கடா, புக்கடா பேச்சு என்னிடம் வேண்டாம். ஹா! இப்போது உமக்குப் பணம் கிடைத்த வழியை அறிந்தேன். உங்கள் கையிலிருந்த தங்கச் சங்கிலியைக் காணவில்லை; அதற்குப் பதில் பட்டையைக் கடியாரத்தில் கட்டி இருக்கின்றீர்கள் என் பிதா உங்களுக்குச் செய்து போட்டச் சங்கிலியை நீர் எப்படி விற்கலாம்? அதை விற்றல்லவா இந்த ஆஷாடக் கந்தைக் குப்பைகளை வாங்கிக்கொண்டு வந்துவிட்டதை இப்போது அறிந்துவிட்டேன். எங்கள் பொருளை விற்கவும் வைக்கவும் கூட உமக்குத் தைரியம் பிறந்துவிட்டதா! பேஷ்; இதுகாறும் இந்த பெரியதனம் இல்லாமலிருந்தது. இப்போது அதுவும் விருத்தியாகிவிட்டதா! இருக்கட்டும்......அம்மா! அம்மா! அம்மா!" என்று தன் தாயைக் கூப்பிட்டாள்.

உடனே குஞ்சரி என்ற அந்தம்மாள் வந்தாள். உண்மையில் குஞ்சரி என்கிற பெயர் அவளுக்கு மிக்க பொருத்தமாகவே அவள் பெற்றோர்கள் வைத்தார்கள். யானையைப் பார்த்தால் அந்தம்மாளைப் பார்க்கவேண்டாம். ஆனால் துதிக்கை யொன்று குறைவு பட்டுவிட்டது. மற்ற விதத்தில் யானையுடன் போட்டி போடவே முன்வருவதற்குத் தயாராக விருந்தாள். அத்தகைய குஞ்சரி 'ஏனடி நீலா! ஏன் இப்பிச்சைக்காரப் பயலுக்கு ஏதேனும் காசு வேண்டுமோ! அப்பப்பா! உலகத்தில் எத்தனையோ பெயர்களை நான் பார்த்திருக்கிறேன். இவனைப்போலப் பனாதைப் பயலை, பிச்சைக்காரப் பயலை, தம்பிடிக்கு வக்கற்ற தண்ட சோற்றுப் பயலை நான் கண்ணாலும் கண்டதில்லை; காதாலும் கேட்டதில்லை. என்ன வேண்டுமாம். நீ ஒருத்தி அகப்பட்டாய் சிபார்சு செய்வதற்கு. என்ன பாபம் செய்தோ நீ இவ்வுலகில் பிறந்தாய். உன்னழகிற்கும் ஐச்வர்யத்திற்கும், அந்தஸ்திற்கும், ஆடம்பர வாழ்க்கையின்

வெயிலின் வெப்பத்தில் அடிக்கும் நெருப்புக் காற்றும் பொறாமை கொண்டவர்களின் மூகத்தடியும் ஒன்றாகவே இருக்கிறது. ஒன்று தேகத்திற்கு உஷ்ணம்; மற்றொன்று மனத்திற்கே உஷ்ணம்.

மேம்பாட்டிற்கும் நேர் விரோதமாய் வந்து சேர்ந்ததே! என் வயிறு செய்த பாக்கியம்! யாரைச்சொல்லி என்ன பயன்?" என்றாள்.

நீலா:—அம்மா! பிச்சை வாங்குவதோடு நிற்கவில்லை. இதோ கையில தங்க சங்கிலி எங்கே போயிற்று பார். அதை விற்று இப்பாழும் எழவெடுத்த கதர்த் துணிகளை வாங்கிக்கொண்டு வந்திருக்கிற வயிற்றெரிச்சலைப் பாரம்மா.

குஞ்சரி:—என்ன! என்ன! நான் செய்துபோட்ட தங்கச் சங்கிலியையா விற்றான். ஏனடா, குலசேகரா! இந்த தைரியமும் வந்துவிட்டதா! உன் மாமா கண்டால் என்ன சொல்லுவார் என்ற பயத்தை எங்கே மறந்தாய். அனாதையாய் விட்டுவிட்டு இறந்து விட்டாளே என்கிற ஓர் பாசத்தினால் உனது தரித்திரத்தையும் பாராது வீட்டில் வைத்து வளர்த்துத் தன் பெண்ணையும் கட்டிக் கொடுத்த தாய் மாமனுக்கு இதுதான் மரியாதையோ! பேஷ்! சங்கிலியை விற்பதற்கு உனக்கு என்ன அதிகார மிருக்கிறது. நீ எந்த நிலைமையில் இருக்கிறாய் என்பதை அடியோடு மறந்து இவ் விதமான வேலைகளையும் செய்யத் தொடங்கிவிட்டாயோ! இந்த சனியன் பிடித்தத் துணியை வாங்கவேண்டாமென்று உன் மாமன் எத்தனை தரம் கூறி இருக்கிறார். அதைக் கவனியாது இவ்விதம் செய்கிறாயே! உன்னிடத்தில் அவருக்குப் பற்றுதல் உண்டாக வேண்டுமாயின் அவருக்கு அடிமை போலல்லவா நீ நடக்க வேண்டும்.

குலசேகரன்:—(கண்ணீர் பெருக) மாமீ! நான் இவ்வுலகத்தில் எல்லோருக்கும் பெரும் அடிமையே. நான் ஒருவருக்கும் எஜமான னல்ல. அந்த வீண் ஜம்பமும் எனக்கு வேண்டாம். எனக்கென்று நீங்கள் அளித்துவிட்ட பொருளை நான் என்னிஷ்டம் போல எனது உபயோகத்திற்குச் செய்துகொள்ளலாம் என்ற ஓர் எண்ணத் தினால் நான் என் கையில் அனாவசியமாயிருந்த அந்தச் சங்கிலியை

ஒரு கல்யாணத்தைக் கூட்டிவைப்பதற்குப் பத்துபேர் சேர்ந்தாலும் ஆவது கஷ்டமாயிருக்கிறது. கலைப்பதற்கு ஒருவர் முனைந்தால் உடனே நின்று விடுகின்றது.

விற்றது உண்மையே! எனக்கென அளித்த பொருளை நான் என்ன செய்தாலும் சட்டப்படிக்குக் கூட குற்றமில்லை என்பதை அறிந்து, நான் அது வீணாக விருப்பதை எண்ணி எனக்கு வேண்டிய பொருளை வாங்கிக்கொண்டேன். என் பவிஷுக்குத் தங்கச் சங்கிலியும் வேண்டுமோ என்பதே எனது எண்ணம். மாமீ! நீங்கள் என்னை எடுத்து வளர்த்து ஆயிரம் பாடுகளையும் பட்டதை நான் என்றும் மறக்கமாட்டேன். அதனாலேயே நான் இது பரியந்தம் சகலமானவற்றையும் பொறுத்துக்கொண்டிருக்கிறேன். உங்கள் அடிமையாக நான் இருக்கின்றேனே யொழிய வேறு ஹோதாவில் நான் இல்லை." என்று கூறி முடிப்பதற்குள் குஞ்சரியம்மாள் ஆவேசங்கொண்டு பேசத் தொடங்கி "என்ன சொன்னாய்! உனக்குக் கொடுத்த பொருளை நீ உன்னிஷ்டப்படிக்குச் செலவு செய்யலாமா! இது யார் செய்த சட்ட திட்டமப்பா! உனக்கென்று நாங்கள் கொடுத்த பொருளை நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்று எண்ணி முதலில் சங்கிலியைக் கொடுத்தாயிற்று. இனிமேல் கடுக்கன், மோதிரங்கள், பொத்தான், கடியாரம், பட்டு, பீதாம்பரங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், மனைவி எல்லாவற்றையும் ஒழித்துவிட வழி தேடுகின்றாயா! பேஷ். உன்னிஷ்டப்படிக்கு அறுத்துக்கொண்டு ஆடுவதற்கு உன்னை விட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பவர்கள் நாங்களல்ல. உன்னிஷ்டம் போல உன் பொருளைச் செய்வதற்கு நீ சம அந்தஸ்து உள்ளவனாக இருக்கின்றாயோ! உன் பவிஷுக்கு வெட்கங்கெட்டு, மார் தட்டியுமா பேசுகின்றாய்? உன்னைப் போன்ற நிலைமையில் உள்ளவர்கள் எப்படி நாய் போல விழுந்து கிடப்பார்கள் என்பதை நினைத்துப்பார். உனக்கு இத்தனை வீண் அட்டகாலம் எதற்கு?" என்று கேட்கும்போதே குலசேகரனின் மனவேதனை முன்னிலும் பன்மடங்கு அதிகரித்து அவனால் தாங்க வியலாது கரை புரண்டு அபாரமாய்ப் பொங்கிவிட்டது. அவன் நொந்த மனத்துடன் தன் பெட்டியைத் திறந்து அதில் வைத்திருந்த கடுக்கன், மோதிரங்கள், தங்க பொத்தான்கள், பட்டுப்

பார்ப்பதற்கு மிகவும் சாதுபோலும், யோக்யம்போலும் இருப்பவர்கள் உள்ளுக்குள் பெருச்சாளி சாங்கம் செய்வதுபோல வேலை செய்துவிடுகிறார்கள். இது சாமர்த்தியக் கொள்ளிகளின் வேலை.

பீதாம்பரங்கள் முதலிய சகலமானவற்றையும் எடுத்து குஞ்சரியம்
மாளின் பாதத் தடியில் வைத்து "மாமீ! இவைகளை நான் என்
றைக்கோ உங்களிடம் சேர்த்துவிட நினைத்தேன். ஆனால் அப்படிச்
செய்ய என் மனம் பயந்தது. ஏனெனில் அதற்காக நீங்களும்,
மாமாவும் என்ன கோபித்துக்கொள்வீர்களோ என்று அஞ்சினேன்.
இன்றே அதற்கு நற்காலம் பிறந்தது. உங்கள் வீட்டு அடிமை
நாய்க்கு இந்த அகங்காரப் படாடோபம் வேண்டாம் என்பதே என்
கருத்து. அதோடு நான் சத்யாக்ரஹி. எனக்கு ஆடம்பரமே அனு
வசியம். இவைகளை எடுத்து வையுங்கள். சங்கிலி விஷயத்தில் நான்
செய்த தவறுக்கு மன்னிக்கவேண்டும். நான் இனி எப்படி நடக்க
வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டேன். மாமி! நமஸ்காரம்.
என்னை க்ஷமிக்கவும்." என்று அவளுக்கு ஆத்திரம் உண்டாகும்
படியாக எதுவும் பேசாமல் சாந்தமாகவே பதிலைக் கூறித் தன்
மனத்திலேயே சகலமான துக்கத்தையும் அடக்கிக்கொண்டான்.
காந்தியினுடைய சாத்விகத்தை வகித்துத் தன்னுள் எழுந்த சீற்றத்
தைப் பெட்டிப் பாம்பாக்கிவிட்டான்.

நகைகளை எல்லாம் எடுத்து வைத்த மாத்திரத்தில் நீலா
தனது வேலைக்காரனை உடனே அழைத்து அவைகளைப் பெட்டி
யோடு எடுத்துச் சென்று தன்னறையில் வைக்கும்படியாகக் கூறி
னாள். அப்படியே பெட்டி போய் விட்டது. தாயும் மகளும்
ஒன்றாகச் சேர்ந்து குலசேகரனை விழித்து ஒரு பார்வை பார்த்து
விட்டுப் பின் கதர்த் துணிகளை எல்லாம் கடாக்ஷித்தார்கள். குஞ்சரி
யம்மாள் வெகு ஆத்திரத்தோடு பேசத் தொடங்கி "என் பணம்
போனால் பீடை போயிற்று. இந்த கண்றாவித் துணிகளை இப்
போதே கொளுத்திவிடுகிறேன். உன் உடையையும், இந்த கோர
மான குல்லாவையும் எடுத்துக கீழே எறி. எல்லாவற்றையும்
பொசக்கிவிட்டு வேறு உடைகளையும் மற்றத் துணிகளையும் வாங்கித்
தருகிறேன். இங்கு வந்து யாரேனும் பார்ப்பார்களானால் எங்கள்

வெகு பிரியமாகப் பேசி நடித்துவிட்டு முக்கியமான காரியத்தைச் சாதித்
துக்கொண்டுபோகும் தந்திரப் பேர்வழிகள் அநந்தம். அவர்களை நம்புவது
வெகு எளிதில் ஆய்விடுகின்றது.

கௌரவம் குலைந்துவிடும்.'' என்று கூறிக்கொண்டே மட மட வென்று சகலமான கதர்த் துணிகளையும் எடுத்து ஒரே போராகக் குவித்து வத்தியைக் கீறிவிட்டாள். இமைப்பொழுதில் நடந்த இக் காட்சியைக் கண்டு மனம் பதறிய குலசேகரன் அதற்குமேல் தன் மனந் தாங்காது "ஆ! மாமீ! மாமீ! வேண்டாம். என்னுயிரினும் இனிய கதர்த் துணிகளைக் கொளுத்த வேண்டாம். என்மீதுள்ள வெறுப்பினால் துல்லியமான—புனிதமான—கதரைத் தீக்கிரையாக்க வேண்டாம். இதை அங்ஙனம் செய்வதைவிட என்னையே தீயிட்டுப் பொசுக்கி விடுங்கள். ஆயிரக் கணக்கான ஏழைகளின் பசியை ஆற்றிக் கஞ்சி வார்க்கக் கூடிய இக் கதரை வீணாகக் கொளுத்த வேண்டாம். ஏழைகளை ஒரு நிமிட நேரம் மனத்தில் நினைத்துப் பார்த்தால் உங்கள் மனம் இத்தகைய பாதகத்தைச் செய்வதற்குத் துணியாது. மாமீ! நீலா! உங்களுடைய செல்வச் செருக்கினால் கஞ்சிக்கின்றிப் பஞ்சாகப் பறக்கும் ஏழைகளைப்பற்றி விவர மறியாதிருக்கின்றீர்கள். அந்தோ! ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்றார் பெரியார். அவர்களின் வயிற்றில் மண்ணடித்து நீங்கள் பாலுஞ் சோறுமாகவும், பழவகைகளாகவும், பக்ஷண பலகாரங்களாகவும் புசிப்பது தருமமா! கடவுளுக்குத் தான் அது பொறுக்குமா! நீங்கள் உதவியைச் செய்யாவிடினும் உதவி செய்யும் உத்தமக் கதரை தூற்றித் தீக்கிரையாக்க வேண்டாம்'' என்று கூறி அந்தத் துணிக் குவியலின் மத்தியில் சென்று அவைகளை இரு கரங்களினாலும் வாரி அணைத்துக் கண்ணீர் தாரையாபோட நின்றான்.

குஞ்ச:—அடேய் இத்தனை துணிபு வந்து விட்டதா! கஞ்சிக்குப் பறக்கும் பஞ்சையின் விஷயம் பெரிய பஞ்சைப் பனாதையாகிய உனக்குத் தான் தெரிய வேண்டும். லக்ஷத்தில் துளையும்

வாய் கூசாது ஒரு வார்த்தையைக் கூறிவிடுவதும் பிறகு அவ்வார்த்தை வெளியாகும்போது "நான் சொல்லவே இல்லை. ஆவேசத்திற்காக அவர்களே சொல்லிவிட்டார்கள்." என்று முழு பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முயலும் அஞ்சா நெஞ்சமுடைய கொள்ளிகளின் சகவாசம் செத்தாலும் செய்யலாகாது.

எங்களுக்கு அந்த அற்ப நாய்களைப் பற்றி சிந்தனை எதற்கு? இந்த உபயோகமற்றத் துணி, அன்ன தானம் செய்துவிட்ட மகிமையை இருள் மூடமாகிய உன் போன்றவர்கள் தான் அறிந்து போற்ற வேண்டும். விலகு அப்புறம். இத் துணிகள் என் வீட்டிலிருக்க லாகாது. இவைகளை வாரி வீதியில் போட்டு விடுவேன்.—என்று பெரும் ஆட்டம் ஆடித் திருப்பாடல் பாடினாள்.

நீலா:—அம்மா! அரை மணி நேரம் நமக்கு வீண் பொழுது போய் விட்டது. இந்த உதவியற்ற விஷயத்தில் நாம் இறங்கி நமது முக்கியமான வேலையை மறந்து விட்டோம். நமது சூரிய காந்தம்மா ளுக்கு எம். எல். சி. ஆனதற்காக ராவ் பகதூர், டாக்டர் சந்திரகாந்த முதலியார் வீட்டில் இன்று விருந்திற்கு நமக்கு அழைப்புப் பத்தி ரம் வந்ததே; அங்கு செல்ல வேண்டாமா! அதை மறந்து விட் டோமே! இந்த சனியனைப் பிறகு பார்ப்போம்! மணி 5 ஆகிவிட் டது. உடனே கிளம்பு.'' என்று கூற குஞ்சரியும் அந்த அவசியமான காரியத்திற்குச் செல்வதை முன்னிட்டு அம்மட்டுடன் வெளியில் சென்றாள். செல்லும் போது "குலசேகரா! நான் சொல்லியது நினைவிருக்கட்டும்'' என்று கர்ஜித்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் தாயும் மகளும் வெகு ஆடம்பரமான அலங்காரத்துடன் தங்கள் மோட்டாரில் ஏறி விருந்து நடக்கும் இடத்திற்குச் சென்று விட்டார்கள்.

சிறிய வயதையுடைய சிலர் வயதுக்குத் தக்க மரியாதையோடு நடக்காமல் பெருத்த கிழங்களின் மத்தியில் பெரிய வார்த்தைகளைப் பேசிவிட்டு அகப்பட் டுக்கொண்டு விழிப்பது ஒரு வேடிக்கை.

எந்த விஷயத்திலும் பட்டுக்கொள்ளாது விலகி நடப்பவர்களுக்குத்தான் எக்காலத்திலும் நன்மை கிடைக்கின்றது. அவர்கள் எல்லோராலும் போற்றப் பட்டும் வருகிறார்கள்.

ஒரு சமயத்தில் ஒருவர் பிறரை வயிறெரியச் செய்துவிட்டால் அந்த வயி றெரிந்தவர்களின் சாபத்தினால் அதேவிதமான கஷ்டத்திற்குள்ளாகி வயிறெரி யச்செய்தவர் வயிறெரிந்து நிற்கும்படி கலிகாலத்துக் கடவுளும் காட்டிவிடு கிறார்.

2-வது அதிகாரம்

அடியார்க்கு அடியவன்—மிடி தீர்க்கும் மித்திரன்

தனியாக விடப்பட்ட குலசேகரனின் மனத்தில் துக்கம் ஒரே பனிபோல மூடிவிட்டது. அந்தப் பனி விலகுவதற்கு எப்போது ஆதித்தன் கீழ்த்திசையில் தோன்றுவானோ தெரியவில்லை. உண்மையில் நமது இளவலுக்கு மயக்கமே வந்து விட்டது. தன்னுயிரினும் இனிமையான கதர்த் துணிகளின் மேலேயே சாய்ந்தான். அவனுடைய கண்ணீரை அக் கதர்த் துணிகளே தாங்கிக் கொண்டன. அந்தோ! ஏழையின் பிழைப்பும் உலகில் ஒரு பிழைப்பா! பணத் திமிர் கொண்டவர்களுக்கு ஏழைகளின் கண்ணீர் சற்றும் தெரிவதில்லையே! ஏழைகளின் விசனத்தைப் போக்குவதற்குக் கடவுளும் நித்திரை புரிந்து, செல்வவர்தரும் செருக்கினால் அழிந்தால் அவர்களின் துயர் தீருவதெங்ஙனம்? ஆகா! ஏ ஏழ்மையே! கொடிய வறுமையே! உன்னை ஏன் கடவுள் படைத்தார்? நீ எதற்காக உலகில் உற்பவித்தாய்? மக்களை வாட்டி வருத்தி அவர்களைக் கசக்கிச் சார் பிழிந்து பணக்காரர்கள் அச்சாரைக் குடித்துக் களி வெறி மிகுந்து, காருண்ய மிழந்து, அகம்பாவம் மலிந்து கர்விக்கவோ நீ இப்பூவுலகின்கண் பிறந்தாய்; ஹா! கொடிது கொடிது; வறுமை கொடிது. அதனினுங் கொடிது செல்வச் செருக்காளர்களின் கடின இருதயம். அதனினுங் கொடிது அவர்களின் வாய் மொழி. அதனினுங் கொடிது அன்னோர் செய்கை. சீச்சீ! என்ன நிலைமை. பல கோடி மக்கள் பட்டினி கிடந்து பரிதவிக்கும் இக் காலையில் கேவலம் வயிறு வளர்க்கும்

எந்தக் கல்யாண வீட்டிற்குச் சென்றாலும் சொட்டுச் சொல்லும், திட்டும், சண்டையும் இன்றி சரியானபடி விமரிசையாக நடப்பதைக் காணவில்லை. மேற்படிகள் எதுவுமில்லாது நடக்கும் விவாகங்கள் சில வீடுகளில்தான்.

மூலம், இந்த அழிந்து மண்ணோடு மண்ணாய் மறையக் கூடிய செல்வத் திமிர் கொண்ட மூடர்கள் முன்னிலையில் நாம் உண்டு களிப்பது ஓர் உணவா! அல்ல; அல்ல. ஏழைகளின் வயிறெரிந்து இடும் சாபமே நாம் உட்கொள்ளும் உணவாகும். என்ன மடமையினால் நாம் இது பரியந்தம் இந்தச் செருக்காளர்களின் முன்னிலையில் ஏவலனைப் போன்று கேவல நிலைமையில் உயிர் வாழ்ந்தோம். என் போன்ற எளியர்களின் மத்தியில் நான் இருப்பேனேயாகில் என்னை இகழ் அணுகுமா! ஏழைகள் என்னை விலக்கியோ, உதாசீனமாகவோ தூற்றுவார்களா! சேச்சே! சேர் இடம் அறிந்து சேர். என்றார் ஆன்றோர். அதை அறியாது நாம் வீணாகி விட்டோம். இருக்கட்டும். கடவுள் ஒருவர் இருக்கிறார் எல்லோருக்கும் சரியான கூலி கொடுப்பதற்கு. நாம் ஏன் பதறவேண்டும்? நாம் படித்துப் பெற்ற பட்டத்தைக் குப்பையில் போடவேண்டும். அதனாலா நமக்குப் புகழ் வரப்போகின்றது. இல்லை. இல்லை. ஏழைகளின் ஆதரவினால் தான் நமக்கு உய்வுண்டாகும்." என்று தனக்குள் பற்பல மாதிரியாக நினைத்தான்; கண்ணீரைக் கக்கினான். அப்போது மணி மாலை 7 ஆயிற்று. குழம்பிப்போன மனத்துடன் குலசேகரன் ஒன்றுமே தோன்றாதவனாகி அப்படியே கண்ணயர்ந்து விட்டான்.

விருந்திற்குச் சென்ற சீமாட்டிகளும், சீமானும் வந்தார்கள். சீமான் என்றுமே குலசேகரனை லக்ஷியம் செய்து பேசுவது வழக்கங் கிடையாது; ஆகையினால் அன்று இவனைக் கவனியாதது அதிசயமே அல்ல. விருந்து உண்டு வரும்போது நீலாவின் சிநேகிதையும் ஒருத்தி அவர்களுடன் கூட வந்தாள். வந்தவர்கள் தங்கள் காரியத்தைக் கவனித்தார்களே யன்றி குலசேகரனைப்பற்றி நினைக்கவே இல்லை. அவன் சாப்பிட்டானா, இல்லையா! என்பது பற்றி வேலையாட்களையும் விசாரிக்கவில்லை. எனினும் அவனுடைய அன்றைய விஷயங்களைமட்டும் நீலா தன் தந்தையிடம் முடியிட்டு விட்டாள். தந்தையும் அதைக்கேட்டு சீற்றங் கொண்டு "அடிப்

நமது சிநேகிதர்களுக்கு மிகவும் வேண்டிய பண்டத்தை நாம் கண்டால் அதை உடனே அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று மனம் தாவுகின்றது.

பயலே நாளை கவனிக்கிறேன்'' என்று கூறிச் சென்றார். அன்றைய இரவு பட்டினியாகவே குலசேகரனின் பொழுது போயிற்று.

மறுதினம் உதயமாயிற்று. பக்ஷி இனங்கள் எல்லாம் தம் தம் ஆனந்தக் களிப்பினால் ஆரவாரித்த வண்ணம் இங்கும் அங்கும் ஓடி ஆடிப் பறக்க வாரம்பித்தன. காலையின் சிறு சிறுப்பான காற்று வெகு இன்பகரமாக வீசுகின்றது. உதயத்தின் அழகு கூறவியலாத இன்பமாக விளங்குகின்றது. மக்கள் தம் தம் அலுவல்களைக் கவனிக்கச் செல்கின்றார்கள். இத்தகைய ரமணீகரமான உதயத்தில், ஆனந்தத்தின் தோற்றமறியாது வாடிய முகமும், வருந்திய மனமும், நீர் வழிந்த கண்களும், சங்கடம் செய்யும் வயிறும், விம்மி விம்மி வரும் மூச்சும், துடிதுடித்த இதயமும் ஒருங்கே கூடிய நமது குலசேகரன் ஒருவனே தனிப்படையாக வீற்றிருந்தான். அவன் வீற்றிருந்த அறை, வீதிப் பக்கமாக ஜன்னல் அமைக்கப்பட்டிருந்த அறையாகையினால் அவன் ஜன்னல், வழியாக வீதியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவனது மனத்திலுள்ள துயரத்திற்கு மருந்து அளிப்பதுபோல வீதியில் காலையில் வேலைக்குச் செல்லும் ஏழைத் தொழிலாளர்களின் ஆனந்தம் அமைந்தது. அவர்களைக் காணக் காண மனத்தில் ஒரு விதமான இன்ப ஊற்று பெருகலாயிற்று. அவர்களைக் கண்ட குலசேகரன் "ஆகா! உதயத்தின் எழிலுக்கேற்றவாறு ஏழைகளின் ஆனந்தம் அமைந்துள்ளதே! அவர்கள் கூழுக்கும், கஞ்சிக்கும் அலைந்து அவதிப்படுகின்றவர்களாயினும் மனத்தில் சஞ்சலமின்றி அடிமையின் பிணி இன்றி என்ன குசாலாக ஆண், பெண் இருபாலரும் செல்கின்றார்கள். வருத்த மற்ற இவர்கள் வாழ்க்கையல்லவோ நீடித்த சுகத்தை யளிக்கும் வாழ்க்கை. ஆகா! சிறு சிறுப்பான இந்த குளிரில் இவர்கள் முழங்கால் வரையில் ஒரு துணியைக் கட்டிக் கொண்டு மேலே ஒரு கந்தை சட்டை தரித்தவர் சிலரும், அதுவுமில்லாது கந்தைத் துணியைப் போட்டுக் கொண்ட சிலரும், கந்தைப் புடவை அணிந்துள்ள மாதர்களும் இக் கொடிய

"இன்று இவ்வேலையைக் கட்டாயமாகச் செய்து வைக்கின்றேன்" என்று உறுதியாகக் கூறும் அன்றைக்குத்தான் எவ்வித தவக்கமோ எதிர்பாராது ஏற்பட்டு அவ்வேலை நின்றுவிடுகின்றது. இது கண்டனுபவித்த சோதனை.

குளிரை லக்ஷ்யம் செய்யாது என்ன ஆநந்தமாகச் செல்கின்றார்கள். இவர்களுக்கு இந்த குளிர் பாதிக்கின்றதா! இல்லை. ஏதனால்? என்றும் ஒரே மாதிரியான ஏழ்மை நிலைமையிலே இருந்து அதையே ஆநந்தமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் பழக்கமே இதற்குக் காரணமல்லவா! ஏ குளிரே! உன்னைக் கண்டஞ்சி, போர்த்து, முக்காடிட்டு மறைகின்றவர்கள் யார்? செல்வச் செருக்குடன் வாழும் சீமான்களும் சீமாட்டிகளும்; பணத்திற்கு அடிமையான அற்பர்களுமே! இந்த ஏழைகள் உனக்கு அஞ்சாது தம் தம் தொழிலை யாற்ற எவ்வளவு குதூகலமாக இப்பனியில் செல்கின்றார்கள். ஆகா! ஏழைச் சகோதரர்களே! சகோதரிகளே! உங்கள் பரிசுத்த இதயத்தின் பலத்தினாலேயே நீங்கள் கொடிய வறுமையையும் ஜெயித்துக் குளிரையும் லக்ஷ்யம் செய்யாது கொண்டாட்டமாயிருக்கிறீர்கள். ஆகா! குழந்தைகளை வாரித் தோள் மீதும், மடியில் ஏணை கட்டியும் தூக்கிக்கொண்டு போகின்றார்களே! என்ன ஆநந்தம். உங்கள் வாழ்வே நித்திய வாழ்வு; பணக்காரரைக் கண்டு நீங்கள் ஏதோ பிரமிக்கலாம். இந்த வாழ்க்கையில் தொட்டதெல்லாம் துன்பமே; நினைத்ததெல்லாம் நேர் விரோதமே.......... ஏ ஏழை மக்களே! உங்களுக்கும் உங்கள் தொழிலுக்கும் ஆயிரம் வந்தனம்.'' என்று தனக்குள் நினைத்தவாறு ஒன்றும் தோன்றாதவனாய் உட்கார்ந்துவிட்டான்.

"அன்றைய காலை ஆகாரத்திற்கும் அவன் வந்தானா, யாரேனும் கொடுத்தார்களா?'' என்பதை அங்கு ஒருவரும் கவனிக்கவில்லை. முதல் நாள் இரவு பட்டினி கிடந்த இளைப்பு ஒருபுறம், தன் ஏழ்மை நிலையின் தத்தளிப்பு ஒருபுறம்; ஆக எல்லாம் ஒன்றாகூடி அவனைச் சித்திரவதை செய்யத் தொடங்கின இந்நிலைமையில் தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஸ்நானம் செய்து கடவுளைப் பூஜித்துப் பின் தன்னறையிலேயே அமர்ந்தான். அன்று தான் காலேஜுக்குப் போவதையும் மறந்தான். விசனக் கடலில் ஆழ்ந்

"தாயைவிட அதிகமான அன்புடன் நான் ஆதரிக்கின்றேன்'' என்று கூறுகிறான் ஒரு மாது. அந்த குழந்தையைக் கேட்டாலோ வண்டவாளம் வெளியாகிவிடுகின்றது.

திருந்த சமயம் நீலாவின் தகப்பனாராகிய ஏகாம்பர முதலியார் அவ்விடம் பிராப்தமானார். அவரைக் காணும்போதே குலசேகரன் பய பக்தியோடு எழுந்து நின்று மரியாதையாக வணங்கினான்.

மேனாட்டு ஆடம்பர அலங்காரத்தில் மூழ்கிக்கிடக்கும் ஏகாம்பரம் குலசேகரனை நோக்கி, "அடேய் குலசேகரா! என்ன உன்னுடைய சுப லீலாவினோதம் விஞ்சிவிட்டதாமே! எந்த தைரியத்தைக்கொண்டு நீ இத்தகைய ஆட்டம் ஆடுகிறாய்! நீ படித்த பி. ஏ. பட்டத்தின் பெருமைதானோ! உன்னுடைய நிலைமையை சற்று உணர்ந்து பார். என் வீட்டில் நாய்போல உன்னை ஒதுக்கி விலக்கி வைத்திருக்கவேண்டியதுபோக, என் மகளையும் உனக்குக் கட்டி, மரியாதையான நிலைமையில் வைத்ததனால் தலைத்திமிர் ஏறிவிட்டதோ! இந்த ஆட்டம் ஆட இது இடமல்ல. எம். எல். ஸி. ஏகாம்பரத்தின் வீடு இது என்பது நினைவிலிருக்கட்டும். நான் சென்ற சில வருடங்களுக்கு முன் பிழைக்கமாட்டேன் என்று படுக்கையாக விழுந்துவிட்டமையினால், என் கண்ணால் கண்டு களிக்கவும், அப்போது நீ குழந்தைப் பருவத்தில் எனக்கு அடங்கி இருந்ததையும் உத்தேசித்து சிறு குழந்தையாகிய 5 வயது லீலாவை உனக்குக் கொடுத்து மணஞ் செய்துவிட்டேன். நீ என் கைக்குள் அடங்கி இருப்பாய் என்று நான் நினைத்தேன். நீ சில மாதங்களாக எனக்கு முற்றும் மாறுபட்டே நடக்கிறாய். குழந்தையின் மனத்தையும் புண்படச் செய்கிறாய். இந்த சோம்பேறி தத்தாரித் தலையாட்டங்களை இனியும் சகிக்க வியலாது. என் கௌரவத்திற்கு ஹானி விளைவிக்க நீ வழி தேடுவது நீ இவ்வீட்டிலிருக்கத் தகுதியற்றவன் என்பதைக் குறிக்கின்றது. ஜாக்ரதை. ஏகாம்பரத்தினிடத்தில் இந்த பப்பு வேகாது. இதை நன்றாகத் தெரிந்துகொள். எனக்கு மீறி நடக்கும் நீ உன் வழியில் ஆடிக்கொள்ளலாம். இந்த துணிகளை உடனே விலக்கித் தள்ளு. இல்லையேல் நான் கட்டாயம் கொளுத்திவிடுவேன். என்னால் நீ பிழைப்பதை மறக்காதே! எனது

"கட்டாயம் வருகிறேன்" என்று கூறிவிட்டு அவ்வாறு வராது ஏமாற்றிவிட்டுப் போய்விடுகிறவர்களுக்கு அது சகஜமாக விருக்கின்றது. ஏமாறியவர்களுக்கோ, மனம் தவிக்கின்றது.

ஒன்று விட்ட தங்கை யாயினும் உன் தாயார் என்னிடம் காட்டிய அன்பினால் அனாதையாகிய உன்னை நான் ஏற்றுக்கொண்டேன். இந்த பிச்சைக்கார கோலத்தைக் காண எனக்கு வரும் ஆத்திரத்திற்கு அளவில்லை. உன் மாமியின் மனமும் நீலாவின் மனமும் நோகும்படிச் செய்வதற்கு நீ இவ்வீட்டில் இருத்தல் சரியில்லை. ஜாக்ரதை. ஆதரிப்பாரற்ற அனாதை என்பதை நினைத்துப் பார்'' என்று தாறுமாறாகக் கூறிவிட்டு உடனே போய்விட்டார்.

முதல் நாள் பெண் தேவதைகள் காட்டிய கொடுமையை விட இந்த ஆண் பூதம் காட்டிய மாதிரி சற்று சகிக்கக் கூடியதாகவே குலசேகரனுக்குத் தோன்றியது. ஏனெனில் பெண் தெய்வங்களின் தூண்டுதலால் இந்த ஆண் தெய்வம் சற்று ஆடும் என்பதை நமது இளவல் எதிர் பார்த்ததே; ஆகையினால் அந்தவிதமே நடந்துவிட்டது ஆனால் வீட்டிலிருக்கத் தகுதி யல்லவென்ற வாக்கியம் மட்டும் மனத்தை ரம்பங்கொண்டு அறுக்கத் தலைபட்டது. அவன் மறு பேச்சின்றி தன்னறையில் ஒரு புறம் உட்கார்ந்தான். பசியின் கொடுமை ஒரு புறம் பாதிக்கின்றது.

அத் தருணம் ஒரு பிச்சைக்காரன் தள்ளாத வயதடைந்தவன், நடக்கவும் சக்தி யற்றவன் தள்ளாடி நடந்தவாறு இவ் வீட்டிற்கு வந்து வீதியிலேயே நின்று "அம்மா! தாயே! என் தாயே! பசி, உயிர் போகின்றது. நான் ஆகாரத்தைக் கண்ணால் கண்டு இன்று சரியாக மூன்று நாளாகின்றன. கிழப் பிராணன் வாடித் தவிக்கின்றது தாயே! உங்கள் கையினால் பிடி அன்னம் அளிக்க வேண்டும் தாயே! சோறு வடித்த கஞ்சியாவது கொடுக்கவேண்டும் தாயே! பிராணன் பறக்கின்றது.'' என்று பேசமாட்டாமல் கூவினான்.

இந்த பிச்சைக்காரனைக் கண்ட வுடன் குலசேகரனின் மனம் முன்னிலும் அதிக வருத்தத்தை யடைந்துவிட்டது. "ஆகா! இத்

கட்டிய கணவன் கடும் வியாதியினால் நடக்கவும் மாட்டாது தத்தளிக்கையில், சிறிதும் மனமிரக்கமற்று "அங்கு போ; இங்கு போ." என்றும், "பணம் சம்பாதிக்கவில்லை; சதா உட்கார்ந்திருக்கிறாய்'' என்றும் உபத்திரவிக்கும் மனைவியை என்னென்பது?

தகைய வயது முதிர்ந்த கிழவன் மூன்று நாளாக பட்டினியைச் சகிக்கையில் நல்ல வாலிப தசையில் ரத்தத்திமிர் படைத்துக் கொழுத்துக் கிடக்கும் நான் என் பசியைத் தாங்க வியலாது. இப் பாழுங் குடல் கேட்காமலா போகும். ஹா! கடவுளே! இந்த மாதிரியான ஏழைகளைப் பிறப்பித்தாயே! அவர்களுக்கு ஆகாரங் காட்ட வழி செய்யமாட்டாயா!" என்று வருத்த முற்று உட்கார்ந் திருக்கையில் அந்த பிச்சைக்காரன் மீண்டும் அதே போலக் கத்தினன்.

அத்தருணம் வீட்டு எஜமானியம்மாள் கையில் ஒரு தடியுடன் வீதியில் வந்து வெகு ஆத்திரத்துடன் "அடேய் பிச்சைக்காரப் பயலே! கட்டை தடிக் கழுதை! பகல் வேளையில் அலுத்துப்போய் என் குழந்தை நித்திரை செய்கையில் அதற்குப் பங்கம் விளைவிக் கும்படியாகக் கத்துகிறுய! வயிற்றிற் கில்லாவிட்டால் எங்கேனும் கிணறு, குளம், ஏரி முதலியவற்றில் விழுந்து சாகிறது தானே! அவைகள் உனக்கு அகப்படவில்லையா? தடியா! போ வெளியில்" என்று தடியைக் காட்டிக் கூறினுள்.

இதுகேட்ட பிச்சைக்காரன் "ஆகா! என் தாயே! என்னைப் பார்த்து நீங்கள் மனமிரங்காவிடில், உங்களைக் கண்டு கடவுள் மன மிரங்கி என்றைக்கும் இந்த செறுக்குடனேயே வைத்திருப்பார் என்று நினைக்காதீர்கள். எளியாரை வலியா ரடித்தால் அவ் வலி யாரை தெய்வ மடிக்கும். என்னுடைய பசியை இந்த வேளையில் நீங்களறியாவிடினும் உங்கள் கடைசி காலத்திற்குள் ஒரு தினம் கட்டாய மறிவீர்கள். இதை மறக்கவேண்டாம் என் தாயே! செல்வத்துடன் முப்பது வருடம் வாழ்ந்தவனு மில்லை; முப்பது வருடம் கெட்டவனு மில்லை என்ற பழமொழி பொய்த்துப்

தன்னுடைய ச்வதேசாபிமானத்தையும், தாய்ப் பாஷையையும், தனது சொந்த சுய மரியாதையையும் இழிவாக எண்ணி அலக்ஷ்யமாகப் பேசி அன்னிய பாஷையையும், அன்னியரின் நாகரிகத்தையும் கொண்டாடிப் பின்பற்ற ஆவல் கொண்டு பேசும் மதிகெட்ட மூடர்களுடன் வார்த்தை யாடுவதே குற்றம்.

போகாது. எனக்குப் படி யளக்கும் தேவதைகள் யாரேனும் இருப்பார்கள்" என்று அவன் கூறி முடிப்பதற்குள் குஞ்சரியம்மாளுக்குக் கோபம் பொங்கிவிட்டது. "அத்து படவாப் பயலே! எனக்கா வேதாந்தம் பேச வந்துவிட்டாய்? பிச்சைக்கு வந்த பொறுக்கிக்கு இத்தனை வாயா, இவ்வளவு கர்வமா! ஓடிப்போ தடி நாயே!" என்று கூறியவாறு தடியால் கையப் புடைக்கவாரம்பித்து விட்டாள்.

இந்த கோர சம்பவத்தைக் கவனித்துக்கொண்டிருந்த குலசேகரன் அதற்குமேல் தாங்காதவனாய் ஓடோடியும் வந்து, கிழவன் மேல் அடிபடாதவாறு தான் குறுக்கே நின்று, குஞ்சரியம்மாளின் ஆக்ரோஷத்தினால் விட்டதடியடிப் பிரஸாதத்தில் இரண்டொன்றை ஏற்றுக்கொண்டான். தனக்குத் தடையாக எதிரில் வந்தது தன் மருமகன் என்பதை இரண்டோரடி அடித்தபிறகு தான், கோபாக்கினியினின்று சற்றுத் தெளிந்தவளாய் அறிந்துகொண்டு, மேலும் அடிப்பதை நிறுத்தினாள். குலசேகரனை நோக்கி "அடேய், குலசேகரா! உன் செய்கையும் பேச்சும் கேற்று முதல் விநோதமாக இருக்கிறது, உனக்கு நல்ல காலத்திற்குக் காலமில்லை. இந்தப் பிச்சைக்காரனின் பொருட்டு நீ தடியடி பட வந்தாயே உனக்கு வெட்கமில்லை! தூத்து. உன் பணிசைப் பாரு." என்று பேசவாரம்பித்தாள்.

இதைக் கண்ட குலசேகரன் வெகு பணிவுடன் "மாமீ! தாங்கள் கூறியபடி எனக்கு வெட்கமில்லை. ஒரு கிழப் பிராணனுக்கு ஒரு குவளை கஞ்சி வார்க்காது அடித்துக் கொல்ல வந்த உங்களுடைய வீட்டில் நான் மூன்று வேளையும் தின்று கொழுத்து இவ்வுடலை வளர்த்தேனே! எனக்கு வெட்கமிருப்பின் நான் அவ்வாறு வளர்த்திருப்பேனா! ஒருபோதும் வளர்த்திருக்கமாட்டேன்.

"நமது தாய்ப் பாஷைக்குள்ள கௌரவம் வேறு எதற்கும் கிடையாது. தாய்ப் பாஷையை இகழ்ந்து அன்னிய பாஷையைப் புகழ்வதானது, "கட்டிய வனை விடக் கள்ளக் காதலன்தான் சிறந்தவன்" என்று கூறுவது போல விருக்கிறது." என்கிறார் தேசாபிமானமும், பாஷாபிமானமும் உள்ளவர்.

மாமி, தள்ளாத பிராணனை வதைத்து உபத்திரவிப்பதை விடத் திருடமான சரீரத்தை யுடைய என்னை உதைத்து உங்கள் கோபத்தைத் தணித்துக்கொள்ளுங்கள்." என்று சற்றும் தாக்ஷண்யமின்றிப் பேசிவிட்டுக் கிழவனைப் பார்த்து "பெரியவரே! உமது பசியை உடனே ஆற்றும் உணவு கொடாவிடினும் கடவுள் உம்மீது கருணை புரியத்தக்க விதமான உதை உமக்குக் கிடைத்தது. இந்த உதையே உமது ஜீவியத்தில் பெரும் புதையல் என்று நினையும். உதைத்த அம்மாளின் குடும்பத்திற்கே இதோர் நெருப்புத்துண்டு என்பதும் நினைவிருக்கட்டும். இதோ! இந்த ஒரு ரூபாயைக் கொண்டுபோய் ஏதேனும் வாங்கிச் சாப்பிடும்" என்று கூறி அனுப்பிவிட்டுச் சரேலென்று தன்னறைக்கு வந்து சேர்ந்தான்.

குஞ்சரியம்மாள் தனது நிலைமைக்கு மீறிப் பெருத்த சத்தமிட்டு, மருமகனை வாயில் வந்தபடி எல்லாம் திட்டிக்கொண்டே இருப்பது நமது இளவல் காதில் படாமலில்லை. பட்டினியைக் கவனிப்பாரற்றப் பரதேசியான வீரன் "சே! உலகம் போற்றும் உத்தமன் 23 நாள் உண்ணா விரதமிருந்து நாட்டிற்குக் கண்ணாக உழைக்கையில் நாம் கேவலம் எந்தமட்டும். இவ்விதமே பட்டினி கிடந்து என்னுடைய ஆத்மா நீங்கட்டும்." என்றுதீர வைராக்யங் கொண்டு ஒரு கணத்தில் பசி என்ற அரக்கனை ஓட்டினான்.

கொடிய பகல் கழிந்தது; அந்தி நேரம் சந்தித்தது. எங்கும் அந்தி நேரத்தின் ஆநந்தம் ஜ்வலிக்கத் தொடங்கியது. காலேஜ், பள்ளிக்கூடம், உத்யோக சாலை, தொழிற் சாலை முதலிய இடங்களில் வேலை செய்தவர்களும், படித்தவர்களும் தம் தம் தொழிலை முடித்துக்கொண்டு வீடு திரும்புவோரும், கடற்கரையில் உலாவச் செல்லுவோரும், குழந்தைகளின் ஆநந்தமான விளையாட்டும் ஒன்றுகூடி வெகு ரமணீயமாக விளங்கிய அம்மாலை நேரத்தில் நமது அருங்குண பூஷணமாகிய குலசேகரன் செய்வதின்ன தென்றறி

அன்னியபாஷை எதுவரையும் தேவையோ, அதுவரையில் அவசியமேயன்றி, நமது தாய்ப்பாஷையின் பெருமைக்கு ஈடாக மாட்டாது. உறவினர்களின் அன்பிற்கும் பெற்றோர்களின் அன்பிற்குமுள்ள வித்யாசமே மேற்படியிலும் உண்டு.

யாது சற்றுத் தியங்கினான். தன்னைப் போலவே சதா கொந்தளித்த சஞ்சலத்தில் மூழ்கிக் கிடக்கும் கடலினருகில் சென்று தன் மனத்திற்கு மாறுதலை யளிக்கலாகுமா என்று நினைத்தான். ஆனால் அப்போதே தன் மனைவியும் மாமியும் மோட்டாரில் சென்றதை யறிந்து தான் அங்கு செல்லவேண்டாம் என்று நிறுத்திக் கொண்டான். தன் மனம் போன போக்கெல்லாம் யோசித்தவாறு உட்கார்ந்திருக்கையில் மணியும் ஏழு அடித்தது; எல்லோரும் வீடு திரும்பினார்கள். அன்றும், அப்போதும் அவன் போஜனத்தைக் கவனித்தவர்கள் யாரு மில்லை. அதைக் குலசேகரன் சற்றும் லக்ஷ்யம் செய்யாது தன்னறையை விட்டு வெளியில் வராது உட்கார்ந்திருந்தான்.

எல்லோரும் போஜனம் செய்துவிட்டு உல்லாசமாக வந்து அமர்ந்தார்கள். குலசேகரன் தன் மனைவியை ஒரு வார்த்தை கேட்டுக்கொண்டு போகும்படியாகச் சொல்லி அனுப்பினான். அதற்கந்த கர்வம் மிகுந்த நீலா வெகு முடுக்குடன் ஒரு துண்டு கடிதத்தில் சில வரிகளை எழுதி அனுப்பிவிட்டாள். அந்தத் துண்டு கடிதம் நமது ஏந்தல் கையில் கிடைத்ததும், அதை யவன் பிரித்துப் படிக்கலானான்.

“அனுவசியமான வார்த்தை பாட நான் விரும்பவில்லை. எனது மேன்மையான அந்தஸ்திற்கு உங்களை என் கணவன் என்று சொல்லிக்கொள்ளவும் வெட்கமாக இருக்கிறது. இப்போது நான் உங்களோடு பேசவதற்கு எந்த விஷயமும் கிடையாது. அப்படி உங்களுக்கிருப்பினும் நான் பேச விரும்பவில்லை. என் வீட்டிலுள்ள சோற்றைத் தின்றுவிட்டு கிடந்தால் கிடவுங்கள். இல்லையேல் உங்களிஷ்டம். என்னுடைய சிநேகிதையுடன் நான் ஆநந்தமாகப் பேசுகையில் தொந்தரவு கொடுத்ததே எனக்கு மிக்க வருத்தமாக இருக்கிறது. உங்கள்

“மகாத்மா காந்தியை நிந்தித்துக் கூறுபவர்கள் உடனே அதன் பலனை அடைந்துவிடுவார்கள்.” என்று வயிறெரிந்து கூறுகிறார் ஒரு அநுபவ ஞானி அதற்குக் காரணம் தேசாபிமானமே யாகும்.

எதிரில் வரவும் எனக்குப் பிடிக்கவில்லை. இனி என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம்." இவனா உன் புருஷன்!" என்று என் தோழி கேட்டதற்குப் 'பிராணனை விட்டுவிடலாமா?' என்று ஆய்விட்டது. வீண் வம்புக்கு இங்கு ஒருவரும் தயாராக இல்லை.

இங்ஙனம்
நீலா

அதைப் படித்ததும், ஆகா! அவன் மனமிருந்த நிலைமையைக் கூறவேண்டுமோ! அதை யூகித்தறிந்துகொள்ள வேண்டியது தான். ஏற்கனவே அவனுக்கு இரண்டு நாளாக இருந்த மன வேதனையை விட இன்று நூறு மடங்கு அதிகரிக்கச் செய்துவிட்டது. தனது கேவலமான அனாதைத் தன்மையை நன்கறிந்துகொண்டு "ஹா! உலகமே! உன்னுள் அடங்கியுள்ள தன்மைகளை நன்கறிந்தேன். இனி என்போல எந்த மனிதனும் மாமியார் வீட்டில் வயிறு வளர்க்கவேண்டாம். பிச்சை எடுத்துக் கஞ்சி குடித்தாலும் அதற்குள்ள கௌரவம் வேறெதற்குமில்லை. தன்னிலைமையை அறிந்து தான் நடக்கவேண்டும் என்பதை வெகு நாட்களாக அறிந்தும் மனத்ருடம் சற்றுக் குறைந்திருந்தது. இன்றே பூர்ணமான தைரியம் பெற்று என்னிலைமையை நானே கண்டு தெரிந்துகொண்டேன். ஆகா! மனைவியாம்; மக்களாம். சேச்சே! பணத்திற்கு மனைவி, அந்தஸ்திற்கு மனைவி, கௌரவத்திற்கு மனைவி இவைகள் எல்லாம் அற்ற சூனியர்களுக்கு மதிப்பும் கண்ணியமும் எங்கிருந்து கிடைக்கும்? மனைவி புருஷன் என்கிற பாந்தவ்யம் பணத்தினாலும் இன்னும் மற்ற படாடோபத்தினாலும்தான் இருக்கிறது என்று நன்கறிந்தேன். அவளுடைய செறுக்கின் நிழலில் நானும் மறைந்திருக்கவேண்டிய காலம் வந்ததனாலன்றோ நான் இத்தகைய சிறுமையுற்றேன். அன்பற்ற கல்யாணம் செய்வதின் பலன் இது

"பலவகையான பலகாரங்களைத் தின்றபோதிலும் சாதம் சாப்பிடுவதற்குச் சமானமாவதில்லை- அதுபோல பல தேசங்களைச்சுற்றி யாத்திரை செய்து வந்தாலும் தன் தாய் நாட்டின் மதிப்புக் கிணையாவதில்லை" என்கிறார் ஒருவர்.

தான். அன்பு என்ற உணர்ச்சி பிறப்பதற்குள்ளேயே சிறிய குழந்தைப் பருவத்தில் விவாகத்தைச் செய்துவிட்டால் அதிலும் 2 வயது கூட வித்யாசமில்லாது விவாகத்தை முடித்தால் இந்த கதிதான். ஆணே, பெண்ணே தன்னறிவைத் தான் அறிந்து, அன்பு ஊற்று மனத்தில் சுறந்த பிறகு விவாகம் தானே தான் கண்டு செய்துகொள்ளுதல் உத்தமமேயன்றி இத்தகைய விவாகம் ஓர் விவாகமா! விவாதம்தான். என்னுடைய ஏழை நிலைமை என்ன, அவளுடைய செல்வச் செருக்கென்ன? ஆகா! மலைக்கும் மடுவிற்குமல்லவா இருக்கின்றது. என்னைத் தன் புருஷன் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படும் அவள் மனோபாவம் எவ்விதமிருக்கும் என்பதை இனி யோசிக்கவேண்டுமா? வேண்டாம்; உள்ளங்கை நெல்லிக்கனி போல நன்கு விளங்கிவிட்டது. ஏ நீலா! உன் செருக்கை பறிந்தேன்; என்னிலைமையையும் அறிந்தேன்." என்று தனக்குள் எண்ணியவனுய் தன்னறையை விட்டு வெளியேருது அமர்ந்தான்.

அப்போது நன்ருக நிசப்தம் குடிகொள்ளத் துவக்கியது. இரவு சுமார் பத்து மணி இருக்கலாம். நமது இளவலின் மனம் முறிந்து உலர்ந்துவிட்டதால் "இதற்குமேல் நாம் இங்கிருப்பது சுத்த மூடத்தனம் அறிவு உள்ளவனுய், வயிற்றிற்குப் புசிக்கின்றவனுயின் இக்ஷணமே இவ்விடத்தைவிட்டு வெளியேற வேண்டும். இது பரியந்தம் பாழும் வயிற்றைப் பணக்காரர்களின் முன்னிலையில் வளர்த்தது போதும். இனிமேல் நமக்கு இவ்வுலகில் இருப்பதற்கு இடம் கிடைத்தால் இருப்பது. இல்லையேல் எம பட்டணத்திற்குப் போய்ச் சேர்வது. இதுதான் முடிவானது. இனி இவர்கள் முகத்தில் என் சவத்தைக் கூட காண முடியாத வழியில் நாம் நடக்க வேண்டும்" என்று தீர்மானித்தவனுய் அவன் தான் வாங்கிய கதர்த் துணிகளை எல்லாம் வாரி ஓரே மூட்டையாகக் கட்டினுன். தன் கையிலிருந்த கடியாரத்தையும் எடுத்து மேஜைமேல் வைத்தான்.

நூலாசிரியருக்குத் தாம் எழுதும் புத்தகங்களில் சில வெகு விரைவில் வரைந்து பூர்த்தியாகிவிடுகின்றன. சிலவோ, மாதக் கணக்காயும் வருடக் கணக்காயும் முடிவு பெருமல் இழுபடுகின்றன. அதது ஆரம்பித்த வேளையின் கூற்று.

உடனே ஒரு கடிதம் எழுதத் தொடங்கினான். அதற்குள் நீர்ப் பாதை கழியச் செல்லவேண்டி இருந்ததால் எழுந்து குழாயருகில் போய்விட்டுத் திரும்பி வருகையில் நீலாவின் அறையில் இன்னும் பேசும் சத்தம் கேட்டதால் அந்த அறைக் கதவின் புறம் சற்று நின்று "யார் என்ன பேசுகிறார்கள்?" என்று கவனித்தான். நீலா, அவள் தாயார், சினேகிதை மூவரும் அங்கிருப்பதைக் கதவின் இடுக்கினால் கண்டான்.

குஞ்சரி:—என்ன போ! நான் எத்தனைதான் மனத்தைத் தேற்றிக்கொண்டாலும் எனக்கு இந்நீலாவின் குறை குறைதான். இவளுக்கு ஏற்ற கணவன் வந்திருந்தால் எங்கள் சந்தோஷம் இரட்டிப்பாக மாறி இருக்காதா! அந்த அனாதை ஏழைச் சிறுவனுக்கு என் செல்வச் சீமாட்டியைக் கொடுத்து நான் மிக்க அவமானமடைகிறேன். யாரேனும் எனக்கு சம அந்தஸ்து உடையவர்கள் "உன் மாப்பிள்ளை யார்?" என்று கேட்டால் நான் தலை குனியவேண்டி இருக்கிறது. எனக்குச் சமமாக விருப்பின் நான் அப்படித் தலை குனிய வேண்டாமல்லவா! என் பாபந்தான் இது. குழந்தைகளை ஜோடியாகக் கண்டு ஆனந்திக்கப் பிராப்தமில்லை.

சினேகிதை:—என்ன மாமீ! இது விஷயத்தில் என் பிதாவும் என் தமையனும்கூட வருத்தப்படுகிறார்கள். என் தமையனுக்கு நீலாவின்மீதே கண். "நீலாவையே என்னுயிராக நினைத்திருக்கிறேன்" என்கிறான். அத்தகைய சம அந்தஸ்தும் அன்பும் இருக்கும் இடம் தவறிவிடுகின்றது. என்ன செய்வது? நீலாவுக்கும் இக் குறையினால் தேகம் மெலிந்துவிடுகின்றது.

நீலா:—(கண்ணில் நீர் பெருக) என் மரகதம்! உன்னிடம் என் மனத்தை உடைத்துச் சொல்வதால் தோஷமில்லை. அந்தப் பாவி எனக்குப் புருஷன் என்கிற பெயருடன் உலகிலிருப்பதைவிட அவன் செத்தால் நான் சுகப்படுவேன். என் மன மிசைந்த மணாளனை

நமக்கு ஒரு ஆபத்தான நிலைமையில் நாம் சிறிதும் எதிர்பார்க்காத விடத்திலிருந்து நமக்கு உதவி கிடைத்து விட்டால் அத்தருணம் நமது உள்ளம் எவ்வித மகிழ்ச்சியடைகின்றது அதற்கே தெய்வச் செயல் என்பது.

மறுமணம் செய்துகொள்வேன். ஊரில் யார் யாருக்கோ சாவு வருகின்றது. இந்தப் பிச்சைக்காரப் பயலுக்கு ஒரு உடம்பும் வருவதில்லையே! இதுதான் எனக்குப் பெருத்த கவலையாக இருக்கிறது. உன் அண்ணனைக் காணுந்தோறும் என் மனம் படும் பாட்டை நான் கூறவேண்டுமோ! எனது சந்தோஷத்திற்கு இச்சனியன் குறுக்காக வந்து சேர்ந்ததே!" என்று நான் இரவும் பகலும் அழுது மடிகின்றேன்.

குஞ்சரி:—ஆகா! நான் இந்த விஷயங்களை என் மனத்திற்குள்ளேயே வைத்துக்கொண்டு தவித்தேன். இதை வெளியில் சொன்னால் யார் என்ன நினைப்பார்களோ! நீலா தான் என்ன நினைப்பாளோ! என்று நானே சற்று அஞ்சினேன். என் கண்ணே! உன் மனமே இவ்விதம் வெறுத்துக் கூறுகையில் நான் எவ்விதம் சகிப்பேன். 'ஊரில் வருகிற வாந்திபேதி இந்தப் பிச்சைக்காரனுக்கு வரலாகாதா! ஊரில் வர சாவு இவனுக்கு வரலாகாதா! யார் யாரோ குளத்திலும், கிணற்றிலும் விழுந்து செத்ததாகப் பத்திரிகையில் படிக்கின்றோமே! அப்படி இவன் தொலையக்கூடாதா!" என்று என் மனமும் உன் தந்தையின் மனமும் பதறுகின்றது. அவன் இறந்தானென்றால் நான் உடனே மறு மணம் செய்துவிட்டல்லவோ வேறு காரியம் செய்வேன்.

சினேகிதை:—மாமீ! நீங்கள் சொல்லியதுபோல அவரவர் மனத்திலேயே வைத்துக்கொண்டு தவிக்கவேண்டி இருக்கிறது. நீங்களிருவரும் சொல்லிய பிறகு நான் சொல்வதில் என்ன தப்பிதம். தினம் எங்கள் வீட்டில் இந்த வார்த்தைதான். என் அண்ணன் இரவு பகலாக இதைத்தான் துதித்து வேண்டுகிறான். இது வெளியாருக்குத் தெரிந்தால் அநாகரிக ஜனங்கள், கர்னாடக ஜனங்கள், படிப்பற்ற பாமர மக்கள், ஆசாரம் ஆசாரம் என்று பறை சாற்றும் குடுக்கைகள் ஆகிய எல்லோரும் நம்மைத் திட்டுவார்கள். இந்த மாதிரி விஷயங்களில் மேல் நாட்டாரின் கொள்கை மிகவும் நன்றாக

ஒரு விஷயத்தைப் படிக்கும்போது நமக்கு வேறு ஒருவித புதிய யோசனை தோன்றுகின்றது. அதை உடனே குறித்துக்கொள்ளாவிடின் அது மாயமாக மறைந்துவிடுகின்றது.

இருக்கின்றது. ஒருவன் மனத்திற்குப் பிடித்தமில்லை என்றால் அவளை உடனே தள்ளிவிட்டல்லவா மறு மணம் செய்கின்றார்கள். இழவெடுத்த இந்தியர்களுக்குத்தான் அந்த அரிய முறையைக் கையாளச் சட்ட மில்லையாம். என்ன அனியாயங்கள் பாருங்கள். "வெள்ளையர்களைப் போல நாமும் ஏன் நடக்கலாகாது?" என்றுதான் எனக்கு ஒவ்வொரு சமயமும் மனத்தில் தோன்றுகின்றது. என் பாடு நிம்மதி. இந்தக் கலியாண உபத்திரவத்திற்கு நான் ஆளாகவே இல்லை. என் பெற்றோரும் அதைக் குறித்து என்னிடம் அனாவசியமாகப் பேசுவது கிடையாது. என் மனமே எனக்கு இடமளிக்கையில்தான் நான் இவ்விஷயத்தில் இறங்க உத்தேசம். நீங்கள் மட்டும் ஏன் இந்த அனியாயக் கல்யாணத்தை அவசரமாகச் செய்து அனாதைச் சிறுவனுக்குக் காலில் கட்டினீர்கள். உங்களுக்கு அப்போது தெரியாதா! தெரிந்த பையன்தானே.

குஞ்சரி:—ஐயோ! எல்லோரும் கேட்க வேண்டிய கேள்விதான். எங்கள் போதாத காலத்தின் பயனால் இவ்விதம் முடிந்தது, எங்கள் குடும்பம் மேன்மையுற்று நாகரிக முறையில் திருந்துவதற்கு முன்னரே இக் கல்யாணம் ஏதேதோ யோசனையினால், சொல்ல முடியாத சில சிக்கல்களின் — ரகஸிய விஷயங்களின் — காரணமாக நடந்துவிட்டது. இனி என்ன செய்வது? நாங்கள் ஒன்று நினைத்தோம். கடவுள் ஒன்று நினைத்தார். ஏன்? உன்னிடத்தில் உடைத்துத் தான் சொல்லுகிறேன். பயமென்ன. இந்தப் பையன் எனக்கு ஒன்று விட்டு நாத்தனார் பிள்ளையாக வேண்டும். அந்தம்மாள் சிறு பிராயத்தில் இப் பையனை வைத்துக் கொண்டு கைம்பெண்ணாகி விட்டாள். அவளுடைய நிலைமையைக் கண்டு நாங்களே வைத்து ஆதரித்தோம். அவளும் சில மாதத்தில்—இக் குழந்தைக்கு 5 வயதில்—எங்களிடத்தில் விட்டு விட்டு இறந்து விட்டாள். ஏதோ பரதேசி என்று சோற்றைப் போட்டு வளர்த்தோம். என் புருஷனுக்கு திடீரென்று அதிகமான நோய் வந்து விட்டது.

கைப்பைத்தியத்தின் மூலம் சில குடும்பங்களில் ஓயாக் கலவரமும் சண்டையும் ஏற்பட்டுவிடுகின்றன. அக்குடும்பத் தலைவனின் அயாத்திற்கோ எல்லை இல்லை.

அத்தருணம் அவர் பிழைப்பது துர்லபமாகிவிட்டது ஒரு காரணம். அதோடு இன்னொரு முக்கிய காரணம் என்னவெனில் இந்தப் பையனுக்குப் பங்காளி வழியில் ஒரு சிற்றப்பன் இருந்தான். அவனுக்கு சமார் லக்ஷ ரூபாய்க்கு மேல் ஸ்திதி இருந்தது. அவனுக்கு வேறு சந்ததியே கிடையாது. அந்த சொத்து முற்றும் இப்பயலுக்குத்தான் என்றும் சேர வேண்டும்; ஆகையினால் இவனுக்கு நமது குழந்தையையே கொடுத்துக் கட்டி விட்டால் அந்த ஆஸ்தி பூராவும் நம் வசமாகி விடும் என்ற ஓர் யோசனையினால் நாங்கள் இதில் முனைந்தோம். "என் புருஷனுக்கும் உடம்பு இவ்வளவு தடபுடலாகி விட்டதே! ஒருக்கால் ஏதேனும் வித்தியாசம் நேரிட்டாலும் இந்த சொத்தைக் கொண்டு வாழலாம்" என்று நாங்கள் தீர்மானித்து அந்த மனிதனையும் அழைத்துக் கேட்டோம். அப்போது நீலாவுக்கு 5 வயது; அப்பயலுக்கு 7 வயது. இரண்டு வயதுதான் வித்யாசம்.

அந்த மனிதனும் அதற்கு இசைந்து காரியத்தை முடித்தான். கல்யாணத்திலேயே அவனைக் கண்டிப்பாக சொத்துக்களை கொடுக்கும்படியாக எவ்விதம் கேட்பது என்று சற்று அஞ்சினோம்; கல்யாணமும் நடந்தேறியது. அடுத்த வருடத்தில் இடி இடித்தது போல ஓர் செய்தி கிளம்பியது. கண்ணாலும் கண்டு விட்டோம். சிற்றப்பனாக இருந்தவன் ஓர் பெரிய கொள்ளைக் கூட்டத்துத் தலைவனாகவிருந்து அனேக விடங்களில் கொள்ளையடித்துப் பணத்தைப் பல ஏழைகளுக்கு உதவி புரியும் தொழிலை நடத்தி வந்தானாம். அவன் ஆதியில் வெகு காலம் வரையில் பூனா பக்கத்திலேயே இருந்து சமீபத்திலேயே அந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். நாங்கள் மேற்படி விஷயம் எதையும் அறிய மாட்டோம். உண்மையான சிற்றப்பன் இறந்து விட்டானாம். இவன் அவனைப்போல சிற்றப்பன் என்கிற பெயருடன் சென்னைக்கு வந்து இந்த கூத்து நடித்து விட்டான். திருட்டு வெளியாகி அவனைக் கைதியாக்கி

தொழிற்சாலையிலும் உழைத்துவிட்டு, குடும்பச் சேற்றிலும் புரண்டு கொண்டு, கடன்காரர்களுக்கும் பதில் கூறிக்கொண்டு அடங்காத மனைவியுடனும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் மனிதனின் கதியை நினைக்கின் தேகம் நடுங்குகின்றது.

விசாரித்ததில் தான் சிற்றப்பனுக நடித்த விவரத்தைத் தானே ஒத்துக்கொண்டான். உடனே சகலமான சொத்துக்களும் பறந்து போய் விட்டன. இந்த அவமானத்தைத் தாங்கமாட்டாத நாங்கள் இருந்த ஊரை விட்டு அப்போது தான் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தோம். இந்த பெரிய அவமானம் எங்களை வாட்டி விட்டது. சொத்து என்று நம்பி ஒரு சொத்தைக்கு என் குழந்தையைத் தள்ளினேன்."—என்று வெகு விசனத்தோடு தெரிவித்தாள்.

சினேகிதை:—ஆகா! இதென்ன ஆச்சரியம்! அந்தத் திருடன் செய்தி நிகழ்ந்து சுமார் 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டதே! அவனுலா ஏமாந்தீர்கள்? ஐயோ, அக்ரமமே! இவ் விஷயம் கதைகளில் படிப்பதுபோல் உள்ளதே யன்றி நேரில் நிகழ்வது போல் இல்லையே!

நீலா:—என் விதியின் பயனுல் இவ்விதம் திருடனைக் கண்டு ஏமாறும்படி யாகிவிட்டது. இந்தப் பிச்சைக்காரப் பயலால் நான் வருந்த நேர்ந்தது. சனியன் சென்றதை இனி ஏன் நினைக்க வேண்டும்.—என்று பலவிதமாக அவர்கள் பேசிக் கொண்ட விஷயங்களை எல்லாம் கதவின் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த குலசேகரனின் இருதயம் வெடித்து விடும் போலாய்விட்டது. அடடா! என்னுடைய சாவையா இவர்கள் எதிர்பார்க்கின்றூர்கள். ஐயோ! அந்த நோக்கமறியாது மானக் கெட்ட பிழைப்பு பிழைத்து விட்டோமே! ஏ நீலா! உன் மனத்திற்குள் புதைந்து கிடந்த விஷயத்தை முன்னரே வெளியிட்டிருப்பின் என் மனம் அப்போதே பரிபக்குவமடைந்திருக்குமே! உம்." என்று தனக்குள் தான் நினைத்துக் கொண்டு தன்னறையை அடைந்து கடித மெழுதத் துவக்கினுன்.

"நீலாவுக்கு உன்னுல் வெறுக்கப்பட்ட—இறந்துவிட வேண்டி எதிர் பார்க்கும் பிச்சைக்கார நாய்ப் பயல் எழுதுவது:—

வேண்டுமென்றே ஒருவரை முற்றிலும் கெடுப்பதற்காகச் சிலர் கங்கண மணிந்து வேலை செய்து மனிதரின் மனத்தை வாதனைக் கிலக்காக வைத்துவிடுகிறூர்களே யன்றி அவர்களுக்குள்ள புகழையும், கீர்த்தியையும் அடியோடு அழிக்க முடிவதில்லை.

என்னிடம் வெகு நாட்களாகவே உனது வெறுப்பைக் காட்டி வந்தாய். எனினும் நான் இவ்வுலகத்தினின்றும் எமனுலகத்திற்குச் செல்லும் நாள் எப்போது கிட்டும் என்று நீ, உன் பெற்றோர், சிநேகிதை உள்பட எதிர்பார்க்கிறீர்கள் என்பதை நான் கனவிலும் நினைக்கவில்லை. உனது மனம் உன் சிநேகிதையின் அண்ணனாகிய அங்கப்பன் மீது நாடுகின்றது என்பதையும் நான் இன்று ஊர்ஜிதமாக அறிந்தேன்; எனினும் நீயும் அவனும் அநேக இடங்களில் சந்தித்துப் பேசுகையில் உங்கள் மாதிரியை நான் கவனித்தேன். ஆனால் நான் அந்த விஷயத்தில் அனாவசியமாகத் தலையிடாமல் உங்கள் மேனாட்டு நாகரிகத்தின் சின்னங்களில் இதுவும் ஒன்று என்று நினைத்தேன். நீலா! நீ உன் மனோபீஷ்டப்படிக்கு இனி மறு விவாகம் தாராளமாகச் செய்து கொள்ளலாம். அதற்குத் தடையாக நான் இனி இவ்வுலகில் இல்லை. என்னுடைய மனத்தின் போக்கைக் கடவுளிடத்தில் முறையிடச் செய்கிறேன். கணவன் இறக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்த புண்ணியவதி இத் தாய் நாட்டில் நீ தான் முதன்மை பெற்றவளோ, அன்றி உனக்கு வழி காட்டிகளாக முன்னரே இன்னும் எத்தனை நாரீமணிகள் விளங்குகின்றார்களோ! உங்கள் செல்வத்து ஆசையின் பயனால் கள்ளனைக் கண்டு ஏமாற்றங் கொண்ட ரகஸியத்தையும் நான் இன்றே அறிந்தேன். இனி எனது சவங் கூட உன் கண் முன்பு அகப்படாது. எனக்கு இப்போது நினைவிற்கு வருகிறது. அதாவது, உன் தாயார் இன்று பகலில் வந்த ஒரு பிச்சைக்காரனைக் கண்டு "கிணறு, குளம் முதலியன இருக்கின்றன. அதில் விழுந்து சாவதற்கென்ன?" என்று கேட்டார்கள். அதுவே இப்போது எனக்குப் பெரிய பாடமாயிற்று. அத்தகைய ஆறு, குளங்கள் எனக்குக் கடவுள் கொடுத்திருக்கின்றார். சமுத்திரம் நிறைந்த இவ்வூரில் அவைகளையும் தேட

சுகம் துக்கம் இரண்டையும் சமமாக எண்ணி நடக்கும் ஞானிகளாகவே எல்லோரும் ஆய்விட்டார்களானால் இந்தியா கஷ்டமின்றி சுயராஜ்யம் அடைந்துவிடலாம், இத்தனை ஆயிரம் ஜனங்கள் சிறைக்கூடம் புகாதிருக்கலாம் அந்த ஐக்யபாவம் எது? அதைத்தான் காணவில்லை.

வேண்டியதில்லை. நீயும் உன் தாயும் "ஊரில் வருகிற வாந்திபேதி இவனுக்கு வரலாகாதா! ஊரில் யார் யாரோ சாகின்றார்களே! இவனுக்கு அந்த சாவு வரவில்லையே!" என்று கூறிய வார்த்தைகளை நான் மறு உலகத்திலும் மறக்க மாட்டேன்; மாட்டேன். எனக்கு நற்புத்தி புகட்டிய உத்தமிகளாகவே நான் உங்களைக் கொண்டாடுகின்றேன். ஒரு வகையில் எனக்குச் சாந்தத்தை ஊட்டித் தேச பக்தியில் முதிரச் செய்த குருவாகவும் உங்களை நான் மதிக்கின்றேன். பூர்வ ஜென்மத்தின் ரணுனு சம்மந்தம் நமக்கு இதுகாறும் இருந்தமையினால் உங்கள் வீட்டு அன்னத்தைப் புசித்தேன். உனக்குக் கணவனென்கிற முறையில் பெயரளவில் பொம்மைபோல விருந்தேன். இனி அது நிவர்த்தியாகும் காலம் வந்து விட்டது.

நீலா! உனக்கும் உன் பெற்றோருக்கும் ஒரு வார்த்தை சொல்லுகிறேன்; அதாவது, நீங்கள் செல்வச் செருக்குடனும் தாய் நாட்டின் பழக்கத்தை உதறித் தள்ளிவிட்டு அன்னிய நாட்டுப் பழக்கத்திற்கு அடிமையாயுமிருப்பதனாலேயே உலகத்திலுள்ள ஆயிரக் கணக்கான ஏழைகளின் உருவம்,—பரிதபித்த நிலைமை—உங்கள் கண்ணிற்குத் தெரியவில்லை; எனினும் கடவுள் அவ்வேழைகளின்பால் தன் கிருபா நோக்கத்தைச் செலுத்தி உங்களுக்கு அந்த செருக்கின் அழிவை சீக்கிரத்தில் எடுத்துக் காட்டுவான் என்பதை மறக்காதீர்கள். உங்கள் பணமும், நீர்மேல்க் குமிழி போன்ற சந்தோஷமும் நிலைத்ததல்ல. அநித்யமானதற்கு அழிவு உண்டு. பிச்சைக்காரக் கிழவனை உன் தாய் சொல்லிய சொல்லை அவள் இறக்குந் தறுவாயிலாவது நினைக்கும்படியே யாகும் என்பது ஞாபகத்திலிருக்கட்டும். என் பிணத்தையும் நீங்கள் தேடவேண்டாம். கிடைப்பினும் உங்கள் கையினால் கிரியை எதுவும் செய்யவேண்டாம், அதற்குத் தகுந்த ஏற்பாட்டுடன்தான் நான் உயிர்

"என்னுடைய அந்தரங்கத்தை உன்னிடம் கூறவில்லை" என்று கோபிக்கின்றாய். பிறர் விஷயத்தை நீ என்னிடம் கூறியது போலல்லவா நீ என் விஷயத்தையும் பிறரிடம் தெரிவிப்பாய்.

விடப்போகிறேன். நீங்கள் இனி சுகமாக வாழுங்கள். பாவி தொலைந்தான் என்று பாலன்னம் புசியுங்கள். மறு மணம் செய்து மகிழ்ச்சியாக விளங்குங்கள். நீலா! உனக்கும் சேர்த்து நமஸ்காரம். உன் வீட்டுப் பிச்சைக்காரனாகிய நான் நமஸ்காரம் செய்ததில் வியப்பில்லை.

இங்ஙனம்

குலசேகரன்."

என்றதை எழுதி வைத்தான். தனது துணி மூட்டைகளை மட்டும் விடாது எடுத்துக்கொண்டான். அவ்வறையில் தான் அதுகாறும் பூஜை செய்துவந்த ஓர் வேணுகோபாலனின் படத்தைப் பார்த்து மண்டியிட்டு "என்னப்பனே! உனக்கும் எனக்கும் இந்த இடத்தில் உள்ள சம்மந்தம் இத்துடன் பிரிந்துவிட்டது; எனினும் நீ எங்குங் கண்ட திருமேனியன். இப்பட உருவத்தினால் மட்டும் உன்னைப் பார்க்கவியலாது போனது ஒன்றுதானே யன்றி என் மனத்தினால் சதா பார்த்துக் களிக்கச்செய்யும் பேரானந்த மூர்த்தியல்லவா நீ! என்னப்பனே! எனது ருணங்கள் தீர்ந்தன. இனி இவ்வுலகிலிருக்க என் மனம் இடந்தரவில்லை. என்னை எவ்வழியிலாவது உன்னடி சேர்த்துக்கொள். பொருளிலார்க்கு இவ்வுலக மில்லை; நின்னருளிலார்க்கு அவ்வுலக மில்லை. இரண்டுமில்லார்க்கு எவ்வுலகமும் இல்லை. தந்தை தாய் தமர் தார மகவு இவையெலாம் சந்தைக்கூட்டத்திற்கு ஒப்பானதுதான். மனைவி என்று எண்ணி ஏமார்ந்த என் போன்ற மூடாத்மாக்களை உலகில் இனி சிருஷ்டிக்காதே! என்னுடைய சகலமான செல்வமும் நீதான். எனக்கினி வேறு பற்றுதலை யளிக்காதே! கிருஷ்ணா! குழல்கொண்டூதி கோபியருக்கு மோக்ஷ மளித்த கோபாலா! குவலயத்தை எல்லாம் குட்சியில் அடக்கியுள்ள கோவிந்தா! எம்பெருமான் என்று ஏற்றித் தொழும் அடியர்க்கு அபயந் தந்த ஆதிமூலா! குன்றைக் குடை பிடித்துக் கோபாலர் குறை தீர்த்த குணாநிதே!

ஒருவர் ஒரு விஷயத்தில் அபரிமிதமான சக்தியோடு விளங்குகிறார்; ஆனால் அந்த சக்தி என்றும் அழியாதிருப்பது நிச்சயமில்லை, எல்லாம் கர்மாவின் கூற்றுபோல மாறுகின்றன.

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
வையந் தன்னோடும் கூடவேதில்லை யான்
ஐயனே! அரங்காவென் றழைக்கின்றேன்
மையல்கொண் டொழிந்தேனென்றன் மாலுக்கே!

—குலசேகராழ்வார்.

இவ்வுலக வாழ்வில் என்னென்ன மாயத்தை யுண்டாக்கி இருக்கின்றாய் என்னப்பனே! உன் மெய்யான நிலையை உணராமல் பாபத்தைச் செய்வதற்கு அஞ்சாது நிற்கும் மூடர்களுக்கு நற்புத்தி கற்பிப்பாய் அப்பனே! நான் இவ்விடம் விட்டுச் செல்கிறேன். என் மீது கருணை பாலிப்பாய் கண்ணா!" என்று வேண்டிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு மூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டான். ஜன்னல் வழியாக வீதிப் பக்கத்தை நோக்கினான். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருக்கிறது. நமது குலசேகரன் ஒருவனைத் தவிர வேறு எல்லாப் பிராணிகளும் சலனமற்று நித்திரை செய்கின்றார்கள். எல்லாவிடத்திலும் அமைதியே மயமாக இருக்கிறது. வானத்தில் நிலவு அன்று பின் ஜாமத்தில் உதயமாகப்போவதால் ஆங்காங்கு நக்ஷத்திரங்கள் மட்டும் நமது இளவலுக்குத் துணை புரிய வந்திருந்தன. வானத்தில் மேகம் பூர்ணமாக மூடிக்கொண்டே வருவதால் "தடதடா, படபடா" என்ற இடி முழக்கங்கள் சப்திக்கத் தலைப்பட்டன. அதே நிலைமையில் நமது குலசேகரன் தனது மூட்டையுடன் அவ்வறையை விட்டு வெளிப்போந்து வேலையாட்கள் நித்திரை செய்கிறார்களாவென்று கவனித்தான். எல்லோரும் பிரம்மானந்தமாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

இதைக் கண்ட வாலிபன் "வீதிப்புறத்தில் சென்றால் யாரேனும் கண்டுவிட நேரும்" என்று நினைத்துப் புறக்கடைப் பக்கமாகக் கதவைத் திறந்துகொண்டு வீட்டை விட்டு வெளியில் வந்தான். இருள் சூழ்ந்திருப்பதோடு சிறுசிறு தூறலும் ஆரம்பமாகிவிட்டது.

வினா—உமக்கு என்ன தொழில் ஐயா!

விடை—நான் எதிலும் பட்டுக்கொள்ளாமல் விலகி நிற்பதே என் தொழில்; அதனால் தான் நான் உயிர் வாழுகிறேன்.

காற்று ஒருபுறம் சுழற்றிச் சுழற்றி அடிக்கத் தலைப்பட்டது. அச்சமயம் இவனுடைய மனது எவ்விதமான நிலைமையிலிருக்கின்றதோ! இவன் பரதேசித் தன்மையினால் என்ன கதியை அடைந்து தவிக்கின்றானோ, இவைகளைக் கண்டு மனமுருகுவதுபோல ஆகாயம் கண்ணீர்விட்டழ ஆரம்பித்தது. "எங்கும் நிசப்தம் என்று பயப்படாதே! நான் அருபியாகவே பெருத்த சப்தத்தை உண்டாக்கி உனக்குத் துணைபுரிகின்றேன்" என்று இடி இடிக்கின்றது. "நீ உலகத்தில் ஒருவரையும் நம்பாதே! இதோ, இஜ்ஜோதியைப் போன்றவன் கடவுள் ஒருவன்தான் அவனை நம்பு" என்று காட்டுவதுபோல மின்னல் 'பளீச் பளீச்' என்று மின்னுகின்றது.

இந்நிலைமையில் கொஞ்சம் தெரிந்த நக்ஷத்திரங்களும் அடியோடு மறைந்துவிட்டன. மழைத் தண்ணீர் வெள்ளமாக ஓடுவது போல நமது இளவலின் கண்ணீரும் வெள்ளம் பெருகி ஓடுகின்றது. "கருணாமூர்த்தே!" என்று வேண்டித் தொழுதவாறே அவன் மழையையும் கவனியாது வழிநடக்கலானான். நேரம் செல்லச்செல்ல மழை நன்றாக வலுத்துவிட்டது. அசாத்ய மழையின் கொடுமையில் நடக்கமாட்டாது ஒரு மரத்தினடியில் அப்படியே நின்றுவிட்டான். அப்போது இரவு மணி இரண்டு இருக்கலாம். ஓயாமல் ஒரு மணி நேரம் மழை விடாது பெய்து, பிறகு மூன்று மணி சமாருக்கு நின்றுவிட்டது. நின்ற பிறகு குலசேகரன் மீண்டும் நடக்க வாரம்பித்தான். தான் கொண்டுவந்த மூட்டை பூராவும் நனைந்துவிட்டது. அதனால் பாரம் அதிகரித்துவிட்டது. அவைகளை நன்றாகப் பிழிந்து ஒரே மூட்டையாய்க் கட்டி தலைமீது தூக்கிக்கொண்டு நடக்கவாரம்பித்தான். மூன்று மணி சமாருக்கு ஆகாயத்தில் மேகங்கள் கலைந்து கீழ்வானத்தில் சந்திரன் உதிக்கும் பிரகாசம் கொஞ்சம் உண்டாயது. குலசேகரன் "எங்கு நடக்கிறோம், எங்கு செல்லவேண்டும்?" என்பதை அறவே மறந்து கால்சென்ற விடமெல்லாம் நடந்து சென்றான்.

வினா—ஐயா! எந்த நேரமும் என்னை எனது குடும்பத்தின் விசனமே சுற்றிக்கொள்கிறதே என்ன செய்வது?

விடை—"கூறாமல் சன்யாசம் கொள்" என்கிற ஔவையின் வாக்கைப் பரிபாலிப்பது.

கால் விலவிலக்க வாரம்பித்தது. சிறிது தூரத்தில் ஓர் சத்திரம் காணப்பட்டது. அந்த சத்திரத்துத் திண்ணையில் சுமார் 25 ஏழைகள் அந்த குளிரில் போர்த்துக்கொள்வதற்கும் ஒரு துண்டு இல்லாமல் உடம்பை ஒடுக்கி சுருட்டிக்கொண்டு, ஆண்பாலரும் பெண் பாலரும் சமமாகப் படுத்திருந்தார்கள்.

இந்த ஏழைகளைக் கண்ட நமது இளவலுக்கு மனம் உருகிக் கருகிவிட்டது. "அந்தோ! இத்தகைய ஏழை மக்கள் இந்த ஒரு திண்ணையில் கள்ளம் கபடற்று ஒண்டிக்கொண்டு நித்திரை செய்கிறார்கள்! இவர்களைப்போன்ற இன்னும் கோடிக் கணக்கான ஏழைகள் நமது நாட்டில் எத்தனைபேர் இருக்கின்றார்களோ! கடவுளே! சிறு குழந்தை தாயின் முந்தானியில் படுத்துக் கிடக்கத் தாயானவள் தேகத்தைச் சுருட்டிக்கொண்டிருக்கிறாள். மழையின் சாரல் தெருத் திண்ணையின் பாதி பாகத்தை நனைத்து இவர்கள் கால்களையும் துணிகளையும் நனைத்திருக்கின்றதே என்ன கண்றாவி கோரம்! இங்கு இத்தகைய கஷ்டங்களை யனுபவிக்கும் ஏழைபால் மனமிரங்கிக் காக்கும் அரசாங்கம் நமக்கிருப்பின் இத் தகைய ஏழைகளைக் கண்ணால் காணக்கூடுமா! மேல் நாட்டில் ஏழை பிச்சைக்காரர்கள் இம்மாதிரி இருக்கின்றார்களா! இல்லையே! அவ் வாறு எவரேனும் இருப்பார்களாயின் அவர்களின் ஏழ்மையைப் போக்கத்தக்க விதமான மார்க்கத்தை அந்த அரசாங்கத்தார் செய்து விடுகிறார்கள். கோடிக்கணக்கான ஏழைகளின் துன்பத்தை ஆற்றுவ தற்கன்றோ மகாத்மா காந்தி முதலிய பெரியோர் அரும்பாடு படு கின்றார்கள். ஏ ஏழை மக்களே! எங்கள் பரிதாபம் இப்படி இருக்க பணக்காரர்கள் என்ன போக பாக்கியத்தில் துளைகின் றார்கள். என்ன உற்சாகத்தில் உடல் பூரிக்கின்றார்கள். தெம்பினால் தேகம் கொழுக்கின்றார்கள். ஹா! என்ன உலகம்! உங்கள் வாழ்க் கைதான் பழியற்றது; வசையற்றது. சலனமற்றது. உங்களுடன்

வினா—எங்கு தேடினாலும் என் மகளுக்கு நல்ல வரன் கிடைக்கவில்லை. வந்து பார்க்கிறவர்களும் பேசாது போய்விடுகிறார்கள் என்ன செய்வது?

விடை—பேப்பரில் விளம்பரம் செய்வதோடு அழகிய பெண்ணின் உருவப்படத்தையும் பிரசுரித்துவிட்டால் கவலை தீர்ந்து விடுகின்றது.

நானும் தங்குகிறேன்" என்று பலவிதமாக எண்ணியபடியே அந்த திண்ணையின் ஒரு பகுதியில் உட்கார்ந்தான்.

மணி 5 அடிக்கும் சமயத்திற்குக் கீழ்வானம் வெளுத்தது. அங்கு நித்திரை செய்துகொண்டிருந்த ஏழை மக்கள் எல்லோரும் எழுந்தார்கள். தங்கள் மக்கள் மனிதருடன் தங்கள் தொழிலைப் பற்றிப் போகவேண்டிய இடத்தைப் பற்றிப் பேசவாரம்பித்தார்கள். இவைகளை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த நமது குலசேகரன் அவர்களை நோக்கி "ஐயன்மீர்! நீங்கள் எல்லோரும் எந்த ஊர் ஆசாமிகள்?" என்று கேட்டான். அவர்களில் தலைவனாக விளங்குபவன் பேசத்தொடங்கி "சாமி! நாங்கள் இந்த ஊரல்ல. நாங்கள் இருப்பது நாட்டுப்புறம். பிழைப்பதற்கு வழி கிடைக்கவில்லை. மானம் காய்ந்துபோய்விட்டதால் வயல்களிலும் வேலை இல்லை. வெளி இடங்களில் எங்கேனும் வேலை கிடைக்குமோ என்று எல்லோரும் திரளாகச் சென்னப்பட்டினம் வந்தோம். எந்த இடத்திலே விசாரித்தாலும் வேலை கிடைக்கவில்லை ஆகையினால் இந்த ஊரில் வண்டி இழுக்கிற கூலி வேலையாவது கிடைத்தால் ஏழைகளாகிய எங்களுக்கு அரை வயிறு கஞ்சிக்குக் கிடைக்கும் என்று நினைத்தோம். எங்கேயும் வேலை இல்லை. அங்கங்கே எங்களைப்போல வேலை கிடைக்காமல் தவிக்கும் பேர்வழிகளை நாங்கள் பார்த்து இந்த இடமும் பயனில்லை என்று ஊர் திரும்புகிறோம். கையில் பணமில்லை. ஆகையினால் நடக்கவாரம்பித்தோம். மழை பலமாக வந்ததால் நாங்கள் இங்கு தங்கினோம். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

இந்த வரலாறு நமது குலசேகரனின் மனத்தை உருக்கியது. இந்த ஏழைகளின் வரலாற்றைக் கேட்டும், அவர்கள் கஷ்டப் படுவதைக் கண்டும் இவன் மனம் மாறிவிட்டது. தன் உயிரை விட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்து வந்தவனின் மனம் அந்தக் காரியத்தில் சற்று பின்னடைய வாரம்பித்தது. "கேவலம் பணத்

வினு—என் பிதாவோ பணம் கொடுக்க மறுக்கிறார்; எனக்குச் செலவோ அதிகம்; வருமானமோ இல்லை. என்ன செய்வது?

விடை—சில மாறு சாவிகள் வைத்துக்கொண்டால் சரியாகிவிடுகிறது.

திமிர் கொண்டவர்களின் வார்த்தைக்காக நாம் ஏன் அநியாயமாய் மாண்டு போக வேண்டும். நம்முடைய தேகத்தை இத்தகைய ஏழைகளுக்காக அர்ப்பணம் செய்து நம்மாலான உதவியை இவர்களுக்குச் செய்து நாம் நற் கதியை அடைவதை விடுத்து வீணாக ஏன் உயிர் துறக்க வேண்டும்........ஆம்;....என் மனச் சாட்சி எனது உடல், பொருள், ஆவியை இந்த ஏழைகளுக்கே தத்தம் செய்து விடும்படியாகக் கூறுகின்றது. அப்படியே செய்யத் தடையில்லை....அந்த செருக்காளர்களுக்கு வேறு வழியைக் காட்டுகிறேன்" என்று தீர்மானித்தவனாய், அவர்களை நோக்கி "அன்பர்களே! நானும் உங்களைப் போன்ற ஓர் ஏழைப் பரதேசிதான். ஆயினும் நீங்கள் படிப்பின் மணமறியாதிருக்கின்றீர்கள். நான் சற்று படித்தவனாக இருக்கிறேன். என்னுடைய தொழில் என்னவெனில் உங்களைப் போன்ற ஏழைகளுக்கு என்னால் கூடிய உதவியைச் செய்து ஆதரிப்பதேயாகும். கடவுள் அதையே எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். நானும் அநேக ஏழைகளுக்கு உதவி செய்ய ஆசைப்பட்டு கால் நடையாகவே சுற்றிக் கொண்டு வருகிறேன்." என்றான்.

இது கேட்ட ஏழைகள் மிக்க சந்தோஷத்தையடைந்து உடனே அவனைக் கூட அழைத்துக்கொண்டு நடக்க வாரம்பித்தார்கள். குலசேகரன் தங்களைக் காப்பாற்றும் கடவுளாகவே தமக்கு வந்து அமைந்தான் என்று எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியுடன், "சாமீ! நீங்கதான் எங்களுக்கு குலதேவதை. எங்கள் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு நீங்கள்தான் கடவுள் போல வந்திருக்கிறீர்கள்." என்று வாயாரத் தோத்திரம் செய்தார்கள். எல்லோரும் உலகாபிராமமாய்ப் பேசிக் கொண்டே; வெகு தூரம் நடப்பதும் சிரமம் தெரியாது காலை சுமார் 9 மணிக்கு ஒரு ஊரின் சத்திரத்தை அடைந்தார்கள். இவர்கள் சுமார் 15 மைல் தூரம் நடந்ததினாலும், வெயில் சற்று உக்ரமாய்க் கிளம்பிவிட்ட படியாலும் அந்த சத்திரத்தி

வினா—அற்பரிடத்தில் சகவாசம் செய்தால் என்ன கிடைக்கும்?

விடை—ஆயுள்காலம் முற்றும் மறக்காமலிருக்கக்கூடிய அனுபவங்கள் கிடைக்கும்.

லேயே வெயிலுக்குத் தங்கி வெயில் சாய்ந்ததும் புறப்படத் தீர்மானித்தார்கள்.

சத்திரத்தில் இவர்களைப்போல இன்னும் அனேக ஏழைகள் வந்து தங்கி இருந்தார்கள். அவர்களெல்லாம் கஞ்சி காய்ச்சுவதற்கான பண்டத்தைக் கொண்டு வந்திருந்தமையினால் சுள்ளிகளைச் சேர்த்துக் கல்லுகளை அடுப்பாக வைத்து மூட்டிக் கஞ்சி காய்ச்சுகிறார்கள். இங்கு புதியதாக வந்த ஏழைகளின் சிறிய குழந்தைகள் முதல் நாள் பூராவும் அன்னமில்லாது ஏதோ சிறு பண்டங்களைத் தின்று தண்ணீர் குடித்திருப்பதால் பசி மிகுந்துப் போய் கஞ்சி காய்ச்சும் அடுப்பருகில் சென்று "பசிக்குதே! பசிக்குதே!" என்று சில குழந்தைகளும், "எப்போது கஞ்சியாகும்?" என்று மற்ற சில குழந்தைகளுமாக கேட்டுக் கொண்டு நிற்கவாரம்பித்து விட்டன.

எத்தனையோ சிரமப்பட்டு அந்த ஏழைகள் எத்தனையோ நாளையப்பசியைத் தணித்துக் கொள்ளப் பிச்சை வாங்கி கஞ்சி காய்ச்சுகையில், அதைக் கண்ட குழந்தைகளின் நிலைமையைப் பார்க்க அவர்களுக்கு ஒரு புறம் கோபமும், ஒரு புறம் இரக்கமும் பாதித்தது; அவ் விரண்டு உணர்ச்சியின்படிக்குப் பேசவாரம்பித்தார்கள். இவைகளை எல்லாம் கண்ணுற்ற நமது சாந்தகுண வாலிபன் "ஆகா! என்ன பரிதாபம்! என்ன பரிதாபம்! ஐயோ! இக் குழந்தைகளின் பசியை எங்ஙனம் ஆற்றுவோம்?" என்று யோசித்தான். இவனுக்கோர் யோசனை தோன்றியது. உடனே அங்கு வந்த ஏழைகளின் தலைவனை அழைத்து "ஐயா! என் மனத்தில் ஒரு யோசனை தோன்றுகின்றது. அதோ இரு கண்ணுமற்ற குருட்டுக் குழந்தை இருக்கின்றதே அது யாருடையது?" என்றான். "அது எங்கள் கூட்டத்தைச் சேர்ந்தது தான்" என்றான். உடனே குலசேகரன் சற்றும்

இரவும் பகலுமாக ஆறுமாத காலம் ஒரு சிநேகிதையிடமிருந்து சங்கீதத்தையெல்லாம் கற்றுக்கொண்டு, பிறகு அதைத் தான் வேறொருவருக்குக் கற்றுக் கொடுத்து அவர்களிடமிருந்து வெகுமானம் வாங்கிக்கொண்டபிறகு, தனக்கு முன்னர் கற்றுக்கொடுத்த சிநேகிதைக்கே தான்தான் சங்கீதம் கற்றுக் கொடுத்ததாக மார் தட்டிப் பேசுகின்றாளாம்ஒருத்தி. இது முழு பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது போலல்லவா இருக்கிறது? இது கலிகாலத்தின் கூற்றுபோலும்.

அசங்கியமின்றி அக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அதன் தாயாரையும் கூட அழைத்துக் கொண்டு அந்த சத்திரத்திற்கு அருகிலுள்ள அக்ரகாரத்திற்குச் சென்று தெருவோடு "அம்மா! தாயே! தர்மப்ரபுக்களே! இந்தக் கண்ணில்லா கபோதிக்கு ஒரு கை பழுது கொடுக்க வேண்டும்" என்று பிச்சை கேட்டவாறு இயற்கையான சாரீரத்துடன் பாடத் தொடங்கினன்.

("மாங்காய்ப் பாலுண்டு" மெட்டு)

(1) கபோதியைக் கண்டு கருணை செய்குவீரே!
அபாரச் செல்வர்களே!—ஐயா! க.

(2) ஏழைகட் கிரங்கியே ஏதேனும் அளிப்போர்க்கு
ஆழியன் அருள் பெருகும்—அம்மா! ஏ.

(3) நாட்டில் நலிந்தோர்க்கு நாமே உதவாவிடில்
கேட்டோர் நகைத்திடாரோ—ஐயா! நா.

(4) கஞ்சி யின்றி வாடிக் களைப்புறும் ஏழைக்கு
அஞ்சேலென் றளித்திடுவீர்—அம்மா! க.

(5) என்னாளும் காப்பது இணையில்லா தருமமே!
என்னாளு மளித்திடுவீர்—ஐயா! எ.

என்னம்மணீ! தாயே! கண்ணில்லாக் கபோதி. பசியின் கொடுமையினால் உயிர் துடிக்கின்றது. ப்ராணன் போய் விடும் போலிருக்கிறது. என் தாயே! ஏதேனும் உபகாரம் செய்ய வேண்டும்." என்று வெகு உருக்கமாகப் பாடி பிச்சை கேட்டான். இந்த பாட்டின் இனிமையைக் கேட்டு வீதியில் கூட்டம் கூடி விட்டது.

எல்லோரும் "ஆஹா! என்ன அருமையாய்ப் பாடுகிறான். பிச்சைக்காரர்களுக்கு ரவை என்ன பழக்குகின்றது! அடடா!"

வினா—உள்ளொன்றும் புறமொன்றும் பேசும் வஞ்சகரிட மிருந்து எவ்விதம் விலகுவது?

விடை:—அவர்களைப் பற்றிப் பிறரிடம் சில வார்த்தைகள் கூறிவிட்டால் உடனே விலகிக்கொள்ளக் கூடிய சம்பவங்கள் நேர்ந்துவிடும்.

என்று எல்லோரும் கொண்டாடி "இன்னும் ஒரு பாட்டு பாடு" என்றார்கள். நமது இளவலுக்கு இந்த பிச்சை எடுக்கும்போதெல்லாம் தன் மாமியார் பிச்சைக்காரக் கிழவனை அடித்துத் துரத்தியது கண்ணெதிரிலேயே தோன்றியது. அந்த அக்கிரகாரத்திலுள்ளவர்களெல்லாம் சாமானிய பணமுடைய ஜனங்களாகையினால் அதிகமாக அடித்துத் துரத்த வேண்டுமென்ற கல் மனமும் நாகரிக மோகமும் வரவில்லை. ஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி,

> தந்தை தாய் தமர்மக வேனுமவை யெலாஞ் சகத்திற்
> பந்தமா மென்றே யருமறை வாயினாற் பகர்ந்த
> வெந்தை நீயெனை யின்னமவ் வல்லலிலிருத்திச்
> சிந்தைதான் றெளிந் தெவ்வணமுய் வணஞ் செப்பாய்.

என்கிற தாயுமானார் பாடலை அருமையாகப் பாடித் தன் வருத்தத்தையும் தீர்த்துக்கொண்டான். ஜனங்கள் எல்லோரும் இந்த குருட்டுக் குழந்தையைக் கண்டு பரிதாபப்பட்டும், பாட்டைக் கேட்டு சந்தோஷப்பட்டும் தங்கள் தங்கள் சக்தியானுசாரம் அரிசியாயும் சில்லரையாயும் கொடுத்ததோடு "ஐயா! உங்களைப் பார்த்தால் இராஜ வடிவாக இருக்கிறீர்கள். இந்தக் குழந்தையையும் இந்தம்மாளையும் பார்த்தால் அசல் பிச்சைக்காரர்களாக இருக்கின்றார்கள். இதென்ன விஷயம் விளங்கவில்லை" என்றார்கள்.

குலசேகரன்:—அன்பர்களே! கடவுள் சிருஷ்டியில் நிறங்கள் அமைவதும், அழகு அமைவதும் வியப்பல்ல. இந்தம்மாள் எனது ஒன்று விட்ட தங்கையாகும். என் பெற்றோர் மிக்க சிவப்பாக இருந்தார்களாம். அவரவர் ஆடையை சுத்தமாகத் துவைத்து, தினம் ஸ்நானம் செய்து தேகத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டு அதிகம் வெயிலில் அலையாதிருப்பின் நிறம் மாறாதிருக்கிறது. நான் சொல்லியவண்ண மின்றி நேர் விரோதமாகவிருப்பின் எல்லாம் மாறிவிடுகின்றது. நான் ஓர் செல்வவந்தர் வீட்டில்

வினா:—துஷ்ட மனைவியைத் திருப்பும் விதம் எப்படி?

விடை:—தாய் வீட்டோடு தள்ளிவைத்து எட்டிப்பாராதிருந்தால் தானே திரும்பிவிடுவாள்.

கஜானு அறையைக் காவல் காக்கும் வேலையைச் செய்து வந்தேன்; அதனுல் அதிக அலைச்சலே இல்லை. அதோடு தினம் இருகாலமும் ஸ்நானம் செய்து சுத்தமாக இருந்தேன். இயற்கையிலேயே என்னுடைய தேகம் சிகப்பாகையினுல் அது பார்ப்பதற்குப் பழுதின்றி இருக்கின்றது. இந்தம்மாளுக்கு வயலில் வேலை செய்வதும், வெளியில் திரிவதுமான வேலையே இருப்பதால் இவ்விதமிருக்கிருர்கள்—என்று பொருத்தமாகக் கூறிவிட்டான்.

பிறகு எல்லோரும் அவ்விடம் விட்டுச் சென்று வேறு சில இடங்களில் யாசித்துக்கொண்டு போவதற்குள் மணி பன்னிரண்டு ஆய்விட்டது. அன்று கிடைத்த அரிசி, சில்லரை எல்லாவற்றையும் நமது வீரன் சோதித்துப் பார்க்கையில் அரிசி 4 படி இருந்தது; சில்லரை அரை ரூபாய்க்குச் சேர்ந்தது. அவைகளைக் கொணர்ந்து கற்களை அடுப்பாக வைத்துச் சுள்ளிகளைப் பொறுக்கி, குலசேகரன் தானே அடுப்பு மூட்டி, அங்குள்ள மற்றையோரிடத்தில் ஓர் பானையை வாங்கி, அதில் இந்த அரிசியைப் போட்டு சாதம் செய்யத் துவக்கினுன். மற்ற ஸ்திரீகளும் புருஷர்களும் "நான் செய்கிறேன்; நான் செய்கிறேன்" என்று கேட்டார்கள். குலசேகரன் அவர்களை எல்லாம் நன்ருக ஸ்நானம் செய்துவிட்டு வரும்படியாக அனுப்பிவிட்டுத் தான் அடுப்பில் சாதத்திற்கு வைத்துவிட்டுச் சில்லரையை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்று குழம்பிற்கு வேண்டிய சாமான்களை வாங்கி வந்து சாதம், குழம்பு இரண்டையும் தானே செய்தான். அவன் படிக்குங் காலத்தில் சாரணர் கூட்டத்தில் சேர்ந்து சமையல் செய்யப் பயிற்சி பெற்றிருக்கின்றுனுகையினுல் அவனுக்கு எல்லாம் வெகு எளிதாக வந்துவிட்டது.

தான் கொண்டுவந்த கதர்த் துணிகளை ஏற்கெனவே உலர்த்தி வைத்திருந்ததை எடுத்து ஒவ்வொருவருக்கு ஒன்ருக இறைத்து

வினு:—எந்த நேரமும் ஒருவிதமான கவலையும் இல்லாமலிருப்பது எப்பொழுது?

விடை:—சவமாகிய பிறகு தான்; அதுவரையில் ஒரு வினடிப் பொழுதும் கவலையின்றி வாழமுடியாது.

விட்டான். எல்லோருக்கும், முக்கியமாகக் குழந்தைகளுக்குப் பரிமாறினான். சாப்பாட்டிற்குள்ளவர்கள் 25 பேரிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் பட்டினியாகக் கிடந்ததோடு, காபி குடிக் கடிமையாகி வயிற்றை துர்தச் செய்யும் பட்டினவாசிகளல்லாது, நாட்டுப்புறத்தாசாமிகளாகையினால் நன்றாகப் புசிக்கக் கூடியவர்கள். ஏற்கெனவே அழுத குழந்தைகள் பெரியவர்களைவிட தாட்டியாகப் புசித்து விட்டதால் சாதம் சற்று இழுப்பாகிவிட்டது. எல்லோருக்கும் நிரவிப் போட்டுவிட்டுத் தானும் அவர்களோடு ஒரு கவளம் உட்கொண்டு அந்தப் பொழுதைக் கடத்தினான்.

இந்த ஏழை மக்களுக்கோ உண்டான ஆநந்தத்திற்கும் ஆச்சரியத்திற்கும் எல்லையே இல்லை; அவர்களின் மனமும் வயிறும் அன்று குளிரப் போகிறதென்று அவர்கள் கனவிலும் கருதவில்லையாதலால் பெரும் மகிழ்ச்சியடைந்து தம்தம் மனம் போனவாறெல்லாம் இளவலைப் போற்றிப் புகழ்ந்து பேசி "எங்க குல தேவதையே! இண்ணிக்கு நாங்கள் பட்டினியாகத்தான் சாகப் போகிறோம் என்று நினைத்தோம்; உங்கள் தயவால் பிழைத்தோம்" என்று பலவாறு கொண்டாடினார்கள்.

பொழுது சற்று சாயும் வரையில் இளைப்பாறினார்கள். மணி மூன்று அடித்ததும் எல்லோரும் எழுந்து பழயபடி நடக்கலானார்கள். நமது கதா நாயகன் அவர்களுக்குச் சிரமம் தட்டாமலிருக்க ஏதோ அரிய கதைகளையும், காந்தி மகானுடைய சரித்திரத்தையும், தேச நிலைமையின் பரிதாபத்தையும் எடுத்துச் சொல்லிக்கொண்டே சிரமமின்றி வழியை மாள வைத்தான். இரவும் வந்து இருள் சூழ்ந்துவிட்டதால் அதற்குமேல் நடக்கமாட்டாது சுமார் ஏழு மணிக்கு வேறு ஒரு ஊரை அடைந்து அந்த ஊர் சத்திரத்தில் தங்கலானார்கள். இராச் சாப்பாட்டிற்கு என்ன செய்வதென்று யோசித்தான். சத்திரத்தின் தெருத் திண்ணையில்

வினா:—பந்துக்களை விரோதித்துக்கொள்ளாமலிருப்பதற்கு யாது வழி?

விடை:—சாவு, வாழ்வு, இரண்டிற்கும் விடாது செல்வது தான் சிறந்த வழியாகும்.

எல்லோரும் உட்கார்ந்தார்கள். அப்போது சற்று சமீபத்தில் உள்ள கோயிலில் மணி அடிக்கும் ஓசை கேட்டது. உடனே நமது இளவல் கூட சிலரை மட்டும் அழைத்துக்கொண்டு அந்த கோயிலுக்குச் சென்றான். கோயில் தர்மகர்த்தாவைக் கண்டு “ஐயா! நாங்கள் தேசாந்திரிகள் வந்திருக்கிறோம்; கொஞ்சம் சாப்பாடு வேண்டும். ஏதேனும் பிரசாதம் கிடைத்தால் போதும்” என்றான்.

இதைக்கேட்ட தருமகர்த்தா குலசேகரனை உற்று உற்றுப் பார்த்தார். ஏதோ யோசித்தார். “சரி; இன்னும் சற்று நேரம் இருங்கள்; தேசாந்திரி சாதம் 4 பேருக்குக் கட்டளை இருக்கிறது. அதைக் கொடுக்கிறேன்’ என்றார். தர்மகர்த்தாவின் காருண்யத்தை எண்ணி மெச்சி மகிழ்ந்த குலசேகரன் “ஐயா! நாங்கள் சுவாமி தரிசனம் செய்துகொண்டிருக்கிறோம்” என்று கூறி வணங்கிவிட்டு உள்ளே சென்றான். அந்த கோவிலில் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி எழுந்தருளி இருப்பதைக் கண்ட குலசேகரனின் மனத்தில் தன்னுடைய அறையில் மாட்டப்பட்டிருந்த படத்தின் நினைவு உடனே தோன்றியது. மெய்ம்மறந்த பக்தியோடு இரு கரங் குவித்து “என்னப்பனே! சர்வலோக சரண்யா! தீனபந்தோ! தயாசிந்தோ! ஆபத் பாந்தவா! அனாத ரக்ஷகா! அவ் வேழைகளைக் காப்பாற்றுதற்கு வேண்டிய சகாயம் செய்வாய் என்னப்பனே!

ஆலமாமரத்தினிலைமே லோரு பாலகனாய்
ஞால மேழு முண்டானரங்கத்தரவினணையான்
கோல மாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்லதோ
[ரேழில்
நீலமேனியையோ! நிறை கோண்டதேன் நெஞ்சினையே

—திருப்பாணாழ்வார்.

வினா:—எத்தனை சங்கீதக் கச்சேரிக்குச் சென்றாலும் எனக்குச் சங்கீதத்தின் ருசியே தெரியவில்லையே! அதற்கு என்ன செய்யலாம்?

விடை:—மறு பிறவி எடுத்தால்—வாணியின் கருணை இருந்தால்—சங்கீதத்தின் ருசி தெரியலாம்.

தாயே தந்தை யென்றும் தாரமே கிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேனுன்னைக் காண்பதோ ராசையினால்
வேயேய் பூம் பொழில் சூழ்விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே!

—திருமங்கையாழ்வார்

ஹா! கருணா மூர்த்தி! ஜகத்குரோ! உலகத்தில் உண்மையான பக்தன், சத்யசந்தன், சாந்த குணசீலன் ஏழைக்கிரங்கும் எளியவன், ஆடம்பர மற்ற அறிஞன், பகைவரிடத்திலும் சீற்றங் கொள்ளாத உத்தமன் காந்திமகான் ஒருவன் தான் என்று உலக மறியச் செய்து விட்டாய். அந்த மகாத்மாவின் கோரிக்கையை ஈடேறச் செய்ய வேண்டும். ஏழை மக்களின் வயிற்றில் பாலை வார்க்க வேண்டும். எளியோர்க்கு உன்னருள் மாரி பொழிய வேண்டும். கோபால க்ருஷ்ணா! என்னை சோதனை செய்ததற்காக நான் வருந்தவில்லை. உத்தமமான, அருமையான பாரத நாட்டில் பதிவ்ருதா திலகங்களும், உத்தம ரத்தினங்களும் வாழ்ந்து வந்த—வாழ்ந்து வரும்—இந் நாட்டில் எனக்கு மனையாள் என்று சொல்லிக் கொள்ளவும் அருகதையற்ற ஓர் பெண்மணியின் குணமும், அவள் தாயின் குணமும் உலகம் கண்டு நகையாடி, வசைப் பாடும்படியாக விருக்கின்றதே! இதனால் உத்தம நாரீரத்தினங்களுக்கல்லவா அபக்யாதியும், அவதூறுன பேரும் உண்டாகிப் "பாரத நாட்டில் பெண்கள் சுகமில்லை" என்று மேல் நாட்டார் நம்மைக் கண்டு நகையாடும்படி இருக்கிறது. ஹா! அந்த இறுமாப்பு கொண்ட இரு ஸ்திரீகளையும் நீ சீர் திருத்த மாட்டாயா! அருள் ஜோதியே! அம்புஜாக்ஷா! சோதைமைந்தா! சுந்தர ரூபா! ஏழைகளின் அடிமையைத்—வறுமையை—தீர்க்க வேண்டும். என்னப்பனே!" என்று வேண்டித் தொழுது ப்ராகாரப் பிரதக்ஷணம் செய்தான்.

அச் சமயம் "தேசாந்திரிகளுக்கு சாப்பாடு கொடுக்கப்படும்" என்று கூவி யழைத்தார்கள். உடனே நமது குலசேகரன், மற்ற

வினா:—நாவல் என்றால் என்ன ஐயா!

விடை:—உன்னுடைய குடும்பத்தின் விநோதமே ஒரு நாவல் தான், அதை நினைத்துப் பார்த்தால் நாவல் இன்னதென்று விளங்கும்.

வர்கள் எல்லோரும் அங்கு வந்து நின்றார்கள். தேசாந்திரி நால்வருக்கும் உரிக்காத தேங்காயளவுக்கு ததியோதனம் கொடுத்தார்கள். அதை வெகு ஆனந்தத்தோடு வாங்கிக் கொண்டு வந்து ஆளுக்குக் கொஞ்சமாகப் பகிர்ந்துகொண்டு புசித்து கொஞ்சம் கனேதீரத் தண்ணீரைக் குடித்து விட்டுப் படுத்தார்கள். இரவு எல்லோரும் வெகு ஆநந்தமாகப் பேசிக் கொண்டே நித்திரையின் வசமானார்கள்.

பொழுது புலர்ந்தது; புள்ளினங்கள் எழுந்தன. நன்றாக இருள் புரிவதற்கு முன்னமேயே இவர்கள் எழுந்து நடக்கவாரம்பித்து விட்டார்கள். மங்களகரமான உதயத்தில் நடை சிரமம் அறியாது காலை சுமார் 10 மணிக்கு அவர்கள் சொந்த ஊரை யடைந்தார்கள். ஊரிலிருந்த மற்றவர்கள் இவர்களின் வரவைக் கண்டு வியந்து "என் வேலை கிடைக்கவில்லையோ!" என்று கேட்டார்கள். ஒன்றுமில்லை என்ற பதிலோடு நமது குலசேகரனின் குணனுவைபவத்தையும், அவன் தங்களிடம் காட்டிய அன்பையும், ஆதரவையும், தங்களுக்கு முதல் நாள் உணவளித்த விதத்தையும் பெருமையாகவும் உண்மையான ஆநந்தத்துடனும் எடுத்துக் கூறி தங்களைக் காண்பதற்கே அவர் கடவுள் போல வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள்.

இதைக் கேட்ட மற்றையோர் பெரு மகிழ்ச்சி கொண்டு குலசேகரனின் காலில் விழுந்து வணங்கினார்கள். "ஆண்டவனே! எங்களுக்குக் கடவுள்போல் நீங்கள் வந்திருக்கிறீர்கள். காப்பாற்ற வேண்டும்." என்று வேண்டிக் கொண்டார்கள். அன்று அவ் வேழைகள் எல்லோரும் ஒன்று கூடி எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு நல் விருந்து செய்தார்கள். நமது குலசேகரன் மெட்ரிகுலேஷன் கிளாஸில் படிக்கும் போதிலிருந்து அவனுக்கு வியாசங்கள், சிறு கதைகள், கட்டுரைகள் முதலியன எழுதுவதென்றால் மிக்க பிரியம்

வினா:—நான் எவ்வளவு சிரமப்பட்டு உழைத்தாலும் எனக்கு நல்ல பேர் கிடைப்பதில்லையே! அது என்?

விடை:—உனக்கு நல்ல உலகானுபவத்தையும் பொறுமையையும் அளிப்பதற்கே கடவுள் அவ்விதம் காட்டுகிறார்.

உண்டு. அவைகளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி, தன் மாமனுருக்குத் தெரிந்தால் தன்னைத் திட்டப் போகின்றாரே என்கிற பயத்தினால் கேசவன் என்று தன் பெயரை மாற்றி வைத்துக் கொண்டு, அந்த எழுத்துப் பிரதிகளை காலேஜு மூலமாக இனுமாப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்தான். பத்திரிகைக்காரர்களும் அவற்றைக் கண்டு சந்தோஷத்துடன் பிரசுரித்து வந்தார்கள். அதே போல இப்போதும் அனேக கட்டுரைகளை எழுதத் திறம் படைத்துள்ள இளவல் அந்த ஊரில் முக்கியமானவர்களிடமிருந்து காகிதம் பேனு வாங்கி அழகிய வியாசங்களையும், சிறு கதைகளையும் எழுதி அதோடு ஒரு கடிதமும் பின்வருமாறு எழுதினான்.

“என் அன்புமிக்க பத்திராதிபருக்கு வந்தனங்கள்.

நான் சென்ற சில ஆண்டுகளாகத் தங்கள் பத்திரிகைக்குப் பல வியாசங்கள், கட்டுரைகள், சிறு கதைகள், ஹாஸ்யக் கதைகள் முதலியன எழுதி அனுப்பிக்கொண்டு வந்தேன். அப்போது எனது ஜீவியத்திற்குக் கடவுள் வேறு மார்க்கம் காட்டி இருந்தமையினால் இந்த சிறு உதவியிலிருந்து நான் ஊதியம் எதிர் பார்க்கவில்லை. இப்போது எனக்குக் கடவுள் ஜீவனத்திற்கு வழி காட்டியதை நிறுத்திவிட்டு உங்கள் மூலமாக அதை நடத்தும்படியாகக் கட்டளையிட்டுவிட்டார். நான் மிகவும் ஏழை. ஏதோ கலைமகளின் அருள் சக்தியினால் நான் எழுதிக்கொண்டுவரும் இந்த எழுத்துப் பிரதிக்குத் தயவு செய்து ஏதேனும் ஊதியம் கொடுக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
கேசவன்”

அதை கட்டு கட்டி வேறு ஒருவரின் உதவியைக்கொண்டு சுதேச மித்திரன், சுயராஜ்ய, இந்து முதலிய இன்னும் அனேக பத்திரி

வினு:—மனைவி சொல் கேட்டால் மாதாவுக்கு வருத்தம்; மாதா சொல் கேட்டால் மனைவிக்குக் கோபம். இதற்கு என்ன செய்வது?

விடை:—இருவருடைய சொல்லையும் கேட்காமல் நியாயம் செல்லும் வழியில் நடந்துவிடு.

கைகளுக்கு அனுப்பினான். அந்த கிராமவாசிகளுடன் வயலிலும், காடுகளிலும் அலைந்து அவர்கள் செய்யும் வேலைகளைத் தானும் செய்வதும், அவர்களுக்கு ஒத்தாசைபாக இருப்பதுமாக இப்படியே வெகு ஆநந்தத்தை அடையலானான். தான் வீட்டிலிருந்த காலத்திலும் தன் தோழர்களுடன் படித்த காலத்திலும் இத்தகைய பேரானந்தத்தை அடையவில்லை. "ஏழை மக்களுடன் நடத்தும் இக்கிராம வாழ்க்கை என்ன உற்சாகமாக இருக்கிறது!" என்று நினைத்துப் பூரிப்பான். தினந்தோறும் அந்த ஏழைகளுக்கு காந்தியினுடைய மகிமையையும் அவர் தேசத்திற்காகப் பாடுபடுவதையும், தென்னாப்பிரிக்கா ஜெயிலில் அவர் செய்த அற்புதங்களையும், கஷ்டப்பட்ட அநுபவங்களையும் எடுத்துக் கதை சொல்வதுபோலச் சொல்வான். குசேலர் சரித்திரம், ராமதாஸ் சரித்திரம், கபீர்தாஸ் சரித்திரம் முதலிய பக்திமான்களின் கதைகளைச் சொல்லி நல்ல விதத்தில் அவர்களுக்குப் போதித்து பக்தியை உண்டாக்குவான். அதோடு அந்த ஊரில் ஏழைகளின் குடிசைகளுக்கு மத்தியில் ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் ஆண், பெண் பாலரையும், குழந்தைகளையும் ஒன்றுகூடச்செய்து மாலை 4 மணி முதல் 6 மணி வரையில் நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்ப் பாஷையைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான். இரண்டு மணி நேரம் பாடம் கற்பித்த பிறகு 6 மணி முதல் 7 மணி வரையில் குலசேகரன் தனக்குத் தெரிந்த பஜனைப் பாடல்கள், தாயுமானுர் பாடல், பட்டினத்தார் பாடல், பிரபந்தம் முதலியனவற்றைத் தான் முதலில் பாடுவதும் அவர்களைத் திருப்பிப் பாடச்செய்வதுமாகப் பஜனை செய்வதும் அதற்குமேல் ஒரு மணி நேரம் பகவானுடைய வைபவத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறுவதும், 8 மணிக்கு எல்லோரும் சாப்பாட்டிற்குச் சென்று அதை முடித்துக்கொண்டு வீதியில் எல்லோரும் ஒன்றுகூடுவதும் குலசேகரனின் வாய்மாரிலையைக் கேட்டு ஆநந்தித்த

வினு:—நான் எங்கு சென்றாலும் என்னை எல்லோரும் அவமதிக்கின்றார்களே! நான் என்ன செய்தேன்?

விடை:—ஆதியில் நீ செய்த துஷ்க்ருத்யங்களே தற்போது அவ்வாறு செய்விக்கின்றன.

வாறு நித்திரைகொள்வதுமாக இவ்விதமான தீர்மானத்தில் வேலை நடக்கவாரம்பித்தது.

இந்த ஏழை மக்களெல்லாம் அடைந்த ஆநந்தத்திற்கு எல்லையுமுண்டா! தங்கள் கஷ்டங்களை எல்லாம் நொடியில் மறந்துவிட்டார்கள். தினம் எத்தனை வேலை செய்து அலுத்திருப்பினும் அவர்கள் குலசேகரனைக் கண்டு அவன் வாய்மொழியைக் கேட்டுப் பிரம்மாநந்தமடைந்து இந்த கஷ்டங்களை அடியோடு மறந்துவிடுவார்கள். எப்போதும் குலசேகரனின் பக்கலிலேயே இருக்க மிக்க விருப்பங்கொண்டு தமது வேலையை பறக்கப் பறக்க முடித்துவிட்டு ஓடி வருவார்கள். இவ்வாறிருக்கும் நாளையில் குலசேகரன் அந்த ஊருக்கு அடுத்த ஊரிலுள்ள ஒருவரிடம் டைப்பு அடிக்கும் மெஷின் இருப்பதறிந்து அங்கு சென்று, தான் ஏதோ வியாசம் எழுதியதாயும் அதை டைப்படிக்கவேண்டுமென்றும் கூறி எதையோ டைப்படித்ததுடன் இரு கடிதங்களையும் டைப்பு அடித்து எடுத்துக்கொண்டு வந்தான். அக்கடிதங்களை உறையிலிட்டுப் பத்திரிகாலயங்களுக்கு அனுப்பிவிட்டான்.

இவன் எழுத்துப் பிரதிகளும் கடிதங்களும் அனுப்பிய பத்திரிகாசிரியர்களில் ஒருவரிடமிருந்து ஒரு ரிஜிஸ்தர் கடிதம் அவன் கொடுத்திருந்த விலாசத்திற்கு வந்தது. அதை ஆவலுடன் உடைத்துப் பார்த்தான். அதில் ஒரு கடிதமும், 50 ரூபாய் நோட்டு ஒன்றும் இருக்கக் கண்டு வெகு குதூகலமடைந்து அக்கடிதத்தைப் படிக்கலானான்.

2,10036.

"அன்புடைய ஐயா! வந்தனம்.

தாங்கள் அனுப்பிய எழுத்துப் பிரதிகளையும் கடிதத்தையும் கண்டு விஷயமறிந்தோம். நீங்கள் நான்கு வருட கால

"இப் பத்திரிகையில் ஏதோ எழுதி விட்டு அதன்கீழ். ப-ர். என்று காணப்படுகின்றதே! அது என்ன. மேல் உள்ளதைப் படித்ததும் "பற்ற்ற்." என்று கிழித்துவிட வேண்டுமென்கிற அர்த்தமா!" என்று 5, 6 வயதுள்ள பாலகன் கேட்கிறான்.

மாக எங்களுக்கு இனாமாக உதவி வந்ததை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம். எங்கள் சந்தா நேயர்களுக்கு உம்முடைய கட்டுரைகளும், சிறு கதைகளும் அளவற்ற ஆனந்தத்தைக் கொடுத்து எங்கள் பத்திரிகைக்கே பெரும் புகழைத் தந்திருக்கின்றன. சென்ற மார்ச்சு மாதம் அனுப்பிய கதையைப் படித்துப் போற்றாதவர்களில்லை. அதைக் கண்டபோதே உமக்கு ஏதேனும் பரிசளிக்க நினைத்தோம். ஆனால் நீர் சரியான முழு விலாசம் கொடுக்காமையினால் நாங்கள் எதுவும் அனுப்ப முடியாதுபோயிற்று. உங்கள் பேருதவிக்கு நாங்கள் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். தங்களுக்கு நாங்கள் தற்போது அனுப்பியுள்ள தொகை மிகவும் குறைவு தான் என்பதை நாங்களே அறிவோம். மற்றொரு சமயம் எங்கள் மனப்பூர்த்தியாக உதவி செய்ய மறக்கமாட்டோம். நிற்க, நாங்கள் ஓர் மாத சஞ்சிகை, நாவல்மட்டும் வெளிவரக் கூடியதாக ஆரம்பிக்க நினைக்கிறோம். ஒவ்வொரு மாதமும் அச்சில் 50 பக்கங்கள் போட உத்தேசம். அப்பத்திரிகைக்கு ஒவ்வொரு மாதமும் 50 பக்கங்களில் பூர்த்தியான கதைகளையோ, அன்றி தொடர்க் கதைகளையோ தாங்கள் தயவு செய்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்ப இசைந்தால் நாங்கள் மாதம் 50 ரூபாய் சம்பளம்—ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் விதம்—முதலில் போட்டுத் தருகிறோம். சில மாதங்கள் சென்றதும் தொகையை உயர்த்துகிறோம். உங்கள் சம்மதத்தை மறு தபாலில் தெரிவித்த உடனே 50;ரூபாய் முன் பணமாக அனுப்புகிறோம். நிற்க, உங்களுடைய நான்கு வருட காலமான வியாசங்கள், கதைகள் முதலியவற்றைப் படித்த நேயர்கள் அனைவரும் உங்களுடைய புகைப்படம் பத்திரிகையில் வரவேண்டுமென்று ஆவல்கொண்டு கடிதம் எழுதுகிறார்கள். ஆகையினால் தாங்கள் நேரில் வந்தால் ஒரு புகைப்

எந்த சமயத்திலும் மூடர்களை மட்டும் த்வேஷித்துக் கொள்ளுதல் மகா பிசகு. அவர்களுடைய பகைமை நம்மை என்றும் தொடர்ந்தே செல்லும். ஆகையால் சமாதானமே சான்ற யுக்தி.

படம் பிடித்துக் கொள்ளுகிறோம்; இல்லையேல் நீங்கள் பிடித்து அனுப்புங்கள். அதை முதல் சஞ்சிகையில் பிரசுரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். உடனே பதில்.

இங்ஙனம்
"க்ஷேத்திரம்" பத்திராதிபர்."

அதைப்; படித்ததுதான் நமது குலசேகரனின் ஆநந்தத்திற்குக் கரையுண்டா! கரைபுரண்டு போய்விட்டது. ஆ! கடவுளின் செயலன்றி வேறு என்ன நடக்கும். என்னப்பனே! ஏழைகளுக்குப் பெரும் ஆதரவு கொடுத்துவிட்டாய்" என்று பலமாக வேண்டிக் கொண்டு கடவுளைத் தொழுது அந்த நிமிஷமே பின் வரும் பதிலை எழுதினன்.

"அன்பு மிக்க ஐயா! வந்தனம்.

தங்கள் கடிதமும் பணமும் கிடைக்கக் களிப் பெய்தி விஷயமறிந்தேன். தங்கள் விருப்பப்படிக்கு மாத சஞ்சிகைக்கு எழுதித் தருகிறேன். என்னுடைய புகைப் படத்தை உங்கள் விருப்பம்போல பின்னொரு சமயம் எடுத்துத் தருகிறேன். ஏனெனில் நான் சமீபத்தில் நோயினல் அவஸ்தைப் பட்டு மெலிந்திருப்பதால் இப்போதைய நிலைமை மிகவும் விகாரமாகப் படத்தில் விழும். ஆகையால் மன்னிக்கவும். முதல் சஞ்சிகையில் உலகம் போற்றும் உத்தமனன காந்தி முனிவரின் படத்தைப் பிரசுரித்தல் சஞ்சிகையின் சிறப்பிற்குச் சிகரம் வைத்தது போலாகும். சஞ்சிகையின் வளர்ச்சிக்கும் காரணமாயிருக்கும். ஆகையினல் அதை ஏற்பாடு செய்யுங்கள்.

இங்ஙனம்
தங்கள் அன்பன்
கேசவன்"

விவாக மென்கிற பிணைப்பில் ஓர் ஆணையும் பெண்ணையும் சேர்த்து விட்ட பின்னர் அவ் விருவர்களின் முகத்தின் ப்ரகாசமே ஓர் தனித்த சோபை; அபூர்வமான மாறுதல்.

அதை அனுப்பி விட்டு இந்த சந்தோஷச் செய்தியை ஓர் கதையாகப் பிணைத்து அதை அன்று கதை சொல்லுவது போல ஏழைகளுக்குச் சொன்னான். இதைக் கேட்ட ஏழைகள் பெரும் சந்தோஷமடைந்து "ஐயோ! இத்தகைய தசை நமது குருசாமிக்கு வரலாகாதா!" என்று எண்ணி ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். குலசேகரனை அவர்கள் குருசாமி என்று அழைக்கத் தலைப்பட்டார்கள்.

3—வது அதிகாரம்

கலிகால தெய்வம் கண்மூடி யல்ல

இனி நாம் நீலாவின் வீட்டிற்குச் செல்வோம். நமது அருங்குண பூஷணனாகிய குலசேகரன் கதவிடுக்கிலிருந்து ஒட்டுக் கேட்டுச் சென்ற பிறகும் அந்த நங்கையர் மூவரும் தம் தம் மனத்திலுள்ளவற்றை எல்லாம் எடுத்துக் கூறித் தமது குறையை ஆற்றிக்கொண்டே தூங்கினார்கள். நீலாவின் தோழி விடியற்காலையில் வீடு போய்ச் சேர்ந்தாள். அங்கப்பன் விஷயமான நினைவு நீலாவின் மனத்தில் முன்னிலும் அதிகமாக வேலை செய்யத் தொடங்கியதால் அவள் அதிகமான கவலையுற்று அதே ஏக்கங்கொண்டு அன்று காலையில் சீக்கிரம் எழுந்திருக்காமல் "தன் பர்த்தா என்று தொலைவன்?" என்ற பகவத் தியானத்திலேயே தன் கவனத்தைச் செலுத்தித் தவம் செய்யலானாள்.

நமது இளவல் இருக்கிறானா, இல்லையா என்பதைப் பற்றி அவர்கள் மனத்தில் நினைவு உதிப்பதற்குப் பிரமேயமே இல்லை.

விவாக காலத்தில் மணமகனும், மணமகளும், மணவறையில் வீற்றிருந்தவாறு கடைக் கண்ணால் ஒருவரை யொருவர் நோக்கும் விநோதம் ஓர் சொல்லவறியாத எழிலுடனும் ஆநந்த ஸ்வரூபத்துடனும் விளங்குகின்றது.

சென்ற இரண்டு நாட்களாகப் பட்டினியோடு கிடப்பவனை அன்னம் புசிக்க அழைக்காத பாதகர்களுக்கு—அவன் இறக்க வேண்டி யதையே கோரும் கிராதகர்களுக்கு — அவனைப் பற்றி நினைவு எங்ஙனம் உண்டாகும்? அன்று குலசேகரனைப் பற்றி இந்த மூதே விகள் நினைக்காவிடினும் அவ் வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் மட்டும் அன்று பகல் 11 மணி வரையில் குலசேகரன் பல் சுத்தி செய்வ தற்கும் வெளியில் வராமையினால் தமக்குள் மச மச வென்று பேசத் தொடங்கினார்கள். அந்த அறையைத் திறந்து பார்ப்ப தற்கும் பயந்தார்கள். "எஜமானி யம்மாள் என்ன சொல்வார் களோ!" என்று நடுக்கம் கொண்டார்கள். எனினும் மணி ஏற ஏற அவர்களுக்குச் சந்தேகம் உதித்தது. இரண்டு நாளாக வீட்டில் நடக்கும் அமர்க்களத்தையும், அதற்கு முன்னிருந்தே அவனைத் தன் எஜமானர்கள் அலக்ஷியம் செய்யும் மாதிரியையும் கண்டிருக் கிறார்கள், ஆதலால் இன்று அவனைக் காணாது பெரும் வியப்பும், ஒரு வகையான விசனமும் கொண்டார்கள்.

அந்த அறையைத் தினம் பெருக்கும் வேலைக்காரியை நோக்கி "அவ்வறையை இப்போதே பெருக்கு" என்று கூறி அவ்வறை யைப் பெருக்கச் செய்தார்கள். வேலைக்காரி உள்ளே சென்று பார்த்தால் அறையில் ஒரு துணியும் காணப்படவில்லை. அங்கு நமது இளவலையும் காணவில்லை. இதைக் கண்டு வேலைக்காரி திடுக் கிட்டாள். மனத்தில் ஏதேதோ எண்ணம் உதிக்க வாரம்பித்தது. அன்று பூராவும் குலசேகரனைக் காணாமையினால் எங்கு சென்றிருப் பான், என்கிற சந்தேகம் அவர்கள் மனத்தில் தாராளமாக உதித்து விட்டது. இரண்டு நாட்களாக வீட்டில் நடக்கும் அமர்க்களம் நன்றாகத் தெரிந்திருக்கிறபடியால் "குலசேகரனுக்கு அதனால் மன

பிராம்மண வகுப்பினரில் ஒரு வகுப்பினர் நீங்கலாக மற்றவர்கள் வீட்டில் வீட்டு வேலைக்காரியே பாத்திரங்கள் சுத்தி செய்கிறாள். அந்தப் பாத்திரங்களை எச்சில், மலம், ஜலம் முதலியன நிறைந்த வீதியில் போட்டுத் தேய்ப்பதைப் பார்த்தால் வியாதியை விலை கொடுத்து வாங்குவதாகவே தோன்றுகின்றது. தன்னுடைய வீட்டின் பின்புறத்திலேயே தேய்த்துக் கழுவினால் எவ்வளவு சுசி காமாக இருக்கும். இந்த ஊழல்களைச் சிலர் கவனிப்பதே இல்லை.

முடைந்து ஏதோ ஆபத்து வந்துவிட்டது." என்று நினைத்து அவர்களுக்குள்ளேயே குச மசவென்று பேசத் தலைப்பட்டார்கள். அவ்விஷயத்தை அவ் வீட்டு எஜமானுக்களிடம் தெரிவிப்பதற்கு மிக்க திகிலடைந்தார்கள். எனினும் "இதை எந்த விதமாகவாவது வெளியிட்டுத் தான் தீரவேண்டும்" என்று யோசித்துக்கொண்டு "எவ்வகையில் வெளியிடுவது?" என்று பேசிக்கொண்டார்கள். அவர்களுக்கு ஓர் யோசனை தோன்றியது. அவ்வாறு தீர்மானித்துக்கொண்டு அவர்களில் ஒருவன் தன் எஜமானியிடத்தில் வந்து "அம்மா! நம்ம சின்ன ஐயாவை யாரோ அவசரமாகப் பார்க்கவேண்டுமாம்; கூப்பிடுகிறார்கள். அவருடைய அறையில் சென்று பார்த்தேன்; அங்கு அவரைக் காணவில்லை. இன்று காலை முதல் அவர் வெளியில் பல் தேய்ப்பதற்கும் வரவில்லை. எங்கு சென்றிருக்கிறார் என்று சொல்வது?" என்று தந்திரமாகக் கேட்டான்.

இதைக்கேட்ட குஞ்சரி "ஆமடா! திமிர் கொண்டவனே! அந்தப் பிச்சைக்காரப் பயல் எங்கே போயிருந்தால் எனக்கென்னடா! சரக்கடைப் புழுவிற்குப் போக்கிடம் உண்டா என்பது போல அந்த அடிமை எங்கு பொறுக்கச் சென்றானோ! எந்த காங்கிரஸ் சோதாப் பயலுடன் சேர்ந்துகொண்டு எங்கே சென்றானோ! வந்தவர்களைப் பிறகு வரச் சொல்லு" என்று கூறி யனுப்பிவிட்டாள்.

இதுகேட்ட வேலைக்காரன் "இந்த யோசனையிலும் ஒன்றும் பலிக்கவில்லையே! என்ன செய்வது? அந்த மனிதனோ மூன்று நாட்களாகப் பட்டினி கிடக்கின்றான். இவர்களோ கொடிய ஈட்டிக் குத்துவது போலக் குத்திவிட்டார்கள். அந்த மனிதனோ மகா ரோஷக்காரன்; மானி; சாந்த குண சம்பன்னன். ஆகையினால் இவர்கள் இம்சை தாங்காது என்ன செய்து விட்டானோ. உயிரை விட்டுவிட்டானோ! இவர்கள் இவ்விதம் கவனிக்காமலிருக்கின்

வியாதியை உண்டாக்கும் சிறிய கிருமிகள் ஒன்றின் மீதிருந்து மற்றொன்றில் தாவி வியாதியை உண்டாக்குகின்றன என்கின்றார்கள். பலவிதமான மனிதர்களும் நடந்து செல்லும் வீதியில்—அசுத்தம் நிறைந்த விடத்தில்—பாத்திரம் தேய்த்தால் அக் கிருமிகள் அவற்றில் ஒட்டிக் கொள்ளாதா! இதைச் சற்று யோசியுங்கள்.

னார்களே! என்ன செய்வது?" என்று உண்மையிலேயே கண் கலங்கினான். அன்றைபொழுதும் கழிந்துவிட்டது. யாரும் நமது இளவலைக் கவனிக்கவில்லை.

மறுதினம் உதயமாயது. வேலைக்காரர்களுக்கு மட்டும் "குலசேகரன் எங்கேயோ போய் விட்டான்" என்பது நன்றாகத் தெரிந்துவிட்டது. குலசேகரன் அறையிலுள்ள பீரோவு, சோபா, படங்கள் முதலிய எல்லாவற்றையும் வேலைக்காரன் ஒரு வாரத்திற்கு ஒரு தரம் துடைப்பது வழக்கம். அன்று துடைக்க வேண்டிய நாள் வந்தமையினால் உள்ளே சென்று மேஜையைத் துடைக்க வருகையில் அங்கு ஒரு கவர் வைத்திருந்தது; ஆனால் அது ஒட்டாத கவராக இருந்தது. அந்தக் கவரின்மேல் விலாசத்தைப் பார்த்தான். அது நீலாவின் பேருக்கு எழுதப்பட்டிருந்தது. அந்த ஆளுக்குத் தமிழ் பாஷை மட்டும் நன்றாக எழுதப் படிக்கத் தெரியும். அவன் அநேக வருடங்களாக இந்த வீட்டில் வேலை பார்த்து வருகிறானாதலால் "யார் யார் கையெழுத்து!' என்பது நன்றாக அவனுக்குத் தெரியும். "இது குலசேகரனின் கையெழுத்து" என்பதை நன்கறிந்து கொண்டான். எனினும் அதைப் படித்தால் யார் தன்னைப் பார்த்து விடுவார்களோ என்று பயந்து அதையப்படியே வைத்து விட்டான். அவனுடைய சந்தேகம் என்னவோ அதிகரித்து விட்டது. அவன் அவ்வறையில் சென்று இதையும் கண்டு விட்டதனால் மனம் குழம்பிப் போய் யோசனை செய்தவாறு வேலை செய்ததால் நேரமாய் விட்டது.

இதற்குள் நீலா இவனை இரு முறை அழைத்தாள். இவன் பதில் கொடாமையினால் கடுஞ் சீற்றத்தோடு இவ்வறைக்கு வந்து "ஏனடா! உன் காது செவிடாகி விட்டதோ! எத்தனை நாழிகை கூப்பிடுவது?" என்று அட்டகாசம் செய்தவாறு அவ்வறையை ஒரு சுற்று பார்த்தாள். தான் அன்று பார்த்த கதர்த் துணிகள் ஒன்றும் காணப்படாததோடு தன் கணவன் கைக் கடியாரம் மேஜைமீது இருக்கக் கண்டு அதை எடுத்தாள். மகா கொடிய மனத்தையுடைய அந்த தேவதைக்கே ஒரு விதமாக திடுக்கிட்டது. அந்த கடியாரத்தின் பக்கத்திலேயே அந்த கவர் இருக்கக் கண்டு அதை பரபரப்புடன் எடுத்துப் பார்த்தாள். தன் விலாசத்திற்கே இருக்கக் கண்டு அதை ஆவலோடு உடைத்துப் பார்த்தாள். கடிதத்தின் விஷயத்தை நாம் முன்னரே விவரித்துள்ளோம்.

அந்தோ! அந்த விசனகரமான கடிதத்தைப் படித்தவள் நல்ல உத்தமியாகின் எவ்விதம் மனம் இடிந்து உடனே உயிர் துறப்பாள்? படிக்கும்போதே எத்தகைய விசனத்தை யடைவாள்!

கல்லினும் கொடிய கடின மனமுடைய அச் சண்டாளி இக் கடிதத்தைப் படித்ததும் முதலில் சற்று திடுக்கிட்டவளாய் நின்றாள்; எனினும் உண்மையில் அவ் விஷயங்களைப் படித்தவுடன் அவளுக்கு இருதய பூர்வமான ஆநந்தம் உண்டாகி விட்டது. அத்தகைய ஆநந்தம் உண்டாகிய நிமிடமே தன் கள்ளக் காதலனின் உருவம் கண்ணெதிரில் வந்து நிற்கத் தலைப் பட்டது. அவ்வாறு நிற்பதாகத் தோன்றிய உருவெளித் தோற்றத்தைக் கண்டவுடன் அந்த ஆநந்த சாகரத்தில் மூழ்கித் தனக்கும் அவனுக்கும் புனர் விவாகம் நடந்ததாகவே இன்பக் கனவு காணலானாள். அந்த மெய்ம் மறந்த அபார சாகரத்தில் மூழ்கிக் கிடந்தமையினால் இடம், மனிதர்கள், காலம் எல்லாவற்றையும் அடியோடு மறந்தாள். சுமார் 10 நிமிட நேரம் தன்னை மறந்து நின்ற தருணத்தில் அவளுடைய தாயாரும் அவ்விடம் வந்து சேர்ந்தாள்.

அவ்வாறு வந்தவள் தன் மகள் ஏதோ ஒருவாறு இருப்பதைக் கண்டு "நீலா! என்ன சேதி! என்ன கடிதம் அது? அந்தப் பயலுக்குப் பணம் வேண்டுமோ! அதற்காக எழுதி விட்டானோ! இனி மேல் பணமா? ஒரு பைசா கூடத் தரமாட்டேன். ஜாக்ரதை" என்று தன் போக்காகக் கூறுகையில், நீலா இடைமறுத்து "அம்மா! கத்தாதேயடி; நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. இதோ பார்" என்று கூறிக் கொண்டே தாயிடத்தில் கடிதத்தைக் கொடுத்தாள். தாயும் வெகு ஆவலோடு அதை வாங்கிப் படித்தவுடன் உண்மையிலேயே திடுக்கிட்டாள். ஏனெனில் அவன் இறந்ததுபற்றி பரம சந்தோஷமடைந்தாளெனினும் அவன் உண்மையாக இறந்துவிட்டான் என்பதை எவ்விதம் அறிவது, கருமாதிகளைச் செய்து முடிப்பது எப்படி என்பதுபோன்ற அநேக விதமான எண்ணங்கள் உதித்ததனால் மனத்தில் சற்று சஞ்சலம் உண்டாகியது. அதோடு அக்கடிதத்தில் மனம் நொந்து எழுதியுள்ளபாகமும், அவன் தாங்கள் பேசிய விஷயங்களைத் தெரிந்து கொண்டுவிட்டதையும் அதனால் மனம் உடைந்து பிராணனை விட்டு விட்டான் என்று தெரிந்ததனாலும் சற்று விசனம் அடைந்தாள். தன் மகளுக்கு மறுமணம் சரிக்குச்சரியாகச் செய்துவிட்டால் அதனால் தான் பெரும்பதவியை அடையலாம் என்கிற ஓர் உத்சாகம் ஒரு புறம் பாதிக்கின்றது. இதைத் தன் பர்த்தாவிடம் எவ்விதம் தெரிவிப்பது. வீட்டில் இந்த இரகஸியம் ஒருவருக்கும் தெரியாமலிருக்கவேண்டுமே! நாம் செய்த கொடுமையினால் தான் உயிரை விட்டு விட்டான் என்பது பிறருக்குத் தெரியுமாயின் தங்களை மிகவும் கேவலமாக நினைப்பார்களே! ஊர் ஜனங்களிடையே பெரும் அபவாதம் உண்டாகிவிடுமே! என்ன செய்வது? எப்படியாவது இரண்டாம் மனிதருக்குத் தெரியாமல் அமுக்கிவிடவேண்டும்" என்று

தீர்மானித்துக்கொண்டு தன் மகளை அழைத்துக்கொண்டு ஓசை செய்யாமல் தங்கள் அறைக்குப் போய்விட்டாள்.

இங்கு நடந்த சம்பவங்களை எல்லாம் கண்ட வேலைக்கார னுக்குப் பெருத்த சம்சயம் உண்டாகிவிட்டது. அங்கு ஏதோ பெருத்த கலவரம் நடந்துவிட்டதாக எல்லோருக்குமே ஒருவாறு தெரிந்துவிட்டது. தாயும் மகளும் உள்ளே சென்றவர்கள் பெருத்த ஆலோசனையில் இறங்கினர்கள். அத்தருணம் நீலாவின் தோழி வந்து சேர்ந்தாள். இவர்களின் முகமாறுதலைக் கண்டு "என்ன செய்தி? ஏன் உங்கள் முகம் வேறுவிதமாக இருக்கிறது? விஷய மென்ன?" என்று கேட்டாள். அவளை அவர்கள் தங்களின் அந்த ரங்கமான தோழியாக நினைத்திருப்பதால் அக்கடிதத்தை யவன் கையில் கொடுத்தார்கள்.

வந்த பைசாசம் கடிதத்தைப் படித்தவுடன் பேரானந்த வெள்ளத்தைக் கண்டவள் போல "ஹா! மாமி! கடவுள் நீலாவின் குறையைத் தீர்க்க வழி செய்துவிட்டார். இதை என் தமயன் கண்டால் அவன் அடையும் ஆநந்தம் கூற வியலாது. நான் அவனை அழைத்து வருகிறேன்" என்று கூறியவாறு தன் வீட்டிற்கு ஓடித் தன் அண்ணனை அழைத்துக்கொண்டு வந்து இக் கடிதத்தை யவன் கையில் கொடுத்தாள். அந்த துர் தேவதை அதைப் படித்த வுடனே தேன் குடித்த நரி போல பல்லைப் பிளந்துகொண்டு "ஹா! நீலா! என் கவலை தீர்ந்தது. மாமி! என் மனப் பிணி யகன்றது. தொலைந்தான் சனியன்" என்று தத்திக் குதித்துத் தாண்டவம் புரியத் தொடங்கினன். நீலாவின் கூத்தைக் கேட்கவேண்டுமா! இரு தரும தேவதைகளும் பூரித்துவிட்டார்கள்.

நீலாவின் பிதா அங்கு வந்தார். அவரும் இவ்விஷயத்தை யறிந்து இவர்களைப் போலவே பேச வாரம்பித்தார். அந்தோ! கடவுளே! தான் அக்கினி சாக்ஷியாகக் கட்டிய கணவன் சாகவேண்டு மென்றும் அன்னியனை மறுமணம் செய்துகொள்ளவேண்டுமென் றும் எந்த சண்டாளியேனும் ஆவல் கொள்வாளா! தெய்வகதியாகக் கணவன் இறந்துவிட்டவர்களே மறுமணஞ் செய்ய மனம் துணிவ தில்லை. உம்; கலியின் கூற்றுபோலும்.

நால்வருமாகக் கலந்து யோசனை செய்ததில் ஏக மனமாகத் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களாவன:—குலசேகரன் தன் சிநேகித னுடன் ஊருக்குப் போயிருப்பதாகக் கேட்போருக்குச் சொல்லிக் கொண்டே ஒரு வாரத்தைக் கடத்துவோம். அதன்பிறகு அவன் எங்கேயோ குளத்தில் குளிக்கப்போகையில் தவறி விழுந்து இறந்து

விட்டதாக நாமே வதந்தியைக் கிளப்பிவிடலாம். அதற்குள் அவன் எவ்விதமானவன் என்கிற விஷயங்களும் ஏதேனும் தெரிந்தாலும் தெரியலாம். அவ்வாறு தெரிந்தால் அதற்கு ஒட்டியபடியே நடந்துகொள்ளலாம்'' என்பதே யாகும்.

இவ்விதம் எல்லோரும் கூடி குசு மசு வென்று பேசிக்கொண்டதை வேலைக்காரர்கள் ஜாடை மாடையா லறிந்துகொண்டு அவர்கள் உண்மையான அன்போடு கண்ணீர் விட்டார்கள். குலசேகரனின் உத்தமமான குணத்தையும், அவனுடைய பொறுமையையும், வேலைக்காரர்களிடம் காட்டிய அன்பையும், மாமியார் மாமனார் மனைவி முதலியோரால் அவன் பட்ட துன்பங்களையும், வேலைக்காரர்களே நன்கறிவார்களாகையினால் அவைகளை நினைத்துப் பழகிய தோஷத்திற்காகக் கண் கலங்கியதோடு தம் வீட்டு எஜமான்களை மனத்திற்குள்ளாகக் கண்டபடி திட்ட வாரம்பித்தார்கள். அவர்களுடைய குமாஸ்தா ஒருவன் நன்றாகப் படித்தவன்; அவன் இவர்கள் மாறுதல்களையும், மற்ற விவரங்களையும் நன்கறிந்து கொண்டான்.

அன்று முதல் ஒருநாளு மின்றித் திருநாள் போல தாயும் மகளும் "குலசேகரன் ஒரு வாரத்தில் வருவதாகச் சென்றான். அவன் படிப்பைக் கவனியாது இப்படி வேடிக்கைப் பார்க்கப் போய்விட்டானே!'' என்று வெகு உருக்கம் காட்டிப் பேசத் தலைப்பட்டார்கள். இந்த வேஷத்தை யறிந்த வேலைக்காரர்கள் வெறுப்பையே காட்டி வந்தார்கள். இப்படியே 5—6 நாட்களாக, ஒரு தினம் தினசரிப் பத்திரிகையை நீலா படிக்கையில் அதில் பெரிய தலை பங்கத்தில் கீழ்க்கண்ட விஷயங்கள் பிரசுரமாயிருந்தன:—

கோர மரணம்! **கோர மரணம்!!**

ஓர் வீரன் குளத்தில் மாண்டான்.

அந்தோ! இச் செய்தியை வரைவதற்கும் என் மனம் உண்மையில் விசனிக்கின்றது. நான் ஓர் பரதேசி. உலகத்தில் ஒரு இடமின்றிச் சுற்றுவது தான் என் தொழில். நான் அவ்வாறு ஒரு தினம் சம்பகபுரியில் நீராடுவதற்குக் குளத்திற்குச் சென்றேன். அங்கு குளத்தின் படிக்கட்டு ஒன்றில் ஒரு கடிதம் உறையிட்டு வைத்து அதன்மேல் ஒரு கல்லை வைத்திருந்ததோடு பக்கத்தில் ஒரு தளுவமும் இருந்தது. இதை யாரோவைத்திருக்கிறார்கள் என்று வெகு நேரம் பார்த்தேன். ஒருவரையும் காணாமையால் குளத்தில் குளிக்க இறங்கி யாரேனும் தவறிவிட்டார்களோ என்று சந்தேகம்

உண்டாகியது. அதனால் குளத்துப் படிகளில் தண்ணீரில் இறங்கி பார்த்தேன்; ஒன்றும் தெரியவில்லை. ஆகையினால் அந்த கடிதத்தை எடுத்து படித்துப் பார்த்தேன்; அவ்வளவு தான்; என் சந்தேகம் நிச்சயமாகிவிட்டது. நான் அக்கடிதத்தில் கண்டபடி இதைப் பிரசுரித்துவிட்டேன். கடிதத்தின் விவரம் பின்வருமாறு:—

"இக் கலியுகத்துக் கடவுள் கண்மூடியல்ல. அவரவர் செயலுக்கு ஏற்பத் தண்டனை விதிக்கத் தயாராக இருக்கிறான். அதையே நானும் பிரத்யக்ஷமாக அனுபவத்தில் கண்டுளேன். நான் பூர்வ ஜன்மத்தில் மகா பாபத்தைச் செய்துவிட்டதன் பயனை அனுபவித்துவிட்டேன். இனி எனக்கு இவ்வுலகிலிருக்க மனம் ஒப்பவில்லை. ஆகையினால் நான் உயிரைவிடத் துணிந்தேன். எனக்கு இவவுலகில் பற்றுள்ள பொருள் கடவுள் ஒருவர் தான். நான் அவர் பாதத் தடியில் சதா இருப்பதையே வேண்டியதால் எனக்கு பந்துக்கள் என்கிறவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டேன். இக்கடிதத்தைப் படிக்கும் புண்ணிவான்கள் கையில் என் பிணமகப்படின் அதையவர்களே அடக்கம் செய்துவிட வேண்டுகிறேன். ஏன் சவம் கூட என் பந்துக்களின் வசம் கிடைக்கலாகாது. இவ்வுதவியைச் செய்தால் நான் மிக்க வந்தனம் செய்து எப்பிறவியிலும் மறக்காதிருப்பேன். நான் என் பிணங்கூட அகப்படலாகாது என்கிற எண்ணத்துடன் சொறுகு பள்ளம் இருக்கும் இடத்தில் தான் விழப்போகிறேன்; ஒருக்கால் அகப்பட்டால் பார்த்தவர்கள் வாரிப் போட்டுவிடுங்கள். இக் கடிதத்தைப் பல பத்திரிகைகளுக்கும் அனுப்பிவிடுங்கள். மற்றபடி இதைப்பற்றித் தங்களை யார் எந்த விதமாகக் கேட்ட போதிலும் என்னைப் பற்றி—என் சவம் ஒருவேளை கிடைத்தாலும் அதைப்பற்றி—ஒன்றுமே சொல்லவேண்டியதில்லை. வெறும் நமஸ்காரம்.

என்னுடன் படித்த தோழர்களே! உங்களை விட்டுப் பிரிகிறேன். என்னை உங்கள் உயிராகப் பாவித்துவந்த சிநேகிதத்திற்கு முடிவு ஏற்பட்டுவிட்டது. உங்களுக்கெல்லாம் வந்தனம். தேசத்திற்கு என்றும் ஊழியம் செய்யுங்கள். நீங்களே மனம் இசைந்து உங்களுடைய நிழல்போல உங்களுக்கு உதவியாக விருக்கக் கூடிய வனிதையைத் தேடி மணந்து கொள்ளுங்கள். அதிபாயமான பணத் தாசை கொண்டு மணத்தை முடித்துக்கொள்ளாதீர்கள். உங்கள் மனம் ஒவ்வாத வரையில் விவாகம் செய்துகொள்ளாது பிரம்மச்சாரி

பாகவிருந்து வேலை செய்யுங்கள். நண்பர்களே! போய்வருகி றேன்.

இங்ஙனம்
உலகைவிட்டு மறையப்போகும்
குலசேகரன்."

இந்த கடிதத்தைக் கண்டபடியே பத்திரிகைக்கு அனுப்பி விட்டேன். அந்த மனிதன் எழுதியிருப்பதுபோலவே அவன் ஓர் சுழல் உள்ள பள்ளத்திலேயே விழுந்துவிட்டான் என்பதை, நான் அங்கு சென்று பார்த்ததில் ஒரு துணி தண்ணீரில் கிழிந்து கிடந்ததைக் கண்டு மிக்க விசனமடைந்தேன். பிறகு பலரைக் கொண்டு தேடவுஞ் செய்தேன். ஒன்றும் பயன் கிடைக்கவில்லை. இக்கடிதம் என் கையில் கிடைத்து மூன்று நாளாயிற்று. "பிணமாவது மிதக்குமோ?" என்று எதிர் பார்த்தேன். அதுவும் மிதக்கவில்லை. எங்கேயோ மடுவுக்குள் சொருகி இருக்கவேண்டுமென்று நினைத்தேன். பிறகே இதை வெளியிட்டேன். அவன் ஆத்மா சாந்தியடைவதாக.'

மேற்கண்ட விஷயம் வெளியாகியிருந்ததைப் படித்த நீலா தன்னைமீறிய சந்தோஷங்கொண்டு பூரிக்கையில் அவளுடைய கள்ளக் காதலன் அந்த அறையில் வெகு பரபரப்புடன் கையில் பத்திரிகையை எடுத்துக்கொண்டு ஓடோடி வந்து "நீலா! இதோ இந்த தலைப்பங்கத்தைப் பார்த்தாயா! இதோ நாம் நினைத்தவாறு எல்லாம் விரைவிலேயே முடிந்துவிடும்போலிருக்கிறது பார்த்தாயா! கண்ணே! உன்னைப் பிடித்த பீடை விட்டொழிந்தது. இதுகாறும் இந்த பத்திரிகையைப் படித்தவர்களுக்கு விஷயம் தெரிந்துபோயிருக்கும், இதை உன் தாயிடத்தில் தெரிவி. என் வீட்டினர்க்கும் நான் சொல்லிவிடுகிறேன்." என்று கூறிவிட்டு வீடு திரும்பினான். நீலாவுக்கு சந்தோஷம் ஒரு புறம் இருந்தபோதிலும் "இவ்விஷயத்தை யறிந்தவர்கள் வெகுவாய் துக்கம் விசாரிக்க வந்துவிடுவார்களே! இந்த இழவுக்கு அகப்படாமல் கண் மறைய எங்கேனும் சென்றுவிடவேண்டும்" என்று அவள் தீர்மானித்தவளாய்த் தன் தாயினருகில்சென்று சந்தடி செய்யாமல் விஷயத்தைக் காட்டினாள்.

இதைக் கண்ட தாயாரின் மனம் அவளையறியாது "ஹா! குலசேகரன் போய்விட்டானா! நாம் செய்த கொடுமையினால் போய்விட்டானா! இவ் வுலகத்தை விட்டுப் போய்விட்டானா! நீலா! நான் இந்த நிமிடத்திற்கு முன்னர் இருந்த நிலைமையிலிருந்து இப்போது என் மனம் ஏதோ ஒருவிதமான சஞ்சலத்தை யடைகின்றது. இதற்குக் காரணம் என்னவாயிருக்கும்? எனக்குத் தெரியவில்லையே! இப்

போது நான் என்ன செய்வேன்?” என்று திரள மிரள விழித்த வாறு பேசினாள்.

திடீரென்றுண்டாகிய மாறுதலைக் கண்ட நீலா மிக்க ஆச்சரியமும், பீதியும், திகிலும் அடைந்து “அம்மா! இதென்ன இது. உன் மனம் இவ்வித மாறுதலை யடைந்ததற்கு நான் மிக்க வியப்புறுகிறேன். எக்காரணம் பற்றி நீ இவ்விதம் பேசுகிறாய்? அப் பிச்சைக்காரப் பயல் தொலையவேண்டுமென்று நீ கோரிய கோரிக்கை கைமேல் பலிதமடைந்ததைக் கண்டு சந்தோஷமடையாது ஏதோ உளறுகிறாயே! அம்மா! மரகதம், அவள் பெற்றோர், அண்ணன் முதலியோர் வருகிறார்கள். இன்று பத்திரிகையைப் படித்தவர்கள் எல்லோரும் நமக்கு துக்கம் விசாரிக்க வருவார்கள். அவர்களுடைய முகத்தில் விழித்து நாம் பேசுவதற்குள்ளாக நாம் இன்றைய வண்டியிலேயே புறப்பட்டுப் பூனாவுக்குப் போய்விடுவோம். அங்குள்ள வீடு தற்போது காலியாகவே இருக்கிறது. அங்கு நாம் சென்று விட்டால் பல காரியங்களுக்கும் அனுகூலமாகிவிடும். இப்போது வீணாக யோசித்துக்கொண்டிருந்தால் நேரமில்லை; உடனே நீ ஒரு வழி செய்யவேண்டும். இச்செய்தியை இப்போதே அப்பாவுக்கு டெலிபோனில் சொல்லிவிடுகிறேன்.” என்றாள்.

அதே தருணம் மரகதம் முதலியோர் வந்தார்கள். அவர்களும் குஞ்சரியம்மாளின் மாறுதலைக்கண்டு வியப்புற்று அவளுக்கு அனேக வார்த்தைகளைக் கூறியதோடு “உடனே ஊரைவிட்டு ஓடிவிடுவதுதான் உசிதம். விசனத்தினால் மனம் நொந்து வெளியூர் போய்விட்டதாகப் பிறரும் நினைக்கக் கூடும்; ஆகையினால் இப்போதே கிளம்புங்கள்.” என்று வற்புறுத்திக் கூறினார்கள். இதற்குள் ஏகாம்பரமும் பத்திரிகையில் விஷயத்தைப் படித்து வீடு திரும்பினார். இந்த எல்லோரும் எவ்விதமான தீர்மானத்தைச் செய்தார்களோ அதையே அவரும் செய்துகொண்டு வந்துவிட்டார்.

குஞ்சரியம்மாளேனும் கண்ணில் தண்ணீர் உதிர்த்தாள். நீலா தன் கள்ளக்காதலன் மீது கொண்டுள்ள கடும் பிரேமையினால்—காதலினால்—மனத்தில் விசனம் என்பதை சற்றும் அறியாது குதூகலித்துக் குதிக்கலானாள். குஞ்சரியம்மாளின் மனத்திலுதித்த சிறிது மாறுதலை உடனே மாற்றும்படியான வழியில் மற்றவர்கள் போதித்துவிட்டார்கள். ஆகையினால் மேகம் மூடியதுபோல் மூடிய நினைவுகள் உடனே மறையத் தலைப்பட்டன. அவர்கள் எல்லோரும் கூடி சாவு கொண்டாடித் தலைமுழுகி வீட்டிலுள்ளோரிடம் வீட்டைப் பார்த்துக்கொள்ளும்படியாகக் கூறிவிட்டு அன்றிரவே பூனாவுக்குப் பிரயாணமாகிவிட்டார்கள். பூனாவிலும் இவர்களுக்கு துக்கம் விசா

ரித்த கடிதங்கள் ஏராளமாக வந்தன. இதற்குமேல் குலசேகரனின் கருமாதியை முடித்த கண்றாவியை நாம் கூறவேண்டுமா! படுபாவிகளின் செய்கையிலிருந்தே அவர்கள் எவ்விதம் நடந்திருப்பார்கள் என்று அறிந்துகொள்ளலாம்.

*   *   *   *   *

மேற்படி சம்பவங்கள் நிகழ்ந்து இரண்டு மாதகாலம் ஓடி ஒளிந்தது. பூனாவிலுள்ள நீலாவின் வீட்டில் அவளது மறுமணத்தின் வைபவம் திமிலோகப்படுகின்றது. அவ்விடத்தில் அன்று செய்யப்பட்டிருந்த அலங்காரம் அரண்மனையில் திருவிழாக் கொண்டாட்டம் போல இருந்தது. நீலாவும் அவள் காதலனும் அன்று அடைந்த ஆநந்தம் கூறமுடியாது நூதன முறையில் ரிஜிஸ்தர் விவாகமாகையினால் அன்று சாயங்காலம் எல்லோருக்கும் தோட்டக்கச்சேரி வைத்து மோதிரம் மாற்றிவிடத் தீர்மானித்திருந்தார்கள். அன்று காலையில் நீலாவும் அவள் காதலனும் அடிக்கடி சந்திப்பதும், ஆவல் மிகுதியினால் கட்டியணைத்து முத்தமிடுவதும், மனத்தில் கொந்தளிக்கும் விஷயத்தை வெளியிட்டுப்பேசுவதும், இன்று மாலை கல்யாணம் நடந்துவிட்டால் பெருத்த சுகானந்தக்கோட்டையில் அகமகிழலாம் என்றும் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். தடபுடலாக விருந்திற்கு வேண்டிய பக்ஷண பலகாரங்கள் தயாராகிவிட்டன.

மாலை மணி 5 ஆனது. நீலாவும் அவள் காதலனும் ஆடம்பரமாக அலங்கரித்துக்கொண்டு அவர்களுக்கென அமர்த்தப்பட்டுள்ள ஆசனத்தில் அமர்ந்தார்கள். அழைப்புப் பத்திரம் சென்றிருந்த எல்லோரும் ஒவ்வொருவராக வரத்தொடங்கினார்கள். சரியாக 5 மணிக்குள் சகலமானவர்களும் வந்து கூடிவிட்டார்கள். உடனே ரோஜாமாலைகளை தம்பதிகளிருவருக்கும் அணிவித்து, மோதிரத்தை மாற்றி, பெரிய பிரசங்கங்கள் பலபேர் செய்து பின்னர் பாட்டுக் கச்சேரி நடந்தது. அதன்பின் விருந்து நடந்தது. அதன்பின் சதிர்க் கச்சேரி நடக்கத் தொடங்கியது. ஆடுகிற பெண் வெகு அழகுடையவளாயும், அபிநயத்தில் மிக்க தேர்ச்சி பெற்றவளாயும் இருந்தமையினால் எல்லோரும் ஆநந்தமாகக் கேட்டுக்கொண்டும் பார்த்துக் கொண்டும் இருந்தார்கள். நீலாவும் அவள் புருஷனும் அந்த நாட்டியத்தைக் கண்டு, அவர்கள் பாடும் பாடலைக் கேட்டு, அதன் அர்த்தத்திலீடுபட்டு இருந்தார்கள்.

அத் தருணத்தில் கல்யாண மாப்பிள்ளை திடீரென்று “ஹா! ஹா! மார்பு அடைக்கின்றதே! மாரடைக்கின்றதே! ஐயோ! அப்பா! ஹா! ஹா! நீலா! என்னை அணைத்துக் கொள். மாரைத் தடவு. மூச்சுவிட முடியவில்லையே! ஐயோ!” என்று பெருத்த சத்தமிட்டுத்

தவிக்கலானான். இந்த எதிர்பாராத கூக்குரலைக்கேட்டதும் நாட்டியம் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் பலர் "என்ன! என்ன!" என்று கூவியவாறு மணமகனருகில் வந்து கூடி விட்டார்கள். நீலா திடுக்கிட்டு விழிக்கலானாள். எல்லோரும் கிடு கிடாய்த்துப் போய் விட்டார்கள். நாட்டியமும் அப்படியே நின்றுவிட்டது. ஆண், பெண் இரு பாலரும் மிக்க திகிலடைந்து மணமகனின் அருகில் கூடி விட்டார்கள்.

வினாடிக்கு வினாடி மணமகனின் நிலைமை வெகு கவலைக்கிடமாகிவிட்டது. உடனே அவனை மெல்ல நால்வராகப் பிடித்துக் கொண்டு சென்று சோபாவில் படுக்க வைத்தார்கள். அவனுடைய ஆடம்பர உடையைக் களைந்தார்கள். அங்கு விருந்திற்கு வந்திருந்தவர்களில் இரண்டு பேர்கள் பெரிய டாக்டர்களாகையினால் உடனே அவர்கள் நோயாளியைக் கவனித்தார்கள். குஞ்சரியம்மாளுக்கும் ஏகாம்பரத்திற்கும் இன்னதென்று சொல்லவியலாத விதமான துக்கமும் கவலையும் பாதிக்கின்றது. நோயாளியைக் கவனித்த டாக்டர்களின் முகம் உடனே மாறுபட்டு வருத்தத்தையும் பயத்தையும் காட்டியது.

அவர்களின் முகக் குறிப்பை யுணர்ந்த மற்ற எல்லோருக்கும் அபாரமான பயம் உண்டாகி விட்டது. நோயாளி தன்னிறையழிந்தவாறு, "ஹா! நீலா! நீலா! என் கண்மணி! என் அன்பே! நான் மகா பாவி! மகா த்ரோகி! சண்டாளன் உன்னை நேசித்தேன்; தூர்த்த முறையில் நேசித்தேன். அதற்குப் பலனைக் கடவுள் என்னைக் கொண்டு போகப் போகிறார். நான் இனி பிழைக்க மாட்டேன். பேசவதற்குக்கூட முடியவில்லை. என் மார்பு பிளவு பட்டுவிடும் போல விருக்கிறது. ஹா!" என்று கத்துகிறான்.

வந்திருந்தவர்களெல்லாம் இந்த கோரத்தைக்கண்டு சகியாது வீடு திரும்பி விட்டார்கள். சிலர் அங்குமிங்கும் உலாவுகிறார்கள். குஞ்சரியம்மாளுக்கு குலசேகரனின் உருவம் அப்படியே கண்ணெதிரில் நிற்கின்றது. தானும் தன் மகளும் குலசேகரனை நடத்தியதெல்லாம் நினைவில் வருகிறது. நீலாவுக்கு ஆகாயம், பூமி அயோமயமாகிவிட்டது. மீண்டும் நோயாளி "ஹா! என்னரிய பெற்றோரே! உயிருடன் நன்றாக விருந்த வீரனை, அக்கினி சாக்ஷியாக மணந்த மணாளனைக் கண்டு "என்று சாவு நேரும்?' என்றும் 'அவன் சீக்கிரம் சாகானா?' என்றும் பாவி நான் உத்தமமான குலசேகரனைக் கசந்தேனே! கேவலமான சிற்றின்பத்தின் ஓர் இழிவை இனிப்பாக எண்ணி மகா பரிசுத்தமான வீரனுக்கு முடிவளிக்க வேண்டினேனே! ஏ நீலா! நீயும் உனக்குக் கடவுளால் அக்னி சாக்ஷியாக

அளிக்கப்பட்ட கணவனுக்குக் கொடுமைகள் செய்தனை. அவன் இறப்பதிலேயே கருத்தை நாட்டியிருந்த முதல் துரோகி நீதான், நாம் இருவரும் சந்தோஷமாய் வாழுவதற்கு அவன் குறுக்காக இருக்கிறான் என்று அவனை சித்திரவதை செய்தாய். கலிகாலக் கடவுளுக்குக் கண்ணில்லையா! அதை அறியாது நாம் வீணாகத் துள்ளிக் கவிழ்ந்து பெரும் பாவத்தைப் பகிர்ந்து கொண்டோம். நீயாக முதன் முதல் வலுவில் வந்து என்னையும் இழுத்துப் பாபத்தைப் பங்கிடச் செய்தாய். அந்தோ! நாம் சகிக்க எண்ணிய துரோகத்தைக் கடவுள் அறியாதவரன்று; ஆகையினால் நம் கைமேல் பலனைக் காட்டிவிட்டார். நான் இனி பிழைக்க மாட்டேன். ஆயிற்று; இன்னும் சில நிமிஷங்களில் என்னுயிர் போய்விடும். ஆ! குலசேகரா! நீ எங்கு இறந்து கடவுளாக இருக்கின்றாயோ! உனக்கு நான் செய்த துரோகத்தை மன்னிக்க வேண்டும். குலசேகரா! குலசேகரா! தேசபக்தி மிகுந்த உத்தம வீரா!"......என்று கூறியவாறு திடீரென்று கண்ணை விழித்து விட்டான்; பிராணனும் பறந்து போய்விட்டது.

அந்தோ! கடவுளை மறந்து நாம் என்கிற அகம்பாவத்தை உடையவர்களின் கதி இதுதான். என்ன கலியுகம்! பரிசுத்தமான வீரன் இறக்கவேண்டிக் கடவுளைப் பிரார்த்தனை செய்துத் தான் இன்ப மனுபவிக்க எண்ணிய நீலாவிற்குக் கடவுள் இன்பத்தைக் கொடுப்பாரா! மணமகன் பிணமகனாகியதுதான். இந்த நிமிடத்திற்கு முன்னிருந்த பாடல், ஆடல் எல்லாம் அடித்துக்கொண்டு போய் அழுவதும் முட்டிக்கொள்வதுமாக ஆய்விட்டது. மணமகள் பிணத்தின் அருகில் கூட உட்காராது எழுந்து அப்புறம் போய்விட்டாள். குஞ்சரியம்மாள் தான் அசாத்யமாய்ப் புலம்புகின்றார்கள். மரகதமும், அவள் தாயாரும் பிணத்தின்மேலே விழுந்து அழுகின்றார்கள். "ஆ என் செல்வா! உங்கள் குடும்பத்தில் நான் ஒருத்தியே தனிப்பட்டவளாக விருந்தேன். நான் எத்தனை முறை உங்கள் துர்யோசனையை வேண்டாமென்று தடுத்தேன்; எத்தனை தரம் நல்ல புத்தி கூறினேன்· என் வார்த்தை செவியில் ஏறியதா, இல்லையே! எல்லாம் இப்போதேனும் தெரிகிறதா! ஐயோ! அநியாயமாய் ஒரு உயிரைக் கொலை செய்துவிட்டீர்களே! அந்த பாவமன்றோ கைமேலாகக் காட்டிவிட்டது. என்னருமைக் குழந்தாய்! கண்ணே! இனி நான் என்ன செய்வேனடா! கடவுளாலேயே விதவை யாக்கப் பட்டவளை வேண்டுமாயின் தாராளமாக மணந்துகொள்ளலாம். தானாக வேண்டுமென்று ஒரு வீரனைக் கொலை செய்துப் பின்னர் மணப்பதா உசிதம்! ஐயோ! அடி பாவி! நீலா! சண்டாளி! உன்னால் தான் என் குழந்தையை இழந்தேன்டி! உன் கொலைப் பாதகம் என் குழந்தையைத் தாக்கி விட்டதே! ஹா! என்ன செய்வேன்?" என்று

இன்னும் ஏதேதோ வாயில் வராததெல்லாம் வயிறெரிந்து கூறிப் புலம்புகின்றாள்.

குஞ்சரியம்மாளும் "ஐயோ! கொலை செய்த கொடுமை இன்றல்லவா கண்டேன். கொலை தான்; சந்தேகமின்றிக் கொலைதான். ஏழை என்று எத்தனை கொடுமையாக நடத்தினேன். எத்தனை உதாசீனமாகத் திட்டினேன். மனத்தைப் புண்ணாக்கினேன். சண்டாளி நான் 'பணம்! பணம்!' என்று பாழாகி விட்டேனே! என் செல்வச் செருக்கால் நான் அழிந்து விட்டேனே! ஐயோ! குலசேகரா! உன்னைச் செய்த சதி எனக்கே வாய்த்ததே!" என்று தன்னிரையழிந்து உண்மைகள் பலவும் கூறி முட்டிக் கொள்கிறாள். நீலா இன்னதென்று தெரியாமல் தத்தளித்துப் பயித்தியம் பிடித்தவள்போல விழிக்கின்றாள். குலசேகரனின் உருவத்தையே அவள் மனத்தில் நினைக்காது விலக்கி இருந்தாள்; அத்தகைய நீலாவுக்குக் குலசேகரனின் அலகை ரூபம் கண்ணெதிரில் தெரியலாயிற்று. அவ்வாறு தெரிவதால் அலறலானாள். "ஐயோ! நான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்து விட்டதே! குலசேகரனைக் கொலை செய்தவன் யார்.... நான் தான்....நான் தான்....துன்புறுத்தி உயிரை வதைத்து நான் இன்புற எண்ணியதற்குப் பலன் கிடைத்தது...."என்று பலவாறு எண்ணியவளாகிப் புலம்புகின்றாள். ஏகாம்பரமும் உண்மையில் குலசேகரனை அப்போதே நினைத்து வருந்துகிறார்....இனிமேல் என்ன நடந்தது என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

* * * * * *

மேல் குறித்த சம்பவங்கள் நிகழ்ந்து சுமார் ஆறுமாத காலமாகிவிட்டது. இந்த ஆறுமாத காலமாக ஏகாம்பரத்தின் குடும்பம் பெங்களூருக்கு ஜாகை மாறிவிட்டது. அவர்களுடைய செய்தி காற்றூடிப்போல ஒவ்வொரு ஊருக்கும், ஒவ்வொரு மனிதருக்கும் பறந்துவிட்டதால் இவர்களுக்கு மதிப்பென்பது காலில் மிதிப்பாய் விட்டது. கொலைகாரக் குடும்பம் என்றே எல்லோரும் கூறத் தொடங்கினர்கள். ஏகாம்பரத்தின் குடும்பத்தின் குட்டுகளெல்லாம் மூடியிருந்த கை விரிக்கப்பட்டுப் போய்விட்டதால் அவனுக்குப் பணங்கொடுத்த எல்லோரும் அவனிடத்தில் வெறுப்பு கொண்டு உடனே பணத்தைக் கேட்க வாரம்பித்தார்கள். அவன் ஒரு பாங்கி வைத்திருந்து அதை நடத்திவந்தான். அதுதான் அவனது தொழிலாக இருந்தது. அவன் வேண்டுமென்றே குலசேகரனைக் கொன்று விட்டான் என்ற செய்தி எட்டியமாத்திரத்திலேயே 'இக்கொலைக்காரனின் பாங்கியிலும் இனிப் பணமிருக்கலாகா' தென்று நினைத்த எல்லோரும் ஒரே காலத்தில், நீலாவின் இரண்டாங் கணவன் இறந்த

ஒரு வாரத்திற்குள், இந்த விஷயம் முற்றிலும் பரவியதோடு எல்லோருக்கும் ஒரு வெறுப்பும் ஆத்திரமும் உண்டாகி, "அத்தகைய சண்டாளனின் பாங்கியில் பணமிருந்தால் அதையே சாகடித்தவன் பணத்தை என்ன செய்யமாட்டான்; ஆகையினால் உடனே வாங்கி விடவேண்டும்." என்று ஒரே கட்டுப்பாடாய்த் தங்கள் எண்ணத்தையும் அருவருப்பையும் காட்டியே பணத்தைக் கேட்க வாரம்பித்தார்கள்.

ஏக காலத்தில் எல்லோரும் பணத்தைக் கேட்டுவிட்டதைக் கண்ட ஏகாம்பரம் இன்னது செய்வதென்பதை அறியாது திண்டாடுகிறான். அவன் நிலைமை வெகு கவலையிலாழ்ந்துவிட்டது "ஹா! கடவுளே! நான் செய்த பாபத்தை அறிந்தேன். திக்கற்ற சிறுவனை நான் வதைத்துப்பேசிய பேச்சுக்களால் அவன் உயிர்துறந்த பாபத்தை அறிந்தேன். ஏக காலத்தில் நான் எவ்விதம் எங்கிருந்து பணத்தைத் தருவேன். எனக்கிது பெரிய சோதனைக் காலமாகி விட்டதே! ஹா! குலசேகரா! குலசேகரா! உன் மகிமையை நான் இன்றுதானடா அறிந்தேன்" என்று கண்ணீர் வடிக்கின்றான். குலசேகரன் குளத்தில் விழுந்து மாண்டதற்கு இவர்கள்தான் காரணம் என்பது நன்றாக வெளிப்படையாகத் தெரிந்தவுடன் அவனுக்கு வேண்டிய சிநேகிதர்கள் இது விவரத்தைப் பற்றியும், குலசேகரனைக் கொண்டாடியும் பத்திரிகைகளில் வரைய வாரம்பித்தார்கள். ஏகாம்பரத்திற்கு வேண்டியவர்களே அவனை வெறுத்து விலக்கிப் பத்திரிகையில் திட்டத்தொடங்கினார்கள். இந்த சங்கடத்தை எல்லாம் கண்ட குஞ்சரியும் ஏகாம்பரமும் அப்படியே இடிந்துபோய் விட்டார்கள்.

4-வது அதிகாரம்

இல்லற வாழ்வே நல்லறமாகும்

குலசேகரன் ஏழைகள் மத்தியில் ஏழைப்பங்காளனாக விளங்கி ஆனந்த சித்தனாக விருக்கிறான். ஏழைகளுடன் அவர்கள் செய்யும் கட்டை வெட்டும் வேலை, தண்ணீர் இறைப்பது முதலிய சகலமான வேலைகளைத் தானும் செய்து மகிழ்கின்றான். இவனுடைய கடிதம் சென்ற மறுதினமே பத்திரிகைக்கு முன் பணம் 50 ரூபாய் வந்துவிட்டது. இன்னும்

அனேக பத்திரிகைகளுக்கும் இவன் விஷயதானம் செய்திருப்பதால் அங்கிருந்து 20, 25, 30 இவ்விதமாக தொகைகள் வந்தன. எல்லாத் தொகைகளும் சேர்ந்து மொத்தம் 175 ரூபாயாயிற்று. அந்தத் தொகையை முற்றும் அந்த ஏழைகளுக்கே செலவழித்துப் பெரும் பயனை விளைவிக்கத் தீர்மானித்தவனாய் அவ்வூரிலுள்ள தச்சனை யழைத்துவந்து சுமார் 30 சர்க்கா (கைராட்டினங்களை) செய்யச்செய்தான்; 3 கதர்த்தறிகள் போட்டான். கோயிலுக்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய மைதானம் காலியாகக் கிடந்ததை அதன் சொந்தக்காரரிடம் பேசி இனாமாக வாங்கிக்கொண்டு அதில் ஓர் பெரிய பந்தல் போட்டான். அந்தப்பந்தலில் பாரதமாதா, மகாத்மா காந்தி, லக்ஷ்மி, சரஸ்வதி முதலிய படங்களை மாட்டி காந்தி சர்க்கா சங்கம் என்ற பெயரையிட்டு, போர்டும் மாட்டி இந்த ராட்டினங்களை அதில் போட்டு அந்தச் சங்கத் திறப்பு விழாவைச் செய்தான்; அதில் முக்கியமாக வேலை ஒழிந்த நேரத்தில் ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் முதலியோர் நூல் நூற்பதும் அந்நூலையே நெய்து அதை விற்று அதை வியாபாரத்திற்கு முதலாக்குவதுமாக ஏற்பாடு செய்துவிட்டான். முக்கியமான பெரிய செட்டிமார்களையும், ஜமீன்தார்களையும், மிராசுதாரர்களையும் நேரில் கண்டு அவர்களிடம் இந்த தர்ம கைங்கர்யத்தின் விஷயங்களை எடுத்துக்கூறி ரொக்கமானப் பொருள் யாசித்துச் சேர்த்துப் பெருந்தொகையாக்கி இந்த சங்கத்தையும் கதர்த்தறிகளையும் ஸ்தாபனம் செய்துவிட்டான். படிப்பின் வாசனை யறியாதிருந்த ஜனங்களுக்கெல்லாம் நன்றாகப் படிக்கவும், எழுதவும் தெரிந்துவிட்டது. பெண்மக்களும் படிக்கக் கற்றுக்கொண்டு வெகு நாகரிக முறையில் நடக்கவாரம்பித்தார்கள்.

இந்த விஷயங்கள் அடுத்தடுத்துள்ள கிராமங்களில் பரவியதும் சுமார் 10 மைல் தூரத்திலிருந்து ஏழைகள் நடந்துவந்து இங்கு படிப்பு சொல்லிக்கொள்ளவும், சர்க்காவில் நூல் நூற்கப் பழக்கிக்கொள்ளவும் ஆரம்பித்ததோடு தங்கள் கிராமத்திற்கும் நமது குலசேகரனை வரும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். நமது குலசேகரன் ஒவ்வொரு கிராமத்தையும் இவ்விதமே சீர்திருத்தும் எண்ணங்கொண்டு அவனால் கூடியவரையில் வெகு சந்தோஷத்துடன் தனக்கு வரும் பணத்தை எல்லாம் ஏழைகளுக்கே செலவிட்டு ராட்டினத்தை ஏராளமாக அபிவிருத்தி செய்து ஜனங்களுக்குச் சுலபமாகப் பிழைக்கும் வழியைக் காட்டிவிட்டான். மாதம் 110 ரூபாயிக்குக் குறையாமல் குலசேகரனுக்குப் பத்திரிகைகளின்மூலம் கிடைக்க வாரம்பித்தது.

குலசேகரன் வீட்டைவிட்டு வெளியேறி சுமார் ஆறுமாதத்திற்குமேலாகிவிட்டது. இந்த ஆறுமாத காலத்தில் இவன் செய்

துள்ள வேலைகள் அபாரமானதாய்ப் பிரகாசிக்கத் தலைப்பட்டன. ஒவ்வொருவரும் "எங்கள் ஊருக்கு வரவேண்டும்; எங்கள் ஊருக்கு வரவேண்டும்." என்று போட்டியின்மேல் அழைக்கத் தலைப்பட்டார்கள். அந்த ஊரிலிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் குலசேகரனை குருவாக மதித்து குருசாமி! குருசாமி! என்றே அழைத்ததனால் அவனுக்கு அப்பெயரே பிரபலமாகிவிட்டது. குலசேகரன் என்கிற பெயர் மறைந்துவிட்டது. நமது குலசேகரன்மட்டும் தினம் குறிப்பாகப் பத்திரிகையைப் படித்துக்கொண்டே தனது மாமியார் வீட்டுச் செய்தியை அறிந்துகொண்டான். நீலாவின் மறுமணமும், அன்றே அம்மணமகன் இறந்ததும், சகமான செய்தியும் பத்திரிகையில் படித்து நீலாவின் அதிர்ஷ்டத்தை வெறுத்தான். தன்னை அவர்கள் செய்த கொடுமைகளெல்லாம் இந்த ஏழை ஜனங்கள் காட்டும் அன்பினால் மறைந்துவிட்டன. ஏழைகளுக்குள் ஏழையாக இவன் விளங்கியதால் அந்த ஊரைச் சுற்றிலுமுள்ள கிராமத்தினர் உள்பட குருசாமியையே தங்களுக்கு நாட்டாண்மைக்காரனாகத் தீர்மானித்து எந்த விஷயத்தையும் அவனுடைய யோசனைப்படிக் கேட்டுத்தான் செய்வது வழக்கம்,இவ்விதமே சில வருடங்களாயின.

குருசாமியின் அபாரமான புகழ் நாடெங்கும் பரவிவிட்டதால் தேசாபிமானத்தில் முதிர்ந்த அனேக பெரியார்கள் செல்வத்தைப் படைத்த சீமான்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஏராளமான பொருள் சகாயம்செய்து குருசாமியை மகாத்மாகாந்தியின் மற்றொரு உருவம் என்றே தீர்மானித்து அந்த ஊரிலேயே ஓர் பெரிய கதர்க்கடையை வைத்து அதற்கு குருசாமியை மானேஜராக ஏற்படுத்திவிட்டார்கள். கதர் அபிவிருத்திக்காக சர்க்கா ஓட்டமும், தரிகளின் செழிப்பும் அபாரமாகப் பெருகிவிட்டன. பருத்தித் தோப்புக்கள் ஏராளமாக பரவிவிட்டன. நமது குலசேகரன் அந்த மானேஜர் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்தானெனினும் பல்லாயிரக்கணக்கான ஏழைகளின் ஏகமனமான இஷ்டத்தைத் தவிர்க்கமாட்டாது ஏற்றுக்கொண்டான். அந்தக் குப்பைக்காடுபோன்றிருந்த ஊர் நல்ல பட்டணம்போலாகிவிட்டது. இந்த கதர்க்கடையை ஓர் தனித்த ஆசிரமம்போன்ற இடத்தில் அமைத்துவிட்டதனால் அந்த ஆசிரமத்திற்கும் கதர் கடைக்கும் வரும் ஜனங்கள் தினேதினே விருத்தியாகிக்கொண்டே இருந்தனர். பல ஜாதி மலர்ச்செடிகளும், கனித்தருக்களும், காய்கறிக் கொடிகளும், வாழை, தென்னை முதலிய மரங்களும் அவ்வாச்ரமத்தைச் சுற்றி பெரிய தோட்டமாக செழித்துக் காண்போருக்குப் பெரும் மனோகரத்தையும் இன்பத்தையும் அளித்தன.

அக் கதர் கடையில் ஆண் பிள்ளைகளுக்கு விற்பனை செய்வதற்கும் பெண் பிள்ளைகளுக்கு விற்பனை செய்வதற்கும் தனித் தனி

யாக இடம் அமைத்து, எடுத்துக் கொடுப்பதற்கும் ஆண்கள் பெண்கள் தனித்தனியாகவே அமைத்துவிட்டான். தான் முதலில் உபகாரம் செய்த ஏழைகள் ஆண் பெண் அடங்க இப்போது நல்ல அறிவாளிகளாயும், சர்க்கா சங்கத்தையும் கதர்த் தறியையும் மேல் பார்வையில் நடத்தக்கூடிய நிலைமைக்கும் வந்துவிட்டார்கள்.

நமது குலசேகரன் தன் வேலையை சிரமேற் தாங்கி தினம் கடமையாக நடத்துவதுடன் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதிலும் ஊக்கமாக விருந்தான். இவனிடத்தில் கல்வி கற்றுத் தேறிய சிறுமிகளையே தன் கடையில் வியாபாரம் செய்ய நியமித்தான். இந்த கதர்ச் சாலைக்கு ஏராளமான பணத்தை உதவிய சண்முகநாதன் என்றவருக்கு தேச பக்தி இன்னதென்று தெரியாமலிருந்தது. அவருக்கு மனைவி காலமாகிவிட்டாள். அவள் தன்னுடைய அடையாளமாக ஓர் பெண் மகவு மட்டும் அளித்துச் சென்றாள். அப் பெண் மகவு தாதியின் பாதுகாப்பில் வளர்ந்து தனது 8 வது பிராயத்தில் அவ் வூரிலுள்ள ஓர் பெண்கள் பாடசாலையில் சேர்ந்தாள். அந்த பாடசாலையிலேயே படித்து அவ்விடத்திலேயே (ஹாஸ்டல்) இருப்பதற்கும் வசதி கிடைத்திருந்தது. திக்கற்றவர்கள், தூரத்திலுள்ளவர்கள் எல்லோரும் அங்கேயே இருந்து படிக்கலானார்கள். பாடசாலையின் உபாத்தியாயினி மிகவும் தயாள குண முடையவளாகையினால் குழந்தைகளிடத்தில் அன்பும், ஆதரவும் காட்டி வெகு நன்றாக நடத்திவந்ததால் பெண்கள் சுறு சுறுப்பாகத் தமது கல்வியைக் கற்று நல்லொழுக்கத்துடன் விருத்தியானார்கள்.

ஒருதினம் அப்பாடசாலையின் உபாத்தியாயினி பெண்களை எல்லாம் கண்காட்சிச் சாலைக்கு அழைத்துச் சென்று வீடு திரும்பினாள். அக்கலாசாலையில் நமது குலசேகரனால் நூற்கப்பட்ட நூலும், கைத் தறியில் அவனாலேயே செய்யப்பட்ட ஒரு சிறு சவுக்கமும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்ற உபாத்தியாயினி "அதை யார் செய்தது" என்று விசாரிக்கையில் நமது இளவலின் இணையிலாப் புகழ் நன்கு விளங்கியது. அதுமுதல் அவள் அத்த கைய வீரனின் கதர் ஆலயத்தைப் பார்க்கும் அவாக் கொண்டாள். தேச பக்தியில் அம்மாதும் பிரியங்கொண்டவளாகையினால் தன் பள்ளிக்கூடத்திலும் சர்க்கா சுற்றும் வேலையை ஒரு பாடமாக ஏற்படுத்தி இருந்தான்.

மனத்திலுண்டாகிய அவாவினால் ஒரு தினம் தனது பாடசாலைப் பெண்களுடன் குலசேகரன் சர்க்கா கழகத்தைப் பார்க்க வந்தாள். அந்த ஊரிலுள்ள ஏழை ஜனங்களின் சீர்திருத்தத்தையும்

அவர்களின் தேச பக்தியையும், குலசேகரனின் சாந்த குணத்தின் உயர்வையும், அவனால் இத்தனை ஜனங்கள் க்ஷேமப்படுவதையும், கண்டும் கேட்டும் மிக்க மனம் பூரித்து ஆநந்தத்துடன் குலசேகரனைப் பார்த்து "ஐயா! உங்களுடைய புகழ் உலகெலாம் சுற்றிக் கொண்டு விட்டது. அதனைக் கேள்வியுற்ற நாள் முதல் தம்மைப் பார்க்கும் ப்ரியங் கொண்டு வந்தேன். தங்களைப் போன்று நான்கு வீரர்கள்—கருணை வள்ளல்கள்—நம் நாட்டிலிருப்பார்களேயானால் நமது தேசம் சீர் திருந்த மடைந்து சுதந்திரம் பெற்றுவிடும் என்பதில் ஐயமே இல்லை." என்று தன் மனத்திலுள்ள சந்தோஷத்தால் ஏதேதோ பேசினாள்.

குலசே:—அம்மணி! அதொன்று மில்லை. என் கடமை என்று நான் செய்தேனே யல்லாது புகழை நான் விரும்பவில்லை. புகழும் பணமும் விரும்பிச் செய்யும் எந்த காரியமும் ஈடேறாது இடையில் மடிந்துபோகும். ஏழைகளின்மீது கொண்ட ஆசையினால் இதைச் செய்து அவர்களுக்குப் பிழைக்க 'வழி செய்துகொள்ளும்படி என்னால் கூடியதைச் செய்து வருகிறேன். இன்னும் பொருள் உதவி தான் குறைவு. பொருள் உதவியை யாரேனும் பிரபலஸ்தர்கள் செய்தால் இக் காரியத்தை இன்னும் பெரிதாக்கி ஆயிரக் கணக்கான ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கலாம். செல்வ மிருப்போருக்கு மனமில்லை; மன மிருப்போருக்குச் செல்வமில்லை. இரண்டு மிருப்போருக்கு தேச பக்தி இல்லை. இவ்விதம் எல்லாம் அமையப் பெற்றோர் அகப்படுவது அரிதாக இருக்கிறது. இப்படித் தான் நாம் நமது தாய்நாட்டையே இழந்தோம் என்று பெரிய பிரசங்கம் போலப் பேசிக்கொண்டே வந்ததை கலாசாலை மாணவிகளும் உபாத்தியாயினியும் கேட்டு அபாரமான ஆநந்தத்தையும், துக்கத்தையும் அடைந்தார்கள்

அந்த மாணவிகளில் ஒருத்தியான சண்முகநாதரின் புதல்வி அவ் வசனத்தைக் கேட்டதும், அவ் வீரனைக் கண்டதும் தன்னையே மறந்தாள். "ஹா! நாமும் நமது செல்வத்தைச் செலவழித்து உய்யும் வழி யறியாது பாழாகின்றோமே! இவ்விதம் ஏழைகளுக்குப் பயன் படுத்தினால் எத்தகைய புண்ணிய முண்டாகும்! ஆகா! அக் காலம் நமக்குப் பிறந்து நாமும் தேசத்திற்கு உழைப்போமா! தேச விடுதலைக்குப் பாடு படுவோமா! ஏழைகளின் பசியை ஆற்றுவோமா!" என்ற பெரும் ஏக்கமும் அடக்க வியலாத மனவேட்கையும், தேச பக்தியும் ஒருங்கே பொங்கிவிட்டன. உடனே தனக்கு வேண்டிய 4 புடவைகள், ரவிக்கைச் சீட்டிகள், தன் பிதாவுக்கு உடைகள் முதலியவற்றை அவ்விடத்திலேயே வாங்கிக்கொண்டாள். அந்த ஏழைகள் குருசாமியிடத்தில் காட்டும் அன்பைக் கண்டு மிக்க சந்தோஷங் கொண்டாள். குலசேகரனைத் தரிசித்த

நாள் தனது வாழ்நாளில் ஒரு புண்ணியமான நாளாகக் கொண்டாள். அவனது சாந்தமும், கருணையும் வழிந்த பார்வையானது அந் நங்கையின் இருதயத்தில் நன்றாகப் படிந்துவிட்டது. தன் மனத்தில் ஏதேதோ தீர்மானித்தாள்.

பிறகு அவர்கள் குலசேகரனிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு சென்றார்கள். இந் நங்கை அன்றைய தினம் தன் தந்தையிடம் சென்று தான் கண்ட காட்சிகளை எல்லாம் எடுத்துக் கூறி "அப்பா! உமக்கும் இதோ கதர் உடைகள் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறி அவர் மனத்தில் நன்றாகப் படியும் வண்ணம் தேச பக்தியை எடுத்து ஊட்டிக் குலசேகரனின் அழியாப் புகழையும், அவன் கூறிய மொழிகளையும் விவரமாகக் கூறினாள்.

'தன் ஒரு பெண்ணே தனது உயிர் நிலை' என்று எண்ணி இருக்கும் சண்முகநாதர் தன் புதல்வியின் மாறுதலையும் அவளுடைய பொன்னுரைகளையும் கேட்டவுடன் அவரது மனமும் சடக்கென்று மாறுபட்டது. தேசபக்தி என்ற சூரியன் இதயத்தில் உதயமானான். கதர் சேலை தரித்திருக்கும் தன் பெண்ணின் எழில் முன்னிலும் அதிகமாகப் பிரகாசித்து அவர் கண்ணிற் விளங்கியதால் தானும் உடனே மகளின் இஷ்டப்படி கதர் அணிந்தார்.

தந்தையின் மாறுதலைக் கண்டு களித்த தனையள் "அப்பா! நமக்குக் கடவுள் ஏராளமான செல்வத்தை யளித்துள்ளார். இவை நமக்கு அரிய காரியத்தில் பயன் பட்டால் மிக்க புண்ணியமுண்டு அந்த மகானுபாவன் "செல்வத்தின் உதவி குறைவு" என்று வருத்தமாகத் தெரிவித்தார். நமக்குள்ள பெருந் திரளான செல்வத்தில் பாதி அந்த ஏழைகளின் உபயோகத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகின்றது. தாங்கள் தடுக்கலாகாது." என்று எத்தனையோ விதமான உபமானங்களுடன் தந்தை மனத்தில் பதியும்படியாகக் கூறி அவரைத் திருப்பிவிட்டாள்.

இதுகேட்ட ஷண்முகநாதன் மிக்க சந்தோஷமடைந்து "என் செல்வச் சீமாட்டி! நளினலோசனி! என்னுடைய வாழ்நாளில் நான் என்னுயிராக மதித்துள்ளது உன்னை யன்றி வேறல்லவென்றதைக் கடவுள் அறிவார். நான் உன் மனத்திற்கு விரோதமாக எதையும் செய்யமாட்டேன்; உன்னிஷ்டப்படியே நான் உன்னை மகிழ்விப்பதுதான் என் ஆநந்தம். ஏழைகளின் உபகாரத்தில் எனக்கும் வெகு சந்தோஷந்தான்; ஆகையினால் அப்படியே செய்வோம்" என்று கூறினார்.

பின்னும் சில தினத்திற்குள்ளாக ஷண்முகநாதர் பெருந் தொகையாகிய ஐம்பதாயிரம் ரூபாய் நோட்டுக்களாக எடுத்துக் கொண்டு நளினாக்ஷியுடன் கூட குலசேகரனின் இருப்பிடம் வந்து சேர்ந்தார். அப்போது சத்குண சம்பன்னனாகிய குலசேகரன் கை ராட்டையில் நூற்றுக்கொண்டிருந்தான். இவர்களைக் கண்டு வணங்கி உபசரித்து உட்கார வைத்துப் பின் மீண்டும் நூல் நூற்க வாரம்பித்து நூற்றவாறே பேசலானான். நளினாக்ஷி தன் மனத்தின் இஷ்டம் பூர்த்தியானதற்காகக் கடவுளை வணங்கிப் பின் குலசேகரனைப் பார்த்து "ஏழைப் பங்காளரே! அன்று தமது வாக்கைக் கேட்டதுமுதல் என் மனமே மாறியது. எங்களுக்குக் கடவுள் ஏராளமான செல்வத்தை யளித்திருக்கிறார். நாங்கள் அச் செல்வத்தை நல்வழியில் பயன் படுத்தும் மார்க்கத்தை எங்களுக்குத் தாங்கள் உபதேசித்தீர்கள். இதோ 50000 ரூபாய்; ஏழைகளுக்குக் கஞ்சி வாருங்கள்" என்று கூறி அந்தத் தொகையை அவன் பாதத்தடியில் வைத்துப் பின், "இவர்தான் என் பிதா! சண்முகநாதர் என்பது இவர் நாமம். என் அன்னை பரலோகமடைந்தாள். நான் இதுவரையில் எனது பாடசாலையில் பயின்று உபாத்தியாயினியின் உதவியில் வளர்ந்தேன்," என்று தன் சரிதையைச் சுருங்கத் தெரிவித்தாள்.

இந்த எதிர்பாராத வார்த்தைகளைக் கேட்டதும், பணத்தைக் கண்டதும் குலசேகரன் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்து 'எல்லாம் பாரதமாதாவின் அனுக்ரகம்' என்று வணங்கி மனத்தால் துதித்தான். இந் நங்கையின் தீரத்தையும், தேச பக்தியையும் வியந்தான். ஷண்முகநாதனைக் கண்டு மிக்க பணிவோடு வணங்கி "ஐயன்மீர்! தங்களுடைய இவ்வுதவியை ஏழைகளும், பாரதமாதாவும் என்றும் மறக்க வியலாது. இதன் பலன் உம்மை ஏழு ஜென்மாவிற்கும் தாங்கும்" என்று பின்னும் ஏதோதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

பின்னும் சில தினத்தில் இச்செய்தி ஊர் முற்றும் பரவியதால் இன்னும் அனேகர் உதவி புரிய முன் வந்து, நாம் முன்னர் குறித்த கதர் ஆலயம் பெரியதாக நிறுவப்பட்டது. அனேக ஊர்களுக்குக் கதர் உதவி செய்யலானார்கள். சர்க்காக்களும் கைத்தறிகளும் வலுத்துவிட்டன. அக் கதராலயத்தின் பொக்கிஷதாரியாக ஷண்முகநாதனையே நியமித்தார்கள். பெண்களுக்குக் கதர் எடுத்துக்கொடுக்கும் வேலையை நளினாக்ஷி ஒப்புக்கொண்டாள். அவர்கள் வெகு சந்தோஷமாக அந்த வேலையைச் செய்து வந்தார்கள். குலசேகரன் ஒரு வாரத்திற்கு ஒரு முறை கதர்

துணிகளை நிரம்ப எடுத்துக்கொண்டு வெளியூரில் விற்றுக்கொண்டு தேச விஷயத்தைப் பிரசாரம் செய்து, மகாத்மாவின் வைபவத்தை எடுத்துக் கூறி ஜனங்களின் மனத்தைக் கவருவதானான். அவனோடு இன்னும் சிலரும் நளினாக்ஷியும் செல்வது வழக்கம். இவ்விதமே கதர் அநேக ஊர்களில் பரவியதோடு அங்கங்கே இதன் கிளை ஆலயங்களும் ஸ்தாபனமாயின.

நமது குலசேகரன் முற்றிலும் புதிய புகழுடன் விளங்கி ஆநந்தப் பெருக்கி வீடுபட்ட நாள் முதல் அவன் பழய துக்கம் அறவே மறந்தொழிந்தது. அவன் வீட்டை விட்டு வெளியேறி இப்போது சுமார் 7, 8 வருடங்களாய்விட்டன. இப்போது குலசேகரனுக்கு 28 வயதாகிறது. அவனுடைய யௌவனமும், வசீகரத் தோற்றமும் நாளுக்கு நாள் செழித்துக்கொண்டே வந்தது அவன் மாதப் பத்திரிகைக்கு ஒரு கதை எழுதிக்கொண்டு வருகையில் அதில் சிருங்கார ரஸபாகம் எழுதும்போது அவன் ஒருநாளும் கண்டறியாத புதிய உணர்ச்சியும் மனத்தில் மாறுதலும் திடீரென்று உண்டாயிற்று. இதன் காரணத்தை அவனே யறியான். அக்கதையில் ஒரு அழகிய நங்கை தக்ளியில் நூற்றுக்கொண்டே உத்யான வனத்தில் உலாவுவது போலும், அப்போது அவள் காதலன் பின்புறமாய் வந்து விளையாட்டாகக் கண்ணைப் பொற்றுவதுபோலும், பிறகு இன்னாரென்று தெரிந்துகொண்டு கைவிலக்கச் செய்வதும், உல்லாசமாக இருப்பது போலவுமான சந்தர்ப்பம் எழுதும்போது அவனை யறியாது அவன் கண்முன்பு நளினாக்ஷியின் உருவமே தோன்ற வாரம்பித்தது. அவன் எழுதும் கதாநாயகியை வர்ணிக்க எண்ணுகையில் நளினாக்ஷியே காட்சி கொடுப்பதால் பிரமித்து "இதென்ன மாறுதல்! ஒருநாளும் கண்டறியாத நூதன விதமான தோற்றங்கள் உண்டாகின்றனவே! அந்த மின்னாளை நான் எனது உடன்பிறந்த சோதரியாக எண்ண வேண்டி வெகு பிரயாசைப் பட்டும் அவ்வாறன்றி அவளிடம் கூற வியலாத ஒருவித பாசம் தோன்றியதோடு இன்று ஏன் திடீரென்று இத்தகைய மாறுட்டம் உண்டாகிவிட்டது! ஏ பாரதமாதா! களங்கமற்ற சிந்தையோடு என்னை இதுகாறும் வளர்த்தாய், இப்போது களங்கம் ஒன்றை விளைவித்துவிட்டாயே! இதென்ன காரணம். இம் மாயை மூடாத மனிதர் உலகத்திலில்லையோ!.......ஆ!......., நீலாவுடன் நான் இருந்த நாளில் கூட இத்தகைய மாறுதலைக் கனவிலும் கண்டறியவில்லையே!......இதென்ன ஆச்சரியம்! நளினாக்ஷியின் உருவம் அவள் முதல் நாள் வந்த அன்றே இதயத்துள் சென்று மறைந்தது. அக்காலை மறைந்த தோற்றம் ஓர் சிறு விதையாக ஊன்றி நாளுக்கு நாள் என்னை யறியாமலேயே வளர்ந்துவிட்டதே!.......

இந்த மாறுதலை இன்று வரையில் யாருக்கும் காட்டாதிருக்கையில் இனி இவ் வெண்ணம் தானாக வெளிக் கிளம்பிவிடும்போலிருக்கின்றதே!....கருணை வள்ளலே!....இதுதான் உன்னாலளிக்கப்பட்ட தெய்விகமான காதல் கனியோ! இதுகாறும் அறியாமல் என் மனத்தே பழுக்கச் செய்து வெளிக் கிளப்பினாயோ!....தேச பக்தியி லீடுபட்ட வனிதையைக் காட்டி என்னைப் பிணைத்தாயே, அதுவே நான் செய்த பாக்கியந்தான். இன்று இக் கதையை, பூர்த்திசெய்யவேண்டுமே! கதையிலோ விவாகமான தம்பதிகளின் உல்லாசத்தை வரைகிறேன். அதை வரைய விடாது என் மனம் ஏன் என்னைத் தடுக்கின்றது." என்று எண்ணமிட்ட வண்ணம் கையில் பிடித்த பேனாவுடன் மேஜையின்மீது முழங்கையை யூன்றி விரல்களைத் தாடையில் பதித்தவாறு உட்கார்ந்திருந்தான்.

அத்தருணம் நளினாக்ஷி தக்ளியில் நூற்றவாறு புன்னகை ததும்பிய பார்வையோடு அவ்விடம் வந்து "மானேஜர்! 8897 நம்பர் உள்ள சேலையின்மீது விலை போடவில்லை. அதை யாரோ கேட்கிறார்கள். அதன் விலையைப் பார்த்துச் சொல்லவேண்டும். என்று கேட்டவாறு அவனைக் கவனித்தாள். ஏதோ பெருத்த யோசனையோடு அவன் உட்கார்ந்திருப்பதை யறிந்தாள். நாவல் கலவரம் போலும் என்று எண்ணி "என்ன மானேஜர்! ஒருவாறு இருக்கின்றீர்கள்? நாவலின் ரஸமோ! அன்றி ஏதேனும் தேக அசுகமோ?" என்றாள்.

நமது இளவல் மனத்தில் ஏற்கெனவே போராடிக்கொண்டிருந்த விஷயத்திற்கு அனுகூலமாக இந்நங்கை தக்ளியில் நூற்றவாறே வந்து காட்சி கொடுத்ததானது அவனால் கூற வியலாத அபாரமான ஆச்சரியமும் ஆநந்தமும் உண்டாக்கிவிட்டது. அவனை யறியாத வசீகர காந்த உணர்ச்சி தேகத்தில் மின்சாரம் போலப் பாய்ந்துவிட்டது. "நான் அந்த நம்பரைச் சொல்லிவிட்டால் அவள் போய்விடுவாளே" என்கிற ஏக்கமும் உடனே உதித்தது. தன் மனோ விசாரத்தை எடுத்துக் கூறவும் மாட்டாது தியங்குகின்றான். அச்சுந்திரவதியின் முகத்தை தன்னை யறியாது உற்றுப் பார்த்தான். அப்பார்வையானது அம்மின்னாளின் இருதயப் பெட்டியில் அடக்கமாகிவிட்டது. அங்ஙனம் அடக்கமான பெட்டியை சாற்றுவதுபோல தலை திடீரென்று நாணத்தினால் குனிந்தது. ஏற்கெனவே நமது வாலிபனின் உள்ளத்தைக் கவர்ந்த வனிதை இந் நிமிடத்தில் பின்னும் பற்றி இழுத்துவிட்டாள். குலசேகரன் கனவிலும் கண்டறியாத அவ் வானந்த நிலைமையில் கையில் பிடித்த பேனாவுடன் மறுமொழி பேசாது ப்ரமை கொண்டு உட்கார்ந்தான். இதென்ன நமது மனத்தில் இவ்விதமான எண்ணம் உதித்ததே!.....

ஹா........எத்தனையோ அரிய பெரிய தவ மாமுனிகளை எல்லாம் இப்புரந்தான் விடவில்லை என்றால் கேவலம் எளியன் என்னையா விடுவான்........ஆம்...நாம் ஏன் மணம் செய்துகொண்டு தர்ம பத்தினியோடு இல்லறம் நடாத்தி தேசப்பணி செய்யலாகாது. தம் பதிகளாக தேசத்திற்கு உழைக்கும் எத்தனை புனிதர்களில்லை. அவர்களைப்போல நாமும் அவ்வாறு உழைத்தால் என்ன?.....என்ன மூட எண்ணம்....இந்த காரியம் ஆகக்கூடியதா! நாம் விரும்பும் நங்கையும் அவள் பிதாவும் சம்மதித்தல்லவா இக் காரியம் ஆக வேண்டும்? அவர்கள் சம்மதிப்பார்களா!.......நாம் இப்புவியில் ஜெனித்தவன் ஒண்டி யன்றோ! என் விஷயத்தை நானே யன்றோ கேட்கவேண்டும். இந்த வனிதையின் உத்தம குணமும் உயர்ந்த போக்கும் தேசபக்தியின் மகிமையும் ஒன்று கூடி என்னை அடிமை யாக்குகின்றனவே! ஏ கடவுளே! என்னை வேடிக்கை செய்யாதே!'' என்று தனக்குள் தான் அபாரமாய் யோசித்துக்கொண்டே பதில் பேசாது வீற்றிருக்கிறான்.

அத்தருணம் நளினா தன்னை மீறிய மின்சார சக்தியை உதறித் தள்ளிவிட்டு மேஜையின் அருகில் நின்றாள். உண்மையில் குலசேகர னின் மாறுதல் இன்னதென்று நளினா அறியமாட்டாள். ஆகையி னால் அவன் மாறுதலைக் கண்டு மனவருத்தங் கொண்டவளாய், "மானேஜர்! உங்கள் மாறுதலின் காரணம் தெரியவில்லை. தேக அசுகமோ என்று மிக்க விசனமாகவிருக்கிறது. தயவுசெய்து தெரி விக்கவும். என் தந்தையைக் கூப்பிடட்டுமா! சேலைக்கு யாரோ காத்திருக்கிறார்கள்'' என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

நமது குலசேகரன் எந்த பெண்களையும் "அம்மா! அம்மணி! தாயே!'' என்று கூப்பிடுவது வழக்கம்; நளினாவையும் அது போலவே அழைத்திவந்தான். நளினா மனக்கலக்கத்தோடு கூறிய வார்த்தையைக் கேட்ட குலசேகரன் தன்னையறியாமலேயே அவளை நோக்கி "நளினாக்ஷி! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை.......ஹா........ புத்தி பிசகினேன். உங்களைப் பெயரிட்டு அழைத்ததற்கு மன் னிக்கவேண்டும்........அம்மா! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை; கவலை கொள்ளவேண்டாம்'' என்று மேலே கூறி முடிப்பதற்குள் நளினா பேசத்தொடங்கி "மானேஜர்! என்ன இது! விபரீதமாக ஏதோ சொல்லிவிட்டதுபோல மன்னிப்புக் கேட்பது நியாயமா! என்னை நீங்கள் "அம்மா! அம்மணி!'' என்று அழைப்பது எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. என் பெயரைத் தாங்கள் கூறி அழைக்கவேண்டும். என்றும், நான் தங்களின் அடிமையாகவே இருந்து தேசசேவை செய்யவேண்டுமென்றுந்தான் என்னுள்ளம் விரும்புகின்றது. ஆகை

பினால் நான் மன்னிக்கவே முடியாது. 8897 நம்பர் புடவை விலை என்ன?" என்றாள்.

இதுகேட்ட குலசேகரனுக்கு இரு கருத்துகளுடன் பொருள் விளங்கலாயிற்று. எதற்கும் பின்னொரு சமயம் சாவகாசமாக யோசிக்கலாம் என்று நினைத்து அச்சேலையின் விலை ரூ. 18-6-9தான் என்றதும், நளினா தான் போய்வருவதாகக் கூறிவிட்டு ஒரு பார்வையில் குலசேகரனை ஆட்டிவிட்டு மறைந்தாள். குலசேகரனுக்கு அந்த பார்வையின் கருத்து விளங்காவிடினும் தன்னைக் கலக்கிவிட்டதையறிந்து மெய்ம்மறந்த ஆநந்தத்துடன் அக்கதையை எழுதி முடித்தான். குலசேகரன் தன் மனத்திலுள்ளதை வெளியிடுவதற்கு வெட்கித் தன் மனத்திலேயே அடக்கிவந்தான். இதனால் தேகம் மெலியவாரம்பித்தது. நளினாவின் மனத்தை அறியவேண்டி குலசேகரன் முயற்சிப்பதுபோல நளினாவும் அன்று குலசேகரனைக் கண்ட மாறுதல் யாதாகவிருக்கும் என்று அதையே அறிய ஆவல் கொண்டாள். பரஸ்பரம் தெய்வீகமான காதல் புஷ்பத்தின் மணம் கமகமவென்று கமழுகின்றதேயன்றி அதை பரஸ்பரம் தெரிந்துகொள்ளவில்லை. எவ்விதம் தெரிவிப்பது, எவ்விதம் வெளியிடுவது, மனத்தையறிவது? என்ற ஓர் சந்தேகத்திலும் வெட்கத்திலும் இடையில் சில மாதங்களும் சென்றன.

குலசேகரனின் மறுபாட்டை நளினா ஒருத்தி அறிந்தவள்; மற்றையோர் அறியார். குலசேகரன் தன் மனத்திலுள்ள ஆவலை யொருபுறம் அடக்கிக்கொண்டு தான் செய்துவரும் ஏழைகளின் தொழிலைத் தடைபடாமல் நடத்திக்கொண்டே வந்தான். குலசேகரனின் யௌவனத்தையும் அழகையும் கண்டு அனேகர் அவனை விவாகம் செய்துகொள்ளும்படியாக வேண்டிக்கொண்டே இருந்தும் ஆதியிலிருந்து அதை மறுத்தே கூறிவந்தான். எனக்கு விவாகம் செய்துகொள்ளும் ஆசை பகவான் பிறப்பித்த காலத்தில் செய்துகொள்ளுகிறேன்." என்று பதில் கூறிவந்தான்.

குலசேகரன் எந்தெந்த பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்கிறானோ அப்பத்திரிகைகள் எல்லாம் அவனுக்கு வருகின்றன. அவற்றை எல்லோரும் படித்துவந்தார்கள். அதனால் உலகத்தில் நடக்கும் சகல விஷயங்களும் நன்கு தெரியலாயின. அத்தகைய பத்திரிகையொன்றில் குலசேகரன் எழுதியிருந்த சிறு கதையொன்றில் இருவர் காதலித்ததாயும், ஆனால் ஒருவர் மனம் ஒருவருக்குத் தெரியாது வெட்கித் தவித்ததாயும், கடைசியில் அந்த மனோவேதனையினாலேயே மெலிந்து உயிர் துறந்துவிட்டதாயும் இருப்பதைக் கண்ட நளினாக்ஷியின் மனம் திடுக்கிட்டது; குலசேகரனின் மனத்தை நன்கு

வெட்டவெளியாக அறியவில்லை எனினும் அன்று அவன் பார்த்த பார்வையையும், அவன் நளினுக்ஷி என்று தற்செயலாக அழைத்த மனே மாறுபாட்டையும் கண்டு மிக்கக் குழப்பத்துடனே அதை யறிய முயற்சி செய்துகொண்டிருக்கையில் அக்கதையைப் படித்ததும் அந்த கதை தனது அனுபவமாகவேதான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்தாள். எப்படியெனில், தான் அன்று தக்ஷி நூற்ற வாறு சந்தித்ததும், அன்று பேசியதும், இன்னும் சில சம்பவங்களும் குறிப்பிட்டிருந்தமையினுல் குலசேகரனின் மனம் இவ்வாருகத்தான் இருக்கலாம் என்று யூகித்துக்கொண்டாள். இதனுல் அவனுக்கு ஏதேனும் கெடுதல் நேர்ந்துவிடப்போகிறதே என்று ஏக்கமும் உண்டாகிவிட்டதால் அதற்கு ஓர் மார்க்கம் செய்யவேண்டும் என்று தீர்மானித்துச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அந்த ஆசிரமத்தில் அடிக்கடி சந்திக்கும்படியான சந்தர்ப்பமும் கிடையாது. முக்கியமான காரியமானுல்தான் ஒருவரையொருவர் சந்திக்கலாம். அந்த நிலைமையில் அங்கு ஓர் பெருத்த கொண்டாட்ட நாள் வந்தது. அதாவது, குலசேகரன் அந்த ஊருக்கு வந்து சேர்ந்த நாளே ஓர் நன்னளாகக் கொண்டாடி வருடாவருடம் அந்தத் திருவிழாவை ஏழைகள் செய்துவருகிற வழக்கப்படிக்கு அந்த வருடத்திய திருவிழாவைக் கொண்டாடுவதற்கு ஏழைகள் எல்லாம் வெகு ஆரவாரத்துடன் ஏற்பாடு செய்துவருகிருர்கள். அந்தத் திருநாள் வைபவத்திற்கு இன்னும் ஒருவாரங்கூட இல்லை.

இந்தத் திருவிழாவன்று ஏழைகள் தம்தம் இஷ்டப்படிக்கு நமது குலசேகரனுக்குப் பரிசுகள் சக்திக்குத் தக்கபடி அளிப்பது வழக்கம். அதையவன் தேசத்திற்கும் ஏழைகளுக்குமே அர்ப்பணம் செய்துவருகிருன். முதல் வருடம் ஏழையாகவிருந்தவர்கள் இந்த வருடம் செல்வத்தைக் கண்ணுல் காணக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டதால் இவ்விழாவில் இன்னும் அதிகமான பரிசு கொடுக்க அவர்கள் நினைத்தார்கள். அந்த வருடம் கதராலயத்தில் வந்த புதிய மனிதர்களெல்லாம் குலசேகரனுக்குப் பரிசு கொடுக்கத் தீர்மானித்துப் பேசிக்கொண்டதை நமது நளினுக்ஷி கேட்டாள். தானும் ஏதேனும் ஓர் அடையாளம் கொடுக்கவேண்டுமென்று அவாக்கொண்டு அதைத் தந்தையிடம் தெரிவிக்க தந்தை இஷ்டம்போலச் செய்யும்படியாகக் கூறிவிட்டார். ஆகையினுல் நளினுக்ஷி குலசேகரனின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு தான் பரிசு செய்ய எண்ணி அக்காரணங்கொண்டு அவனைச் சந்திக்க இடம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

குலசேகரன் ஆபீஸ்வேலை பார்க்கும் இடம் வேறு; தான் சொந்த கதைகள் எழுதும் இடம் வேறு; ஏழைகளிடம் பேசும் இடம்

வேறு; தனது படுக்கை முதலிய வசதிகள் உள்ள இடம் வேறு. இவ்வாறாகப் பலவிதமாக இடங்கள் அமைத்துத் தன் வேலைகளை நடத்திவருகிறான். ஒரு தினம் தான் கதைகள் எழுதும் அறையில் தன்போக்காக உட்கார்ந்து யோசித்துக்கொண்டிருந்தான். மனத்தில் வெகு நாட்களாகக் கொந்தளிக்கும் விஷயத்தைப் பிறரிடம் கூறுதற்குச் சாத்யமின்றி அதை மனத்துள்ளேயே அடக்கி இருந்ததால் அவனால் அதைத் தாங்க வியலாத பெரும் வேதனையாகிவிட்டது. தன் விஷயங்களைக் கூறுதற்கு ஆப்தமானவர்கள் ஒருவருமில்லை. என்ற கவலை அதிகரித்தது. அவ்விதமான யோசனையில் நளினாக்ஷியின் காதலால் கட்டுண்டு உட்கார்ந்திருந்தான்.

அத்தருணம் இவன் கோரிய தேவதையாகிய நளினாக்ஷி இவன் எதிரில் நகைத்த முகத்துடன் பிரஸன்னமாகி மானேஜர் நான் உங்கள் வேலைக்குத் தடங்கலாக வந்துவிட்டேனா? அப்படியாயின் மன்னிக்கவும். நான் ஒரு முக்கிய விஷயமாக உங்களிடம் வந்தேன். நான் கோரிவந்த கோரிக்கையை நீங்கள் ஈடேறச்செய்யவேண்டும். எனக்கு அதற்சாக வாக்குறுதி யளிக்கவேண்டும்" என்றாள்.

இவன் யோசனையி லாழ்ந்திருக்கையில் சற்றும் எதிர் பாரா விதமாக வந்த நளினாவைக் கண்டதும் வியப்புற்று...“ஹா!.... வாருங்கள்; உட்காருங்கள். என்ன விசேஷம்? வரும்போதே பெரிய பீடிகைப் போட்டீர்களே!....இப்போது தான் உங்களைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறேன்...என்ன விசேஷம் சொல்லுங்கள். என்னால் கூடியவரையில் நான் பூர்த்தி செய்துவைக்கிறேன்" என்றான்.

நளினா:—இப்போது தான் என்னை நினைத்தீர்களா! எதற்காக நினைத்தீர்கள்?

குலசே:—ஒன்றுமில்லை. நான் ஒரு நாவல் எழுதினேன். அதில் ஒரு படம் சேர்ந்திருக்கிறது. அப்படத்தில் தத்ரூபம் உங்களையே அமைத்திருப்பதுபோல இருந்தது. அதைப் பார்த்ததும் உங்கள் நினைவு வந்தது.........விஷயமென்ன?

நளினா:—விஷயம் ஒன்றுமில்லை. தங்கள் பாத தூளி இந்நகரில் பட்ட நாளைக் கொண்டாடும் திருவிழாவிற்காக எல்லோரும் தங்கள் தங்கள் சக்திக்குத் தக்கடி பரிசளிப்பது வழக்கமாம். எங்கள் சக்திக்குத் தக்கபடி நானும் ஒரு சிறு பொருள் கொடுக்க இச்சிக்கின்றேன். தங்களுடைய இஷ்டத்தை அறிந்துகொண்டு அப்பொருளைக் கொடுக்க உத்தேசம். தாங்கள் எப்போதும்

இனாம் மூன்று நாவல்கள் இனாம்

நமது சந்தா நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, நமது சொந்த நாவல்களை மூன்று கட்டுகளாகப் பிரித்து ஐந்து ரூபாய் முன் பண மனுப்புகிறவர்கட்கு அவர்கள் கேட்கும் ஒரு கட்டு தபாற் செலவின்றி அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். ரூ. 15. மொத்தமாக அனுப்புகிறவர்களுக்கு கீழ்க் கண்ட மூன்று கட்டுகளிலுள்ள புத்தகங்களுடன் "சுகந்தபுஷ்பம்" "கோபாலரத்னம்" "மாதவமணி" என்ற 3 நாவல்களும் இனாமாக அனுப்பப்படும்.

1.	2.	3.
வைதேகி	பத்மசுந்தரன்	நவநீத கிருஷ்ணன்
சாருலோசனை	ராதாமணி	ருக்மிணீ காந்தன்
சண்பகவிஜயம்	கௌரீ முகுந்தன்	சாமளநாதன்
		வீர வஸந்தா

இனாம் ஒரு வருஷ சஞ்சிகையும் இனாம்

பல பரிசுகளும்

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்ததுமுதல் இதற்குள் நமது சந்தாதார்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதரவளித்து உற்சாகத்தை யுண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதார்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்க்கண்டவாறு பரிசுகள் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப்பார்களென்று நம்புகிறோம்.

			பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு		மாதவமணி அல்லது அமிர்தமாலினி
(2)	2 புதிய சந்தாதார்களை	,,	வீரவஸந்தா
(3)	3 ,,	,,	கோபாலரத்னம்
(4)	4 ,,	,,	சுகந்தபுஷ்பம்
(5)	5 ,,	,,	கௌரீமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை
(6)	6 ,,	,,	சண்பகவிஜயம்
(7)	7 ,,	,,	நவநீதகிருஷ்ணன்
(8)	8 ,,	,,	வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனை

'ஜகன்மோகினி' ஆபீஸ்

26. தோடித் தெரு, திருவல்லிக்கேணி

சென்னை.

இந்தியாவிலேயே மிகப் பெரிய ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியாகிய

நியூ இந்தியா அஷியூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்டில்

உங்கள் ஆயுள், கட்டடங்கள், சரக்குகள், மோட்டார்கார்களையும் இன்ஷியூர் செய்து ஓர் புதிய இந்தியாவை ஸ்தாபியுங்கள்.

இதன் வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 3,56,05,275.
இதன் மொத்த நிதிகள்	ரூ. 1,44,19,590.
காளது தேதிவரையில் செலுத்தப்பட்டுள்ள உரிமைத்தொகைகள் சுமார்	ரூ. 5,50,00,000.
1930-31-ஆூத்திய இதன் பிரிமிய வருமானம் சுமார்	ரூ. 81,00,000.

ஓர் பத்திரிகையின் அபிப்பிராயம்.

"உண்மையில் இந்தியாவிலேயே மிகப் பெரிய ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி "நியூ இந்தியா" தான். மூலதனத்தைக் கவனிக்குமிடத்து உலகிலுள்ள பல மிகப் பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் இது ஒன்றெனக் கூறலாம்."

"இந்தியன் இன்ஷியூரன்ஸ்,"—ஜூன் 1929

இதன் விசேஷ அம்சங்கள்:—(1) சாசுவதமாக பணம் செலுத்த சக்தியற்றவர்களுக்கு அனுகூலங்கள். (2) விபத்துக்கள் காரணமாக ஏற்படும் மரணங்களுக்கு இருவித அனுகூலங்கள். (3) தானாகவே ஏற்படும் பறிமுதலில்லா உரிமை. (4) விஸ்தரிக்கப்பட்ட அஷ்யூரன்ஸ்- (5) பிரதி மாதம், மூன்று மாதங்களுக்கொருமுறை, 6 மாதங்களுக்கொருமுறை செலுத்தப்படும் தொகைகளுக்குப் பிரத்தியேக கட்டணமின்மை. மிகக் குறைந்த பிரிமிய விகிதம். (6) புருஷன் மனைவி இரண்டு பேரும் சேர்ந்தோ அல்லது இரு கூட்டாளிகள் சேர்ந்து ஜாயிண்ட் லைப் எண்டௌமெண்ட் பாலிஸிகள் எடுத்துக் கொள்ளலாம்.

விவரம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதுக:—

4/5, முதல் லைன் பீச்,
மதராஸ்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்,
பிராஞ்சு மானேஜர்.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI" OFFICE
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

எங்கள் ஞாபகமாக அப்பொருளை உபயோகப் படுத்திக்கொள்ளத் தக்கதாக இருக்கவேண்டும் என்பது என் கருத்து. என் தந்தை இம் மோதிரத்தைக் கொண்டுவந்தார். இது தமக்குச் சரியா யிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அன்றி வேறு தமக்கு எந்த பொருள் தேவையோ அதைத் தெரிவிக்கவேண்டும்; இதில் வித்யாசம் கூடாது.

குலசே:—(சற்று யோசித்தான், ஆம்; நமது மனத்தை வெளியிட இதுவே தக்க சமயம்)......அம்மணி! அந்த ஏழை ஜனங்கள் தான் நான் எத்தனை சொல்லியும் கேளாது நான் ஏதோ சாதித்து விட்டதாகக் கூத்தாடுகின்றார்கள். நீங்கள் கூடவா அதில் கலக்க விருப்பம்.......அது கிடக்கட்டும். தாங்கள் என்னிடம் வாக்குறுதி கேட்டது போல நானும் கேட்கிறேன். நான் இச்சிப்பது எதுவா யிருப்பினும் தாங்கள் எனக்குக் கொடுக்கும் பக்ஷத்தில் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். இது கிடைக்குமோ. கிடைக்காதோ!

நளினா:—என்ன அப்படிப் பேசுகின்றீர்களே! தாங்கள் எதைக் கேட்டபோதிலும்—என் சொத்துக்கள் பூராவும் கேட்டபோதிலும்—நான் கொடுக்கத் தயார். அதைக் கூறவேண்டும்.—என்றாள்.

இதுகேட்ட குலசேகரன் தன் விருப்பத்தை வெளியிட வெட்கியவனாய், சற்று யோசித்தான்; எனினும் "இந்த எண்ணத்தில் வெட்கப்படுவதில் உபயோகமில்லை. எனக்கு அப்பொருள் கிடைக்கும், கிடைக்காது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டால் நாம் உடனே அதற்குத் தக்கபடி மனத்தைத் திருத்திக்கொண்டு நடக்கலாம். மனத்திலுள்ள விசாரத்தையும் போக்கலாம்." என்று தீர்மானித்துவிட்டான். ஆகையினால் அவன் ஒரு தனிச் சீட்டில்,

> நான் இவ்வுலகத்தில் என் ஆத்மார்த்தமாய், இருதய பூர்வமாய் கடவுள் மீது ஆணையாக—தெய்வீகமாய் உதித்த உத்தமக் காதலோடு விரும்பக் கூடிய பொருள் ஒன்றே ஒன்றுதான். அது எது? நளினமாகக் காட்சி கொடுக்கும் நளினாக்ஷியே யாகும். அது கிட்டுமோ?

என்று எழுதி அதை நளினாவிடம் கொடுத்துவிட்டுத் தலை குனிந்து மாதாவாகிய பூமிதேவியை நோக்கி நின்றான்.

இந்த சீட்டை எடுத்துப் படித்த நளினாவிற்கு உண்டான வியப்பிற்கும், திகைப்பிற்கும் எல்லையே இல்லை. அவன் மனத்தை அறியவேண்டித் தான் வெகு நாளாக எதிர்பார்த்தது இன்று கை கூடியது. ஆநந்த மேலீட்டால் தன்னை யறியாது இரு கண்களி

னும் கண்ணீர் முத்துப் போன்று உருண்டு குலசேகரன் மேஜையின் மீது விழுந்தது. தான் தன் மனத்தை எவ்விதம் வெளியிடுவது என்று லஜ்ஜையினால் நின்றாள் எனினும் உடனே பதில் தெரிவிக்காவிடின் தனக்கு இஷ்டமில்லை என்று நினைத்துவிடப் போகிறானே என்று எண்ணி அக்கடிதத்தை தன் பையில் போட்டுக் கொண்டு ஒரு சீட்டில்,

"சில மாதத்திற்கு முன்னாலேயே தாம் கேட்ட பொருளை தமக்கு மானஸீகமாக அர்ப்பணம் செய்துவிட்டேன் இன்று பகிரங்கமாய், ஆகாயவாணி பூமிதேவி சாக்ஷியாகத் தாங்கள் விரும்பிய பொருளை அர்ப்பணம் செய்துவிட்டேன். இது சத்தியம் சத்தியம்; சத்தியம்."

என்று எழுதி அதை அவன் கரத்தில் கொடுத்துவிட்டுத் தக்ஷணமே இரு பாதாரவிந்தங்களிலும் சாஷ்டாங்கமாய்ப் பணிந்தாள்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல குலசேகரன் அக்கடிதத்தைப் படித்துப் பேரானந்த மடைந்து "பாரதமாதா! யாவும் உன்னருளே! உன்னருளின்றி எதுவும் நடக்காது. நான் இல்லறத்திலிருந்தவாறு நல்லறமாம் தேச சேவை செய்யும்படி எனக்குக் கட்டளை இட்டனை போலும்." என்று பாரதத் தாயை வணங்கிப் பின் நளினாவை நோக்கி "நளினாக்ஷி! அன்று நீ தெரிவித்தது போன்று நளினாக்ஷி என்று ஏக வசனமாக இப்போது அழைக்கத் துடங்கிவிட்டேன் நான் ஒரு காலத்தில் ஒரு காரணத்தினால் உலகையே வெறுத்தவன். (என்று தன் சரிதையைக் கூறி) அத்தகைய எனக்கு இந்தவிதமான பந்தம் ஏற்படுத்திய கடவுள் ஏதோ உன் கருத்தைக் கொண்டு தான் செய்திருக்கவேண்டும். நாம் கேவலம் ஓர் சிற்றின்பத்தின் பொருட்டுச் செய்துகொள்ளப்போகும் மணம் அல்ல இது. இல்லற தர்மத்தை அனுஷ்டிக்கவும், சதி பதி இருவரும் தேசத்திற்கு உழைக்கும் துணைவர்களாக இருக்கவும் தான் வெகு காலமாக விரும்பினேன். கடவுள் இன்றே என் எண்ணத்தைப் பூர்த்தி செய்தார். நளினாக்ஷி! உன் தந்தையின் அனுமதியைப் பெறாது பதில் கூறிவிட்டாயே! இது சரியா!" என்றான்.

நளினா:—நான் தந்தையின் அனுமதியைப் பெற்றதற்கு இதோ அத்தாக்ஷிப் பத்திரம்—என்று ஒரு கடிதத்தைக் காட்டினாள்.

"என் செல்வக் குழந்தை நளினத்துக்கு சர்வமங்களமும் உண்டாவதாக. கண்ணே! நீயோ தாயற்ற சேய்; நானோ உன்னை ஈன்ற பிதாவாயினும் ஆண் மகனாகையால் என்னிடம் நீ சகஜமாகப் பேசுவது லஜ்ஜையாகும். ஆகலால் இதை எழுதுகிறேன். உனக்கு வயது 20 ஆய்விட்டது. உனக்கு

ஓர் தக்க வரனை இனித் தேடி மணம் முடிப்பது என் கடமை. எனக்கு மனப் பூர்வமாகப் பிடித்த வரன் நமது மானேஜர் குலசேகரன் தான். அவரை மணக்க நீ சம்மதிக்கும் பட்சத்தில் நானே அவரிடம் கேட்கிறேன். உன் விருப்பத்தை தெரியப் படுத்து. இதோடு வைர மோதிரம் வைத்திருப்பதை அவருக்குப் பரிசாகக் கொடு. அல்லது அவர் வேறு இஷ்டப்பட்டாலும் கேட்டுத் தெரிந்துகொள். எனக்கு வயதாகிக் கொண்டே வருகிறது. இன்னும் பலஹீனம் ஏற்படுவதற்குள் காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போகவேண்டுமென்று மிக்க ஆவலாக இருக்கிறது. சமீபத்தில் என் நண்பர் தணிகாசலம் செல்லப் போகிறார். தக்கத் துணையுடன் நானும் செல்ல உத்தேசம்; அதற்குள் உனக்கொரு காப்பாளனைக் கண்டு அவரிடம் ஒப்புவித்து விட்டுச் செல்லவேண்டும். நீ சற்றும் சங்கோஜமின்றி தெரிவிக்கவும்; லஜ்ஜை வேண்டாம்.

ஷண்முக நாதன்.''

அதைப் படித்ததும் குலசேகரன் கட்டுமீறிய பேரானந்தத்தையடைந்துப் பூரித்தான். அவன் தன்னை மறந்து இன்பத்தினால் நளினாவின் இரு கரங்களையும் பற்றித் தன்னிரு கண்களிலும் பதித்துக் கொண்டு, ''என் கண்மணீ! நாம் என்றும் பிரியாது தேனும் பாலும் போல தேச சேவையைச் செய்யவேண்டிய அருளை பாரதமாதா நமக்களிக்கவேண்டும்; நான் பரம்பரை ஏழை; நீங்கள் இருந்த செல்வத்தை தேசமக்களுக்கு உதவிசெய்துவிட்ட ஏழைகள். ஆகையினால் சரிசமமே ஆய்விட்டது. உன் மனப்போக்கையறிய நான் வெகு நாட்களாக முயற்சி செய்தேன். இன்றே விளங்கியது. கண்ணே! நிற்காதே; உட்காரு.'' என்று இருகரங்களையும் முத்துமாலைகளால் அலங்கரித்துப் பின் நாற்காலியில் உட்காரச்செய்தான்.

ஸ்திரீகளுக்குள்ள இயற்கையான லஜ்ஜை நளினாவை வந்து சூழ்ந்ததால் அவள் அப்படியே தலைகுனிந்த பதுமையானாள். குலசேகரனும் ஓர் பதுமையானான். அந்த சமயம் அவர்களடைந்த ஆனந்த வெள்ளத்தின் கரையை இச்சிறு பேனா எழுத முடியுமா! முடியவே முடியாது....5 நிமிடம் செல்ல இருவரும் தம்தம் மனத்தில் இதுகாறும் புதைந்துகிடந்த விஷயங்களைப் பேசிக்கொண்டார்கள்.

* * * * * *

மேற்குறித்த சம்பவம் நிகழ்ந்து நான்கு நாட்களாயின. ஷண்முகநாதன் தன் புதல்வியின் கடிதத்தின் மூலம் அவள் சம்மதத்தை யறிந்து குலசேகரனிடம் பிரஸ்தாபம் செய்தார். குலசேக

ரன் எதுவும் அறியாதவன்போலப் பேசி பிறகு சம்மதித்தான். இவ்விஷயத்தை மற்றையோருக்கும் தெரிவித்தார். இந்த சுபச் செய்தியைக் கேட்ட ஏழைமக்களும், குடியானவர்களும், இன்னும் சகலமானவர்களும் ஆனந்தக்கடலில் மூழ்கினார்கள். அவர்கள் கொண்டாடப்போகும் வருடக்கொண்டாட்டத்தன்றே விவாகத்தை நடத்திவிட நாள் பார்த்து நிச்சயித்துவிட்டார்கள். ஷண்முகனுக்குண்டாகிய சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

கல்யாண நாள் சந்திரோதயம்போன்று சிலுசிலுப்பாக உதயமாயிற்று. தேவேந்திரன் கொலுமண்டபம்போல அந்த கிராமம் பூராவும் ஏழைகள் அலங்காரங்கள் செய்துவிட்டார்கள். "நமது குரு சாமிக்குக் கல்யாணம்" என்று சிறிய குழந்தைமுதல் பெரிய கிழம் வரையில் துள்ளிக்குதிக்கின்றார்கள். ஏராளமான கும்பல் கூடிவிட்டது. ஏழைகளுக்குப் பலவிதமான தானங்களுடன் குலசேகரனுக்கும் நளினாக்ஷிக்கும் விவாகம் முடிந்தேறியது. அன்று அந்த ஊர் ஜனங்களும், இதர ஜனங்களும் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. தம்பதிகளின் களிப்பைக் கூறவேண்டுமோ! ஏராளமான பரிசுகள் கிடைத்தன. அவைகளை எல்லாம் ஒரு பைசாவைத் தான் எடுக்காமல் அப்படியே ஏழை மக்களுக்கே செலவழித்துவிட்டான். கனியும் இனிப்பும்போலும், மணியும் ஒளியும்போலும், மலரும் மணமும்போலும் தம்பதிகளிருவரும் ஏழைகளிடத்தில் அன்பு கொண்டு முன்னிலு மதிகரித்த வாஞ்சையைக் காட்டி ஆதரிக்கலானார்கள். ஆனந்தமயமாய் வாழும் அத்தகைய தம்பதிகளுக்கே அதன் ருசி விளங்கும். அருமை தெரியும்; தம்பதிகளிருந்தால் இத்தகைய தேசபக்தியோடல்லவா இல்லறம் நடத்தவேண்டும்" என்று எல்லோரும் போற்றிக் கொண்டாடலானார்கள்.

அடுத்த வருடம் இந்த ஆனந்தகரமான தம்பதிகளின் கனிந்த காதலின் விருக்ஷத்தில் உண்டாகிய கனிபோன்று ஓர் ஆண் சிசுவின் வடிவமாகி எல்லோரையும் மகிழ்விக்க ஜனனமாயிற்று. இவர்களுக்குக் குழந்தை பிறந்த சந்தோஷம் ஏழைகளுக்கே முதல் தாம்பூலமாயிற்று. பெற்றோர் தங்கள் குழந்தையைக் காண்பதற்கும் முடியாமல் ஏழைகளே சதா வைத்து வளர்த்துச் சீராட்டி ஆனந்தமடைந்தார்கள்.

இங்ஙன மிருக்குங்காலையில்தான் மாகாத்மா காந்தி உப்புச் சத்யாக்ரகம் ஆரம்பித்தார். மகாத்மா காந்தி தண்டிக்குச் சென்று உப்புக் காய்ச்சியபோது வேதாரண்யத்தில் அனேக தலைவர்களும் தலைவிகளும் உப்புக்காய்ச்சினார்கள். அதுபோல இன்னும் எண்ணிறந்த இடங்களில் காய்ச்சினார்கள். அதன்மூலம் முதல்முதல் ஸ்திரீகளின் சார்பாக சிறைக்கோட்டம் புகுந்த ஸ்ரீமதி ருக்மிணிலக்ஷ்மீபதி

யம்மானை உலகம் என்றும் மறக்காது. அதேபோல ஆயிரக்கணக் கான தலைவர்களும், பின் தலைவிகளும் சிறை சென்றார்கள். உலகம் போற்றும் உத்தமனும் காந்திபடிகளையும் சிறையிலிட்டார்கள்.

அச்சமயத்தில் நமது குலசேகரனும் உப்பு காய்ச்ச எண்ணித் தன் மனைவியை அழைத்து "என் கண்மணி நான் உப்பு காய்ச்சப் போகிறேன். நான் உனக்கு அதிகம் சொல்லவேண்டியதில்லை. நான் இருந்து நடத்துவதைவிட பதின்மடங்கு அதிகரித்த பக்ஷத்துடன் நீ சகல வேலைகளையும் கவனித்துக்கொள்ளவேண்டும். இதில்தான் நீ உனது தளராத தியாகத்தைக் காட்டவேண்டும், விசனிக்க லாகாது. நான் உன் இருதயத்தில் சதா இருக்கிறேன். குழந்தையை கவனித்துக்கொள். கண்ணில் நீர் வருவதுபோலிருக்கிறது. விடாதே! ஏழைகளுக்கு உழைப்பதைவிட இன்பம் வேறில்லை; ஆகையினால் நீ இதை நடத்துவதாக வாக்களித்து என்னையனுப்பு." என்று வெகு உருக்கமாகக் கேட்டான்.

நளினு தன் கணவனைப் பிரிந்திருக்கவேண்டுமே என்று வருத் தப் பட்டாலும் அவனுடைய மனம் கோணுமல் நடப்பதுதான் தனது கடமை என்பதனுலும், தேசத் தொண்டாற்றுபவர்களுக்கு உற்சாகமளிப்பதுதான் தருமம் என்றதனுலும் தன் விசனங்களை மாற்றிக்கொண்டாள். தானும் சிறைசெல்ல நினைத்தாள்; எனினும் தன்னுடைய பதி செய்துவந்த வேலைகளுக்குப் பங்கம் நேரும்; அதோடு ஏழைகள் மனம் உருகிவிடுவார்கள் என்கிற பரிதாபத்தை யும் முன்னிட்டுத் தன் பிராணபதிக்கு மனப்பூர்வமான திருப்தி யோடு பதிலளித்து அனுப்பினுள்.

அன்று அவ்வூரில் உப்பு காய்ச்சப்போகும் வைபவம் கூறத்திற மன்று. "குருசாமி ஜெயிலுக்குப் போய்விடப்போகிறுரே" என்று ஜனங்கள் கண்ணீர் சிந்த வாரம்பித்தார்கள். அவர்களுக்கெல்லாம் சமாதானம் சொல்லிவிட்டுக் குலசேகரன் தன் குழந்தைக்கு அன்பு முத்தங்களையிட்டுக் காதலியைக் கட்டித் தழுவி ஆனந்தக் காதல் முத்தமிட்டுக் கடற்கரை சென்றுன். ஏராளமான ஜனத்திரளின் மத்தியில் விரசிங்கம்போல "வந்தேமாதரம் பாரதமாதாவுக்கு ஜே! மகாத்மாகாந்திக்கு ஜே!" முதலிய கோஷத்துடன் சென்று உப்பு காய்ச்சினுன். உடனே போலீஸாரால் கைது செய்யப்பட்டான். மிகவும் சந்தோஷமான பார்வையோடு ஏழை ஜனங்களிடம் விடை பெற்றுக்கொண்டும், தேறுதல் கூறியும் சென்றுன்....கிரமப்படி கேஸ் விசாரணையாகி குலசேகரனுக்கு ஒருவருடம் தண்டனை விதித் தார்கள். இதைக் கேட்ட ஜனங்கள் விசனத்தை அடைந்து தாமும் உப்பு காய்ச்சி சிலர் ஜெயிலுக்குச் சென்றுர்கள்.

5-வது அதிகாரம்

தன் வினை தன்னைச் சுடும்

நாற்புறமும் கடன்காரர்களின் தொல்லை அதிகரித்துவிட்டதாலும், கொலைகாரர் என்கிற பெயர் வந்துவிட்டதாலும் தன்னுடைய பாங்கியில் ஒரேகாலத்தில் பணத்தைக் கொடுக்க முடியாமல் போனதால் தனது வீடுவாசல் நகை, நாணயம் முதலியனவற்றை அடகாகத் தருவதாய்ச் சொல்லியும் கேளாமல் ஏகாம்பரம் உபத்திரவிக்கப்பட்டதன்பயனாக நடக்க வேண்டிய கிரமப்படி எல்லாம் ஏலத்தில் போயின. பாங்கி "கோவிந்தா! கோவிந்தா! போயிந்தா! போயிந்தா!" என்று மூழ்கிப் போய் விட்டது.

ஏகாம்பரத்தின் டாம்பீக வள்ளலும், செல்வச்செருக்கால் ஒரு உத்தமனை மனம் நோகச்செய்த சீமாட்டிகளின் செருக்கும் அழிந்தன. இருக்க இடமின்றி வெட்கத்தினால் குன்றிப்போய் அவ்வூரை விட்டு நாம் முன்னர் தெரிவித்ததுபோல பெங்களூருக்கு வந்து சேர்ந்தார்கள். ஏகாம்பரத்திற்கு இந்த வேதனையே பெரிய ரோகமாய்விட்டதால் அவன் பெங்களூருக்கு வந்த சில மாதத்திற்குள் இறந்தான்.

தாயும், மகளும் தனித்து நின்றார்கள். அவர்களுக்குப் பிழைக்கும்வழி இன்னதென்று தெரியாது விழிக்குங்காலையில்தான் குஞ்சரியம்மாளுக்குத் தான்செய்த படுமோசங்களும் தன் வினை தன்னைச் சுடும் என்ற வாக்யமும் நினைவிற்கு வந்தது. செல்வச் செருக்குகொண்டு ஓர் பிச்சைக்காரனைத் தடிகொண்டு அடித்ததை குஞ்சரியம்மாள் நினைத்து அக்கிழவன் சொல்லிய வார்த்தையை எண்ணிக் கண்ணீர்விடலானாள். இவர்களுக்குத் தற்போதிய ஸ்திதி பிச்சையெடுப்பதையின்றி வேறு மார்க்கம் காணப்படவே இல்லை. குஞ்சரியம்மாள் தன் எண் சாண் உடம்பும் குன்றிப்போக பிச்சை எடுக்க ஆரம்பித்தாள். அவள் மனத்தில் பிச்சைக்காரக் கிழவனின் நினைவு விட்டகலவே இல்லை. அவர்கள் கண்ணீர்விட்டுக் கலங்கியவாறு தினம்பிச்சைகொண்டுவந்து அதில் ஜீவனம் பண்ணலானார்கள்.

தான் கிழவனைத் தடிகொண்டு அடித்துத் திட்டியதுபோல அவனை எத்தனையோ பேர்கள் கண்டபடி எல்லாம் திட்டுகையில் "ஐயோ! கிழவனைநோக்கிக் கிணறு, குளத்தில் விழுந்து சாகும்படிச் சொன்னேமே! நமக்கு இந்த கதி வந்துவிட்டதே! ஹா! கடவுளே! என் வினையே என்னைச் சுட்டுவிட்டது என்று கண்ணீர் உதிர்ப்பாள். அழுது அழுது கண்ணும் மங்கவாரம்பித்தது.

மகா கொடிய பாதகியாகிய நீலாவின் தீய எண்ணம் அப்போதும் விட்டொழியவில்லை. இவர்கள் வீட்டிற்குப் பக்கத்தில் வெற்றிலை பாக்குக் கடை வைத்திருந்த ஒருவனைக் கண்டு ஆசைகொண்டு அவனிடம் பேச்சுக்கொடுத்துப் பழகவாரம்பித்தாள். தான் இவ்விதம் கஷ்டப்படுவதைக் காட்டிலும் அவனோடு ஓடிவிடுவது நலம்; அன்றி அவனை மணந்துகொண்டு சுகமாக வாழலாம் என்று யோசித்து இதைத் தன் தாயிடம் லஜ்ஜையின்றிக் கூசாது தெரிவித்தாள்.

இதுகேட்ட குஞ்சரியம்மாள் ஆத்திரங்கொண்டு "அடி தடி முண்டை! இன்னுமா நீ இத்தகைய எண்ணங்கொண்டிருக்கிறாய்! ஒருவனைக் கொலை செய்தாயிற்று; அந்த பாபம் மற்றொருவனை அடித்துவிட்டது. இதோடு உன் மனம் வைராக்கிய மடையாது இன்னும் இவ்விதம் பேசுகிறாயே! சிச்சி! கழுதை! என் மனம் இதற்கு இனி சம்மதிக்காது" என்று கண்டித்துவிட்டாள். அதைக் கேட்ட நீலா தாயின்மீது கோபங்கொண்டு "சே! இவள் கிடக்கிறாள். நாம் ஒருவருமறியாது ஓடிவிடுவோம்." என்று தீர்மானித்து அக் கடைக்காரனுடன் ஏற்பாடு செய்துகொண்டாள்.

ஒரு தினம் இரவு இவர்கள் புறப்பட்டுப்போக ஏற்பாட்டுடன் கிளம்பிவிட்டார்கள். குலசேகரனின் சிநேகிதன் ஒருவன் இவன் கடையில் வெற்றிலை பாக்கு வாங்குவது வழக்கம். அவன் நீலாவைப் பார்த்ததுமுதல் 'அவளால்தான் தன் சிநேகிதன் இறந்தான்' என்ற ஆத்திரத்தினால் அவளுக்குச் சரியான புத்தியுண்டாக்க எண்ணி இந்த உளவை வெற்றிலைக் கடைக்காரனிடம் அன்று தான் கூறி "இவள் கொலைக்காரி" என்று உள் உளவையும் சொல்லிவிட்டான்.

இதைக்கேட்ட அவன் அதைக் காட்டிக்கொடுக்காமல் அவளோடு நள்ளிருளில் ஓர் இடத்தில் நின்று அவளை நையப் புடைத்து "மூதேவி முண்டை! கட்டிய கணவனைக் கொன்ற கொலைக்காரியே! என்னையும் கட்டிக்கொண்டு, என் சொத்துக்களையும் அபகரித்து, என்னைக் கொலைசெய்யவா எண்ணுகிறாய்?" என்று வாயில் வந்தவாறு திட்டி 'உதை உதை' என்று உதைத்துத் தள்ளிவிட்டுப் போய்விட்

டான். அந்தோ! செல்வச் செருக்கால் அழிந்த சீமாட்டி என்பதில் இவளுக்கு சந்தேகம் உண்டா!

இந்த வெற்றிலைக் கடைக்காரனின் கையினால் உதைபடும் வரையில் இவள் மனத்தில் இருள் மூடிக்கிடந்தது. அவன் உதை கிடைத்த உடனே, மண்டையில் தன்னுடைய நிலைமையும் தான் செய்த அட்டூழியங்களும் நினைவிற்கு வந்தன. குலசேகரனின் எழில் நிறைந்த முகம் அவள் கண்முன் தோன்றி "ஏ செல்வச் செருக்குடைய பேயே! உன் கதியைப் பார்." என்று இடித்துக் காட்டுவதுபோலத் தோன்றுகின்றது. "ஆகா! தாய் சொன்ன மொழிகளைத் தட்டியதற்குப் பலன் இதுபோதும். இப்போதே வீடு போய்ச் சேரவேண்டும்" என்று எண்ணி இரவோடிரவாக நடந்து தான்சென்ற வழியிலேயே திரும்பிவிட்டாள். அதிக தூரம் செல்லவில்லையாகையினால் வீடுவந்து யாதுமறியாதவள்போல திண்ணையில் படுத்துக்கொண்டாள். அன்று முதல் அவள் மனம் மாறி தனது பாலிய லீலைகளை எல்லாம் எண்ணிப் புலம்பலானாள். உயிரைவிடவும் துணிந்தாள். தன் மனத்தில் அன்றுமுதல் தீய எண்ணத்தை விட்டுவிட்டாள். தாயும் மகளும் சேர்ந்து தினம் இவள் ஒரு தெரு, அவள் ஒரு தெருவாகப் பிச்சை எடுக்கலானார்கள்.

இவர்கள் கொலைகாரர்கள் என்பது எப்படியோ அந்த ஊரில் தெரிந்துவிட்டதால குடியிருக்க வீடும் கிடைக்காது போயிற்று. அவ்வூரை விட்டு வேறு ஊருக்குச் சென்றார்கள். இப்படியே ஒரு ஊரிலும் தங்காது கால்கடையாகச் சென்று பிச்சை எடுத்து ஜீவித்து வருடங்களைக் கழித்து வந்தார்கள். இதற்கு மத்தியில் இருவரும் இறந்துவிட எண்ணி குளத்தில் விழுந்தும் சாகாமல் யாரோ தூக்கி விட்டார்கள். அதன் பிறகு "இந்த காரியத்திலும் உபயோகமில்லை. உயிரைக் கடவுள் எவ்விதம் கொண்டுபோவாரோ அதுவரையில் அனுபவித்துத்தான் தீரவேண்டும்" என்று நிச்சயித்து வருந்தியவாறு ஒரு ஊரை அடைந்தார்கள்.

குஞ்சரியம்மாளுக்கு ஜுரம் வந்துவிட்டதால் நீலா அவளைத் தனிமையில் விட்டுப் பிச்சைக்குப்போக முடியாமல் தவித்தவாறு ஒரு சத்திரத்துத் திண்ணையில் தாயைப் படுக்கவைத்துக்கொண்டு தானும் பக்கத்தில் அமர்ந்து மிக்க துயரப்பட்டுக்கொண்டே இருந்தாள். குஞ்சரியம்மாளுக்கு ஜுரத்தின் வேகம் பாதிப்பதோடு தாகம் அதிகமாக வரட்டுகின்றது. பசியும் ஒருபுறம் பாதிக்கின்றது. இந்த நிலைமையில் தான் எவ்விதம் தன் தாய்க்கு உணவு கொடுப்பது என்று அபாரமான வருத்தத்தைபடைந்து கண்ணீர் வடியவிட்டுக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தாள். அதற்கு அடுத்த

திண்ணையில் ஒரு பிச்சைக்காரக் கிழவன் உட்கார்ந்திருந்தான். அவன் நீலாவின் நிலைமையைக் கண்டு "ஏனம்மா கண்ணீர் வடிக்கிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு நீலா விவரத்தைக் கூறியதும் அக்கிழவன் "அம்மா! இதோ என்னிடம் ரசம் அன்னம் இருக்கிறது. இதைக் கொடுத்து அந்தம்மாளுக்குப் பசியைப் போக்கு பசியின் மிகுதியினால் களைப்பாக இருக்கும்" என்று கூறி சாதத்தைக் கொடுத்தான். அதை வாங்கி நீலா தன் தாயாருக்கு ஊட்டி இரு கை தண்ணீரையும் வார்த்தாள். இதை உண்ட பிறகு குஞ்சரியம்மாள் சற்று களை தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். யார் தனக்கு அன்னங் கொடுத்ததென்று கேட்டு அவனை உற்று நோக்கினாள். அந்தோ! தான் செல்வச் செருக்குடன் திமிர் படைத்திருந்த காலத்தில் தன்னை பிச்சைக்கேட்ட போது தான் தடிகொண்டு அடித்து அனுப்பிய கிழவன் என்பதை அறிந்ததும் அவளுடைய இருதயம் வெடித்துப் போய் விடும்போ லாய்விட்டது. அவள் கிழவனைப் பார்த்த நேரத்தில் கிழவன் குஞ்சரியை உற்று நோக்கினான். கிழவனும் திடுக்கிட்டு ஆச்சரியமுற்று எழுந்து இவ்விடம் வந்தான். அதற்குள் குஞ்சரி கிழவனின் காலில் விழுந்து "தாதா! நான் சண்டாளி; என் செருக்கால் அழிந்தேன். தருமத்தை நினையாது உத்தமனை வருத்திக் கொலைசெய்த கிராதகியானேன். நீர் அன்னாளில் சொன்ன வார்த்தைகள் என் மனத்தில் இன்றும் ஒலிக்கின்றன. மறக்கவில்லை. உமது சாபம் பலித்துவிட்டது" என்று கதறினாள்.

கிழவன் நகைத்துக்கொண்டே "எழுந்திரு எல்லோரும் கடவுளின் ஆள்கள் என்பதைமட்டும் மறக்கலாகாது. உங்கள் செல்வம் அழிந்து இந்த நிலையாகிவிட்டதா! ஹா! கஷ்டம் நான் பிச்சைக்காரனாக இருப்பினும் பிறருக்குக் கஷ்டம் வரக் கண்டு சகிக்கமாட்டேன். உம். எல்லாம் இறைவனருள்." என்றான். குஞ்சரியம்மாள் கிழவனின் உணவை அருந்திய பிறகு, அவன்பால் தான் செய்த கொடுமை வெளிச்சமாயிற்று. ஜுரத்தின் வேகத்தில் இத்தகைய மனக் கிலேசங்கள் தோன்றி பாதித்ததால் ஜுரம் அதிகரித்து ஜன்னி கண்டு இரண்டு நாளில் எமலோகம் போய்ச் சேர்ந்தாள்........

நீலா தனியே நின்றாள். கதறினாள்; முட்டிக்கொண்டாள். அந்த கிழவனின் துணையிலேயே இருக்கத் தொடங்கினாள். கிழவனும் நீலாவுக்குத் தேறுதலைக் கூறி "அம்மா! இந்த ஊருக்கு 8 மைல் தூரத்தில் சம்பகபுரி என்ற ஊர் இருக்கிறது; அதில் குருசாமி

என்ற ஓர் கலியுகக் கர்ணன் இருக்கிறாராம்; அவர் தர்ம பத்தினி நளினாக்ஷி என்கிற அம்மாள் அவருடைய தர்ம கைங்கர்யம் சகலத்திற்கும் நிழல்போல உதவி புரிகின்றாளாம். எந்த ஏழைகளை யும் ஆதரித்து வேலை கொடுத்துக் காப்பாற்றுகின்றார்களாம். இதைக் கேள்வியுற்று நான் அங்கு போவதற்குத்தான் ஊர் ஊராக நடந்து வருகிறேன். நீயும் வா; உன்னையும் அழைத்துச் செல்கி றேன். அந்தம்மாளைக் கண்டு காலில் விழுந்து வணங்கி ஏதேனும் வேலை இருந்தால் கொடுக்கும்படி கேட்டுப்பிழை". என்றான். அதற் கிசைந்த நீலா அவனுடன் வழிநடந்து அந்த ஊரை யடைந்தாள்.

இருவரும் குருசாமியின் வீட்டிற்குச் சென்று நளினாக்ஷியைக் கண்டு வணங்கி வேண்டினார்கள். நளினாக்ஷி அவர்களைப் பக்ஷமாக விசாரித்து "இன்று என் பர்த்தா சிறைச்சாலையிலிருந்து வருகிறார். எனக்கு வேலை அதிகமிருக்கிறது. நாளை பேசுகிறேன். இங்கேயே சாப்பிட்டுவிட்டு இருங்கள்" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

மகாத்மா காந்திக்கும் லார்டு இர்வின் ப்ரபுவுக்கும் ராஜி ஒப்பந்தம் நடந்ததன் ப்ரகாரம் எல்லோரையும் விடுதலை செய்துவிட் டார்கள். "நமது சற்குணபூஷணன் குலசேகரன் அன்றுதான் மாலை 4 மணி வண்டியில் வந்திறங்கப் போகிறான்" என்று அந்த ஊர்வாசிகளும் அதற்கு அடுத்த அனேக ஊர்வாசிகளும் கட்டுமீறிய களிப்புடன் அவ்வூரையே அலங்கரித்து மகர தோரணமும் ஜண் டாக்களும் (வெல்கம்) வரவேற்பு இதழ்களுமாகப் பறக்கச் செய்து விட்டார்கள். இரயிலடியில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் குல சேகரனின் வரவை நோக்கி எதிர் பார்த்துக்கொண்டிருக்கையில் வண்டி வந்தது. நமது நளினாக்ஷியும் குழந்தையும் ரயிலடியில் ரோஜா மாலையுடன் காத்திருந்தார்கள். தன் பர்த்தா சிறை வாசத்தை வெகு இன்பமாக முடித்துக்கொண்டு வரப் போகும் பெருமையினால் அங்கம் பூரித்தது.

வண்டி வந்தவுடன் "குருசாமிக்கு ஜே! குணபூஷணனுக்கு ஜே! வீர சிங்கத்திற்கு ஜே! எங்கள் குல தெய்வத்திற்கு ஜே! ஏழைப் பங்காளனுக்கு ஜே! த்யாகமூர்த்திக்கு ஜே!" என்று பலவிதமான ஜெ கோஷமும், கர கோஷமும் செய்து வண்டியிலிருந்து புன்னகை யுடன் இறங்கிய குலசேகரனுக்கு, கணக்கிலா வரவேற்புப் பத்தி ரங்களை வாசித்தளித்து, புஷ்ப மாலைகளைப் போட்டு, புஷ்ப இதழ் களைத் தூவி, தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள். நளினாக்ஷி தான் கொணர்ந்த கதர் மாலையையும், ரோஜா மாலையையும் போட்டு

ஆனந்த பாஷ்பத்தினால் குலசேகரனின் தாளை நீரோட்டி வணங்கி "நாதா! தங்கள் கட்டளைப்படிக்குச் செய்துவிட்டேன்." என்றாள்.

மேளமும் ப்பாண்டும் முழங்குகின்றன. குலசேகரன் குழந்தையை வாரிக் கட்டியணைத்து முத்தமிட்டு நளினாக்ஷியை நோக்கி "கண்ணே! மெச்சினேன்; மெச்சினேன். என்னரிய சகோதரர்களே! உங்களுடைய அன்பிற்கு நான் எப்படி பிரதி பலன் செய்வதென்று தெரியவில்லை." என்றான். ஆனந்தத் துக்கத்தினால் அதற்கு மேல் பேசக்கூடாது போகவே கையில் குழந்தையை எடுத்துக்கொண்டு ஊர்வலமாக நடக்க வாரம்பித்தான்.

நமது பிச்சைக்காரக் கிழவன் இந்த ஆரவாரத்தைக் காணவும் அத்தகைய ப்ரபுவைக் கண்டு களிக்கவும் சயிலடிக்கு வந்து கொண்டிருக்கையில் எதிரில் அபாரமான ஜனத் திரளுடன் ஊர்கோலம் வருவதைக் கண்டு கும்பலில் நுழைந்து நமது குலசேகரனைப் பார்த்தான். தனக்காகப் பரிந்து அடி வாங்கிய வீரன்தான் அவன் என்பதை அறிந்து ஆனந்தத்துடன் குலசேகரனின் முன்பு ஓடினான். இதற்குள் ஜனங்கள் கிழவனைத் தடுத்தார்கள். அதைக் கண்ட குலசேகரன், அதை உற்றுப் பார்க்கையில் பிச்சைக்காரக் கிழவனைக் கண்டுவிட்டான். 'ஹா! தாதா! பிச்சைக்காரத் தாதா! வாருங்கள்; உங்களால்தான் எனக்கு இத்தகைய த்யாகம் பிறந்தது. உம்முடைய அடியை நான் வாங்கியதால் தான் என் மனம் பரிபக்குவமாயிற்று.'' என்று ஏதேதோ விஷயங்களைக் கூறி கிழவனைக் கட்டித் தழுவினான். கிழவனுக்குண்டான ஆனந்த வெள்ளத்தால் அவன் பேச நாவெழாது புலம்புகிறான். இன்னதென்றறியாது கிழவன் கூத்தாடுகிறான்.

இந்த வைபவத்துடன் ஊர்வலம் வீடு வந்து சேர்ந்தது. வீட்டு வாயிலில் அமர்க்களமான கோஷங் கேட்டதும் படுபாவி நீலா அதைக் காணும் பொருட்டு கடைப் பக்கத்து ஜன்னலால் எட்டிப் பார்த்தாள். அந்தோ! இடியோசை கேட்ட நாகம் போல நடுங்கினாள். குலசேகரன்தான் குருசாமி என்கிற மாறு பெயருடன் விளங்குகிறான் என்பது தெரிந்ததும், தனது பழைய காலத்து நினைவுகள் வந்து சூழ்ந்துவிட்டன. அவளுடைய உயிர் பாதி போய்விட்டது. "ஹா!....மகா கொடிய சண்டாளி நான் இவர் முகத்தில் விழிக்கும் யோக்யதை யுண்டா! சிச்சி! நாம் இங்கு வந்திருப்பதை அவர் அறியு முன்னர் நாம் நமது நரக லோகத்தை யடையவேண்டும்'' என்று எண்ணி உள்ளே ஓடினாள். ஒரு துண்டு கடிதத்தில் ஏதோ எழுதி மேஜைமீது வைத்தாள். ஓசை செய்யாது புறக்கடை

வழியாகச் சென்று ஊர்க் கோடியிலுள்ள கிணற்றில் விழுந்து மாண்டாள்.

ஊர்கோலம் முடிந்ததும் எல்லா ஜனங்களையும் நல் லுபசாரங் கூறி யனுப்பிவிட்டு நமது வள்ளல் குலசேகரன் மிக்க அலுப்புடன் உள்ளே வந்தான். "எனக்கு இரயில் பிரயாணம் அலுப்பாக இருக்கிறது; நாளை பேசிக்கொள்வோம்" என்று எல்லோரையும் அனுப்பிவிட்டுக் கிழவனை மட்டும் உடன் அழைத்துக்கொண்டுவந்து உபசரித்தான். கிழவன் குஞ்சரியம்மாளின் நிலைமையையும், அவள் இறந்தது, நீலா இங்கு வந்தது முதலியவற்றையும் கூறக் கேட்ட குலசேகரனுக்கு சொல்ல வியலாத வியப்பு உண்டாகிவிட்டது. "ஆ! அவர்களின் கதி இவ்விதமாகவா முடிந்தது. உம் கலிகால தெய்வம் கண்மூடியா! அல்ல! அல்ல........அடாடா! செல்வச் செறுக்கால் அழிந்த சீமாட்டிகளே! சீமானே! இதுவோ உங்கள் முடிவு....தாதா! அந்த மூதேவி இங்கு வந்ததாகத் தெரிவித்தீர்களே! அச் சனியன் எங்கே! அதன் முகத்தில் நான் விழிக்க மனம் பிடிக்காவிடினும் ஏதேனும் பொருளேனும் கொடுத்து அனுப்பிவிடுகிறேன்.....களினு! ....கண்மணி!....... என்றழைத்தான்.

நாதன் குரல் கேட்ட நங்கை ஓடிவந்து என்னவென்று கேட்டாள். "களினு! இன்று காலையில் உன்னை யாரேனும் இங்கு வந்து கண்டார்களா!" என்று கேட்டான்.

களினு:—நாதா! ஆமாம்; ஒரு பிச்சைக்காரி வந்து தனக்கு ஏதேனும் வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டாள். அதற்கு நான் "பிறகு சொல்கிறேன்; இங்கேயே சாப்பிடு" என்று கூறிவிட்டேன். இங்கே சாப்பிட்டாளாம். அதன்பின் அவளைக் காணவில்லை. என் நாதா! எதற்குக் கேட்டீர்கள்?

குலசே:—கண்மணீ! நான் உன்னிடம் எனது சரிதையைச் சொல்லி இருப்பதை நீ மறந்திருக்கமாட்டாய். இவர்தான் அந்தப் பிச்சைக்காரக் கிழவர். இங்கு பிச்சைக்காரியாக வந்தவளே நீலாவென்ற சண்டாளி! நான் இறக்கவேண்டுமென்று கூறிய கொழுப்பு மிக்க நாரீ!—என்றதைக் கேட்டதும் களினு திடுக்கிட்டு "என்ன! அந்தம்மாளா பிச்சைக்காரியானாள்!............ஆகா!.......கடவுள் எப்போதும் கூலி கொடுக்கத் தயாராக இருக்கிறார் என்பது நிதர்சனமாகக் காட்டிவிட்டாரே! அந்தம்மாள் என்று தெரிந்திருந்தால் நான்..........

குலசே:—என்! தெரிந்திருந்தால் பட்டாபிஷேகம் செய்வாயோ! அந்தக் கழுதை உன் முகத்தெதிரில் வந்து நின்றதே

என்று நான் வருந்துகிறேன். நான்தான் குருசாமி என்று தெரிந்தால் வயிற்றெரிச்சலால் உன்னையும் குழந்தையையும் கொலையும் செய்திருப்பாள்....அது கிடக்கட்டும். சனியன் எங்கே தொலைந்திருக்கும்.

நளினி:—நாதா! நான் பட்டாபிஷேகம் செய்வேன். எப்படியெனில் அவள் செய்த கொடுமைகளை எடுத்துக் கூறி நன்றாக வயிற்றெரிச்சல் தீரப் பேசி இருப்பேன்.......இதோ! மேஜைமீது யார் கடிதம் வைத்திருப்பது?" என்று அக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

குலசேகரன் அக் கடிதத்தைப் பிரிக்கையிலேயே அது நீலாவின் கையெழுத்து என்று தெரிந்ததும், அதைப் படிக்கலானான்.

"முறை வைத்து எழுதும் பாக்கியம் அற்ற சண்டாளி நீலா நமஸ்காரம். உங்கள் தயாள குணம் உலகெங்கும் ஜொலிப்பதை யறிந்தேன். குருசாமி என்றவர் தாங்கள் எனபதை, தங்களை ஊர்வலத்தில் கணடு பிரமித்தேன. மகா கொடிய பாதகியாகிய நான் இவ் வீட்டில் கால் வைக்கவும் யோக்யதை யற்றவள் என்பதையும் என் பழய கதைகளையும் நினைத்து கண்ணீர் விட்டேன். தங்கள் தர்ம பத்தினியாரையும், குழந்தையையும் கண்டு பேரானந்தங் கொண்டேன். அத்தகைய புண்ணியவதியின் தரிசனத்தினால் என் மனம் பூரித்தது. என் கர்மாவின் பலனையும், செல்வச் செருக்கின் முடிவையும் பலதரம் நினைத்தேன். எனக்கு இவ்வுலகில் இருகக யோகயதையுமில்லை. மானமு மில்லை. மறற விவரம் முற்றும தாதா சொலலுவார். என் செருக்கால் நான அழிந்ததுபோல என் குடும்பமே அழிந்தது. தயாள மூர்த்தியாகிய தாங்கள் ஒருக்கால் என் பிழையை மன்னிக்க இசைந்தாலும் கடவுள் என்னை ஒருபோதும் மனனிக்கவே முடியாது. மகா சண்டாளி உலகிலிருந்து மறைந்த இன்றே ஓர் நன்னாளாகட்டும். இவ்வூர்க் கோடியிலுள்ள கிணற்றில் என்னுடல் நாளை மிதக்கும். நீலா"

நீலா கொடிய சர்ப்பம் போன்ற விஷப்பாண்டமாக இருந்த போதிலும் அவள் முடிவையும், அந்திய கதியையும் நினைந்து "ஹா! நீலா!........மாமீ!.......மாமா!........உங்கள் முடிவு இவ்விதமாகவா ஆயிற்று! அந்தோ! கடவுளே! அவர்கள் மூலம எனககு நீ அததகைய கொடுமையைக் காட்டியதாலன்றோ என்னில்லாமை ஏழைகளினிடையில் ஆனந்தமாய்க் கழியலாயிற்று..........நீலா............செல்வமெங்கே...........செருக்கெங்கே............எல்லாம் கிணற்றிலா அழிந்

தது!"..........என்று தன்னை யறியாது விசனித்தான். கண்களில் அருவிபோல நீர்த் தாரைகள் ஓடின. நளினாக்ஷியும் "என்னைப்போல வாழவேண்டிய உன் கதி இவ்விதமாகவா முடிந்தது.......பிச்சைக் காரியாக வந்தவள் நீயா!...........ஐயோ...........உன் முடிவைக் கேட்க மனம் பதறுகின்றதே!" என்று முத்து முத்தான கண்ணீர் கண்ணாடிபோன்ற அவள் கன்னத்தின் வழியாக உருண்டு, பூமிதேவி யைத் தாவியது. கிழவனும் கண் மழை பொழிந்தவாறு தம்பித்து விட்டான்.

தாய்தந்தையர்களின் விசனத்தை யறியாத ராஜசேகரன் தந்தைக்கு வந்த ரோஜா மாலைகளோடு விளையாடிக்கொண்டே தந்தை யருகில் சென்று அவனுக்கு வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்து "அப்பா! இந்தா பூமாலை.!' என்று ஆநந்தமாகக் கொடுத்து அவன் மடியிலமர்ந்தான்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

"நளினசேகரன்" முற்றிற்று.

ஓம் தத் ஸத்

உங்கள் மன மிரங்க வேண்டும்.

எனதன்பான சந்தா நேயர்களே!

சென்ற பத்திரிகையில் தெரிவித்தபடி இச் சஞ்சிகையில் கதையைப் பூர்த்தி செய்து அனுப்பி விட்டோம். வழக்கம்போல டிஸம்பர் மாதத்தச் சஞ்சிகை ஜனவரி முதலில் தங்கள் கர மலர்த் தாவி நிற்கும்.

தேசீய விஷயத்தில் நான் ஈடுபட்டிருப்பதால், சில சஞ்சிகைகள் இவ் வருடத்தில் குறித்த தேதிக்குச் சிறிது தாமதமாக உங்களுக்குச் சேர்ந்ததால் நீங்கள் என் மேலோ, பத்திரிகையின் மேலோ கோபித்துக் கொண்டிருக்கலாம். தாய் தந்தையர்கள் தமது மக்களை பள்ளிக் கூடத்திலிருந்து சரியான மணிக்கு எதிர்பார்த்து' அவர்கள் வாராமையினால் சீற்றங்கொண்டு பையன் வந்ததும் அவனை அடிப்பதற்குத் தயாராக அவர்கள் இருப்பார்கள். அவன் வந்தவுடனே முதலில் அவனை விறைத்துப் பார்த்து அடிப்பதற்கு யத்தனித்து "ஏனடா இத்தனை நேரம்?" என்று திட்டுகையில் பையன் பய பக்தியோடு "என் பெற்றோர்களே! நான் வீணாக பொழுது போக்கி விளையாடவில்லை. என் உபாத்தியாயருடன் அவர் வீட்டிற்கே சென்று சில முக்கியமான பாடங்களைக் கற்றுக் கொண்டு வந்தேன்" என்று சொன்னதைக் கேட்ட பெற்றோரின் மனத்தில் சீற்றமகன்று போன்பும் வாத்ஸல்யமும் பிறந்து விடுகின்றது. அது போல என்னருமைச் சந்தா நேயர்களாகிய நீங்களும், நான் அனாவசியமாய்க் கால தாமதம் செய்யவில்லை; முக்கியமான தேச விஷயத்தினால் தான் சிறிது தாமத மேற்பட்டது என்று என்னை மன்னித்து, உங்கள் குழந்தையாகிய மோகினியின் மீது உங்கள் மன மிரங்க வேண்டும். உங்கள் தயவு இருந்தாலன்றி இப் பெரிய காரியம் நன்கு நடைபெற மாட்டாது என்பது நீங்களறிந்த விஷயம். உங்களுடைய அன்பினாலும், பெரும் ஆதரவினாலும் நமது மோகினிச் செல்வி செழுமையாக வளர்ந்து, எட்டு ஆண்டுகளைக் கடந்து, ஒன்பதாவது ஆண்டு பிறக்கப் பெற்றாள். அக் குழந்தையின் போஷணைக்கான உங்கள் உதவியை வெகு ஆவலோடு எதிர் பார்க்கிறோம். உங்கள் இஷ்டமித்திர, பந்துக்களுடன் சொல்லி அவர்களையும் சந்தாதாரராகச் சேர்க்க வேண்டுகிறோம். உங்களுடைய மனம் இரங்க வேண்டியே மோகினியும் நானும் எதிர் பார்க்கிறோம்.

சென்ற 10-வது இதழில் தெரிவித்தபடி டிசம்பர் ௴ 20 தேதிக்குள் எல்லா சந்தா நேயர்களும் தமது சந்தாவையும், தமது சிநேகிதர்களின் சந்தாவையும் செலுத்தி, பரிசுப் போட்டியில் கலந்து கொள்வீர்களென்று நம்புகிறேன். புதிய சந்தா சேர்த்துக் கொடுப்பவர்கள் தங்களுக்கு வேண்டிய பரிசு புத்தகங்களைத் தெரிவிக்கவும்.

21136

நந்தவனம்.

நான் தேசீய விஷயமாகக் கிராமாந்திரங்களுக்குச் சென்று பிரசாரம் செய்த காலையில் அங்குள்ள பாமர மக்கள் "அம்மா! சிறிய புத்தகங்களை ஓரணா, இரண்டணாவில் போட்டுக் கொடுத்து எங்கள் அறிவை விருத்தி செய்யலாகாதா! பிரஸங்கம் கேட்பதோடு, புத்தகமும் படித்தால் நாங்கள் தேசீய விஷயத்தைச் சடுதியில் உணருவோமே" என்று கெஞ்சிக் கேட்டார்கள். அவ்வேழை ஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி சிறு கதைகளை வரைந்து நந்தவனம் என்கிற சஞ்சிகையில் மாதம் ஒரு மலர் வெளியிடத் தீர்மானித்திருக்கிறேன். கூடுமானால் மாதம் இருமுறை வெளியிடவும் தயாராக விருக்கிறேன். இதன் முதல் மலரில் மூன்று சிறு கதைகள் வெளி வந்துள்ளன. இனிமேல் ஒவ்வொரு மலரிலும் ஒரு பெரிய கதை அல்லது 2, 3 சிறு கதைகள் வெளியாகும். இதன் விலை ஏழைகளுக்காக ஒரு அணா தான் வைத்திருக்கிறது. மற்றபடி தனிச் சந்தா கிடையாது.

ஒரு புத்தகத்தைத் தபாலில் வரவழைத்துக் கொள்வதென்றால் அதற்காக 1½ அணா தபாற் செலவு ஏற்படும். இது சுண்டக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்றபடி யாகும். பொது ஜனங்களுக்கு அநாவசியமான செலவு ஏற்படக் கூடாதென்ற நோக்கத்துடன் நாம் ரூ. 1—4, முன்பண மனுப்புகிறவர்களுக்கு 20 புத்தகங்களை தபாற் செலவின்றி அனுப்புகிறோம். ஒரு ஊரில் இருபது பேர்களைச் சேர்த்து ஒருவர் வரவழைத்தால் பலருக்கும் நன்மையுண்டு என்பதைக் கவனிக்கவும்.

சிறிய புத்தகங்களைக் குறைந்த விலையில் வெளியிட்டு நமது பாமர மக்களின் தேச பக்தியை விருத்தி செய்ய வேண்டு மென்பதே நமது முக்கிய நோக்கமாதலால், பொது ஜனங்களெல்லோரும் நமக்குப் பேராதரவளித்து நம் நாட்டில் தேசீய உணர்ச்சியைப் பெருக்கச் செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன். படிக்கத் தெரிந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒரு புத்தகம் வாங்கி, படிக்கத் தெரியாதவர்களைக் கூட்டி வைத்து, படித்துக் காட்டினால் கூடிய சீக்கிரம் நம் தமிழ் நாட்டில் எல்லோரும் தேசீய உணர்ச்சியைப் பெற்று விடுவார்கள் என்பது திண்ணம்.

இங்ஙனம்
தங்கள் ஆதரவை எதிர்பார்க்கும்
வை. மு. கோதை நாயகி.

ஒவ்வொரு ஊரிலும் ஏஜன்டுகள் தேவை

வியாபாரிகளுக்கும், நமது ஏஜன்டுகளுக்கும் **நந்தவனம்** கீழ்க்கண்ட விலைக்குக் கொடுக்கப்படும்,—

100	காபிகள்	ரூ 4—0—0
500	,,	ரூ 17—8—0

முழு விலையையும் முன்னனுப்பி ரயில்வே ஸ்டேஷனின் பெயரையும் தெரிவித்தால் ரயிலி லனுப்புகிறோம். வி. பி. யில் அனுப்பமுடியாது.

"ஜகன்மோகினி" ஆபீஸ்.
26. தோடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

					"ஜகன் மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை		
வைதேகி (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
பத்மசுந்தரன் (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
ராதாமணி (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
சாருலோசனு (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
நவநீத கிருஷ்ணன்	2	0	0	....	1	12	0
ருக்மிணீ காந்தன்	2	0	0	....	1	12	0
சாமளநாதன்	2	0	0	....	1	12	0
சண்பக விஜயம்	1	12	0	....	1	8	0
கௌரீ முகுந்தன்	1	12	0	....	1	8	0
ஸாரமதி	1	12	0	....	....		
சுகந்தபுஷ்பம்	1	0	0	....	....		
கோபால ரத்னம்	0	14	0	....	....		
வீரவஸந்தா	0	8	0	....	....		
மாதவமணி	0	3	0	....	....		

ஒன்பதாவது ஆண்டு!

"ஜகன்மோகினி"

இம் மாதாந்த சஞ்சிகை ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய அற்புதமான நாவல்களையும், அநுபவ நீதி சாரங்களையும் தன்னகத்தே தாங்கிக்கொண்டுள்ளது. இதன் ஒன்பதாவது ஆண்டில் 1931ஆு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் வெளியாகும் நாவல் ஒரு வருடத்தில் டிம்மி சைஸில் ($8\frac{1}{2}'' \times 5\frac{1}{2}''$) சுமார் 600 பக்கங்கள் ஆகின்றது. அந்த வருடம் முடிந்ததும் தனி நாவல் (தபாற் செலவு தவிர) ரூ. 3-க்கு விற்கப்படும்; ஆகையால் "ஜகன் மோகினி"க்குச் சந்தாதாரராய்ச் சேர்ந்து விடுவதால் குறைந்தசந்தாவில் நிறைந்த பக்கங்களையுடைய நாவல்களை அடைவதுடன், மேற்படி நூலாசிரியர் எழுதிய இதர நாவல்களையும் இப்பக்கத்தில் கண்டுள்ள குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்பதைக் கவனிக்கவும்.

மாதிரிப் பிரதி இனம்!

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.